பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

மே 2024



## இழந்த பிறகும் கூட

### அவளும் ஓர் எஜமானி தான்

## உழைப்பாளர்களை

## உயர்த்துவோம்


வடிவமைப்பு சேவைகள்
கல்வி
பாடத்திட்டம்
கையேடுகள்
மீள் பதிப்பு
மொழிபெயர்ப்பு
சஞ்சிகைகள்
மலர்கள்
நூல்
மற்றும் தங்கள் விருப்பத்திற்கேற்ப தட்டச்சு மற்றும் வடிவமைப்பு வேலைகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளில் செய்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு..
+94 70 377 0731
designglitz123@gmail.com
DESIGN GLITZ

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
உதயம் 1972 – மே 2024

629

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு உதவி :

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச்
சாலை வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண்
+91 9952529619 ( கட்செவி)
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.



# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பான தமிழ்நெஞ்சங்களே வணக்கம்.

தமிழ்நெஞ்சம் இதழை துவங்கிய நேரத்தில் நிறைய யோசித்தேன்... தொடர்ந்து நடாத்திட இயலுமா என்ற பயம் நிறைந்திருந்தாலும்... பல இதழ்களில் பணிபுரிந்த அனுபவமும், பல தலைசிறந்த பத்திரிகை யாளர்களும் இத்துறையில் தோல்வியைக் கண்டிருக்கிறார்கள் என்பதை நன்கு அறிந்ததினாலேயே இந்த பயம் என்னில்... 60 ஆண்டு காலமாக தாளிதழ்கள் வெளிவரக்காரணமாக இருந்து அதன் வளர்ச்சிக்காக பயிற்சிகள் தந்து உழைத்திருக்கிறேன். அந்தவகையில் பல இதழாசிரியர்களை உருவாக்கி இருக்கிறேன். எல்லோரும் வெற்றிபெற்றார்களா என்றால் இல்லை என்றுதான் சொல்வேன்.

பத்திரிகை, சஞ்சிகை நடத்துவதென்பது சாதாரணமான காரியமல்ல என்பது பத்திரிகைய-ாளர்கள் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். அதில் உள்நுழைந்து செயல்பட்டால்தான் உண்மையை அறிந்துக்கொள்ள முடியும். எவ்வளவோ திறமையாக செயல்பட்டாலும் அதை தொடர்ந்து நடாத்திச்செல்ல பணபலமும், உழைப்பும் அவசியமாகிறது. முதல் இதழோடு நிறுத்தியவர்களும், மூன்று இதழ்களோடு வலுவிழந்தவர்களும், மூன்று ஆண்டுகளில் இத்துறையிலிருந்து மறைந்தவர்களும் அதிகம்.

நானும் பலநிலைகளில் வலுவிழந்திருக்கிறேன். முடித்துக்கொள்வோமென நினைத்திருக்கிறேன். இவ்வளவு காலமும் கஷ்ட, நஷ்டங்களுடன் தொடர்ந்திருக்கிறோம் என நினைக்கும்போது இன்னமும் கொண்டுபோவோம் என்ற மனநிலையில் பயணித்துவருகிறேன். ஓய்வென்பதே இல்லாமல் இதழுக்காக உழைக்கிறேன். புதிய எழுத்தாளர்களை உருவாக்கி அவர்களுக்கு உந்துசக்தியாக தொடர்கிறேன்.

வாழ்வில் பொருளாதாரத்துக்காக உழைத்து ஓய்வுபெற்றாலும், தமிழுக்கான எனது உழைப்பை நிறுத்த என்னால் முடியவில்லை. புதுப்புது இதழாளர்களுக்கு பயிற்சிதந்து அவர்கள் வலுவிழக்காமல் இருந்திட உதவியாளனாக இருந்து, எழுத்தாளர்களுக்கு பல வகைகளில் களமமைத்துத் தருகிறேன். நூல் கள் வடிவமைத்துத்தந்து புதிய நூலாசிரியர்களை உருவாக்கி வருவதை தமிழுலகம் அறியும்.

எனது உழைப்பை உலகறியும் மனம்நிறைவேன்.
உழைப்பாளர்கள் வாழ்க... உழைப்பின் மகிமை அறிக.
உழைப்பவனே உயர்ந்தவன் என்ற உண்மை அறிந்து வாழ்க!

என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்



# மனம் ஒரு பறவை

பறவைகளுக்கு இறக்கை வலிப்பதில்லை.
அதன் பறத்தலுக்கு,
தடைபோட யாருமில்லை.
அதன் பறத்தல் சுதந்திரமானது.

பறத்தலில் தேடலிருக்கும்.
இறக்கை வலித்தமர்ந்தும்,
இயற்கையின் அற்புதங்களை,
இலவசமாய் அனுபவிக்கும்.

கடந்து வந்த காட்சிகளை,
எண்ணியெண்ணி இரசித்தபடி,
பறத்தலுக்கான
திசைகளை நிர்ணயிக்கும்.

எதை அலட்சியம் செய்வது,
எதனை நினைவில் வைப்பது,
என்பதெல்லாம்
அதுவே தீர்மானிக்கும்.
குறுக்கீடுகளிருந்தால்,
இறக்கை சோர்ந்தமரும்.
பறத்தலில் உயிர்ப்பிருக்காது.

அதன் பறத்தலைத் தீர்மானிக்க,
எந்த சக்திகளுமில்லை.
அந்நியத் தாக்குதல்கள் மட்டுமே,
பறவைகளை
சோர்வடையச் செய்கின்றன.

என் மனப் பறவைக்கும்,
அஃதொன்றும் விதிவிலக்கல்ல.
கொறிக்க நல்ல,
புத்தகங்களிருந்தால்,
அதற்கு பசியெடுப்பதேயில்லை.

சம்மாந்துறை மஷ்றா.
இலங்கை.

Dr.ஃபஜிலா ஆசாத்
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

# தோல்வி அல்ல...



- Dr.Fajila Azad, International lifecoach

தோல்வி இந்த வார்த்தையை கேட்கும் போது உங்களுக்குள் என்ன செய்கிறது. தோல்வி இந்த ஒற்றை வார்த்தைக்கு மிரளாதவர்களே இல்லை எனலாம்.

ஏழை பணக்காரர், படித்தவர் படிக்காதவர் ஆண் பெண் என்று எந்த பாகுபாடின்றி எத்தனை முயற்சிக்கு இடையிலும் தோல்வியை சந்திக்காதவர்களே இருக்க முடியாது.

வளர்ந்து வரும் நாடுகள் என்றில்லை வளர்ந்த நாடான இத்தாலியிலும் தோல்வி ஒரு சங்கடமாக அவமானகரமான ஒன்றாக, **taboo** வாக தவிர்க்க வேண்டிய **topic** காகவே பார்க்கப் படுகிறது. தோல் வியை இத்தாலியில் 'புரூத் ஆஃப் ஹிபோரா' அதாவது உங்கள் முகத்தை தொலைக்க செய்து விடும் தவறான ஒன்று என்றே ஒதுங்குவார்கள். அதே சமயம் அமெரிக்காவில் தோல்வியை ஒரு அனுபவமாக, வெற்றியின் முதல் படியாக எடுத்துக் கொள்வார்கள் ம

தோல்வியை அவமானமான ஒன்றாக கருதுவதால்தான் தோற்றுவிடுவோம் என்ற பயத்தில் புது முயற்சியை எடுக்க பலரும் தயங்குகிறார்கள். தவிர ஏதாவது சிறு தோல்வி ஏற்பட்டால் கூட ஏற்க முடியாமல் துவண்டு போகிறார்கள். தான் எதற்கும் தகுதியானவன் இல் லை என கூனிக் குறுகிப் போகிறார்கள். வெற்றி என்பது இனி எப்போதும் தனக்கு சாத்தியமில்லாத ஒன்று என நினைத்து மிரண்டு போகிறார்கள்.

உண்மையில் தோல்வி என்பது வெற்றியின் முடிவல்ல. தோல்வி என்பது அந்த முயற்சியின் முடிவு மட்டுமே. அந்த அனுபவத்தை சரியான முறையில் எடுத்துக் கொண்டால் நிச்சயம் அடுத்த முயற்சி உங்களுக்கு நீங்கள் எதிர்பார்த்ததை விட மிகச் சிறந்த வெற்றியைக் கொடுக்கும்.

பொதுவாக ஒரு தோல்வி வந்தவுடன் ஒருவருக்குள் எழும் எண்ணம் இத்தனை முயற்சி எடுத்தோமே இப்படியெல்லாம் சிரமப்பட்டோமே, இவ்வளவு தூரம் வந்து விட்டு கடைசியில் தோற்றுப் போய் விட்டோமே எனும் தாழ்வு மனப்பான்மையே. அதையே வேறு கோணத்தில், எத்தனை முயற்சி உங்களால் எடுக்க முடிந்திருக்கிறது எவ்வளவு தாக்கு பிடித்திருக்கிறீர்கள், எத்தனை பேர்



இதற்கு பக்க பலமாக இருந்திருக்கிறார்கள் என்று சிந்திது பாருங்கள்.அது பல கதவுகளை உங்களுக்கு திறக்க செய்யும்.

பொதுவாக, ஒரு விளைவை எதிர் பார்த்தே பல நிலைகளில் வேலைகள் செய்யப் பட்டாலும், இறுதி முடிவு நீங்கள் நினைத்த விளைவைத் தராத போது உங்கள் அத்தனை முயற்சிகளையும் அந்த முடிவை வைத்தே தோல்வியாகப் பார்க்கிறீர்கள். அதற்குப் பதிலாக அந்த முடிவை நோக்கிய, ஒவ்வொரு நிலையில் நீங்கள் செய்த முயற்சியையும் தனித் தனியாகப் பாருங்கள். உங்கள் எத்தனை முயற்சிகள் வெற்றி அடைந்திருக்கின்றன என்பது உங்களுக்கு புரியும்.

உங்கள் எல்லா முயற்சியும் தோல்வி அடையவில்லை என்பது புரியும் போது உங்களால் சாதிக்க முடியும் எனும் திடம் வரும். இப்போது எது மட்டும் வெற்றி அடையவில்லை என பிரித்துப் பார்த்து அதை சரி செய்யலாம் அல்லது அது வரை கிடைத்த அனுபவத்தை வைத்து வேறு ஒன்றில் தொடரலாம் என்கின்ற நம்பிக்கை எழும்.



உதாரணமாக நீங்கள் ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிறீர்கள் உங்கள் அத்தனை திறமைகளையும் அதில் போட்டு அல்லும் பகலும் உழைக்கிறீர்கள் ஆனால் ஒரு நாள் ஆட்குறைப்பு செய்யவேண்டிய சூழலில் உங்களை வேலை நீக்கம் செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு எப்படி இருக்கும்?

நிச்சயமாக உங்கள் மனம் சுருண்டு போகும். வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள் என்பதை, உங்களுடைய இத்தனை நாளுக்கான **result** ஆக எடுத்துக் கொண்டு உங்களுடைய அத்தனை உழைப்பும் வீணாகிப் போய் விட்டதாகவும், தோற்றுப் போய்விட்டீர்கள் என்றும் உங்கள் மனம் உங்களுக்கு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும். வாழ்நாள் எல்லாம் உழைத்தது வீணாகிப் போய் விட்டதாகவும் இனி எப்படி மீள முடியும் என்பதாகவும் ஒரு இயலாமை உள்ளுக்குள் எழும். உங்கள் வாழ்க்கையே ஒரு தோல்வி என உங்கள் மனம் உங்களை சுழற்றிப் போடும்.

இதையே சொந்த வியாபாரமாகட்டும், உறவுகளாகட்டும், எதிலும் பொருத்திப் பாருங்கள்.

மீண்டு எழுந்து உழைத்தாலும் அது எத்தனை நாளைக்கு இருக்கக் கூடும், எதுவும் நிரந்தரமில்லை, இனி உழைத்து என்ன செய்ய என்ற கேள்வியை எழுப்பி உங்கள் மனமே உங்களை எழ விடாமல் செய்யும்.

அதே நேரம் கொஞ்சம் சிந்தித்து பார்த்தால், நீங்கள் எத்தனை நாட்கள் அந்த வேலையால் சந்தோஷித்திருக்கிறீர்கள்,

உங்கள் நேரம் எவ்வளவு பயனுள்ளதாகச் சென்றிருக்கிறது, அந்த காலகட்டத்தில் உங்கள் எத்தனை தேவைகள் பூர்த்தி ஆகி உள்ளது, உங்களுக்கு எவ்வளவு சிறந்த அனுபவங்கள் கிடைத்துள்ளது என்பது உங்களுக்கே புரியும். கடந்து சென்ற காலம் எல்லாமும் வீண் அல்ல என்பதும் உங்களுக்குப் புரியும். நீங்கள் எதிர்பாராத ஒன்று இடையில் அங்கு நடந்துள்ளது. அது வரை உங்கள் வாழ்க்கை வெற்றிகரமா கவும் மகிழ்ச்சியாகவும் தான் இருந்தது. இந்த ஒரு தோல்விக்கு உங்கள் அத்தனை நிகழ்வுக-ளையும் இரையாக்கி விடாதீர்கள்.

இதில் கிடைத்த அனுபவங்கள் இனி இந்த மேடையை விட்டும் வேறு ஒரு மேடையில் தொடர நல்ல ஒரு வாய்ப்பை தரக் கூடும். ஒன்றின் முடிவு அதை விடச் சிறந்த நிகழ்வுக்கான அழைப்பிதழாக இருக்கக் கூடும். எப்படி ஒரு விமானம் பறக்கக் கூடிய ரன்வேயின் முடிவு அந்த விமானம் பறப்பதற்கான ஆரம்ப நிலையாக இருக்கிறதோ அதுமாதிரி என்பதை உணர்ந்து கொண்டீர்களானால் எந்த சூழலிலும் தளராமல் தன்னம்பிக்கையோடு இருப்பீர்கள்.

உண்மையில் தோல்வியை விட தோல்வியால் வரக் கூடிய விளைவுக-ளைப் பற்றிய பயமும் அதை ஏற்றுக் கொள்ள முடியாத மனநிலையுமே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி ஒருவரை செயலாற்ற விடாமல் செய்கிறது. தோல்வி என்பது வெற்றியின் முடிவல்ல. தோல்வியுற்ற அந்த ஒரு முயற்சியின் முடிவு மட்டுமே.

அந்த முயற்சியின் முடிவை அதை விட சிறந்த விளைவை தரக் கூடிய அடுத்த முயற்சியின் ஆரம்பமாக நீங்கள் நினைத்தால் மாற்றி விட முடியும்.

பொதுவாக மனித மனம், ஏதேனும் ஒன்று தவறாகப் போனால் யாரோ ஒருவர் மேல் பழி போடத் தேடும். அந்த யாரோ ஒருவர் மாற வேண்டும் என நினைக்கும் போது நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றம் ஒரு கனவாக நடைமுறையில் சாத்திய மற்ற ஒன்றாக நின்று போய் விடுகிறது. அதனால் எந்த ஒரு தோல்விக்கும் துவண்டு போகாமல், குற்ற உணர்ச்சிக்கு ஆட்படாமல், சரியான முறையில், அடுத்த முயற்சியில் மாற்றிக் கொள்ள வேண்டும் எனும் தெளிவோடு சுயமாக அதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக் கொண்டால், உங்களால் வேண்டிய மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு தோல்வியை வெற்றியாக மாற்ற முடியும்.

பெரும்பாலான தோல்விகள் மற்ற வர்கள் என்ன நினைப்பார்களோ என்ற தவிப்பிலேயே பெரும் பாரத்தை மனதில் ஏற்றி விட்டுச் செல்கிறது. தான் தோல்வி அடைந்து விட்டதாக தவிக்கக் கூடிய ஒருவருக்கு தன்னைச் சுற்றி இருப்பவர்கள், தன்னை விட திறமை அற்றவர்கள், எல்லோரும் வெற்றி பெறுவதாகவும், தான் மட்டும் எப்போதும் தோல்வி அடைவதாகவும் தோன்றும். Failure is an Event 'தோல்வி என்பது ஒரு நிகழ்வுதான்' அது முடிவல்ல என்பதை உள்வாங்கிக் கொண்டீர்கள் என்றால் மிக எளிதாக அந்த நிகழ்வைக் கடந்து வந்து விடுவீர்கள்.

உலகில் யாருக்குமே எல்லாமும் வெற்றி அடைந்து விடுவதில்லை. தோல்வி என்பது யாராலும் தவிர்க்க முடியாதது. அதை ஒவ்வொருவரும் எப்படி கையாள்கிறார்கள் என்பதிலேயே வெற்றியின் இரகசியம் இருக்கிறது. அதை புரிந்து கொள்ளும் மனதில் மகிழ்ச்சி நிலைக்கிறது.

■

தன் முனைச்சாரல்

## இன்று

தற்போது நான் அமெரிக்காவில் என் மகன் வீட்டில் இருக்கிறேன். ஆறுமாத காலம் தங்குவுதாகத் திட்டம்.

நான் இருக்கும் ஊர் பாய்ஸி. ஐடஹோ மாநிலத்தின் தலைநகர். நான்கு பக்கத்திலும் மலைகளால் சூழப்பட்டு பெய்குழல்போல் அமைப்பில் நடுவே பெரும் கிண்ணம் போல் சற்றே மேடும் பள்ளுமுமான ஒரு பள்ளத்தாக்கு.

3000 ஆண்டுகளுக்கும் முன் இந்த மாநகர் மிகப் பெரும் பனிப்பாறை யாகத்தான் இருந்ததாம். இங்கிருக்கும் பாய்ஸிஆறு பனிக்கட்டி ஆறு. அதுதான் இந்த நகருக்கு குடிநீர் தரும் புனல். ஆங்காங்கே பறவைகளின் சரணாலயம்.

சின்னஞ்சிறு காடுகள் இங்கும் அங்கு மாக. ஆங்காங்கே நீர் சுனைகள். வீடுகளின் உயரம்கூட ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட உள்ளது..இயற்கையை பேணிக் காப்பதில் மெத்த கவனமும் முயற்சியும். இது கலிபோர்னியா, சிகாகோ, பாஸ்டன் போன்று பெருநகரம் இல்லை. ஆயினும் இயற்கையுடன் இயன்றவரை ஒட்டி வாழ அறிந்த மக்கள் வாழும் இடம். தம் நகரத்தை நரகமாக்காமல் மக்கள் பாதுகாத்து வருகின்றனர்.

பாய்ஸி ஆற்றை பாய்ஸியின் குருதி மண்டலம் என அறிந்து, இந்த ஆற்றை செம்மையாக பாதுகாத்து மண வளம் நீர் வளம் போற்றுகின்றனர்

இயற்கையைச் சீரமைக்க
ஏலாது நமக்கு
கலந்து இருக்க
பயிற்சி எடு

*சசிகலா விஸ்வநாதன்*

## கற்பு

தீயாய் எரிகிறது பசி
தாளாது துடிக்கும் சிறுவன்
பேரம் படிந்து விளக்கணைப்பாள்
உயிரின் வலி
உணர்ந்த தாய்.

அணைதலை தவிர்த்து
சென்றவனின் அன்பு
அழியாது கிடக்கும் அடிமனதில்.

கற்பென்பது வெறும் மனசுதான்.

## வறுமை

பள்ளி செல்லும் - என்
பாலகனுக்கு
பாதுகை வாங்க வேண்டும்.

படுக்கையறையில் முறையிட்ட
என்னவளுக்கு - உள்
பாவாடை வாங்க வேண்டும்.

பழைய சேலைகளை
பழகிப் போன என்னம்மாவுக்கு
புதுக் கோடி வாங்க வேண்டும்.

ஆனால்,
காகிதமாக தேய்ந்து போன - என்
கால் செருப்பில்,
என்றைக்கோ தைத்திருந்த முள்ளும் -
என்னைப் போல் மழுங்கிப் போனது!

எஸ்.மைக்கேல் ஜீவநேசன்
தேனி.

# இழந்த பிறகும் கூட

**முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி,**
புதுச்சேரி



சூரியன் மெல்ல எழுந்து நடனமாடிக் கொண்டிருந்தவேளை, அமுதவல்லி வீட்டுக்கு முன்னாடி ஒரு சின்ன தோட்டம். தரை எங்கும் வளர்ந்த பசும்புற்கள், அதன் மீது பனித்துளிகள், அங்கே மூன்று நாற்காலிகள், ஒரு டீப்பாய் எனப் புல் தரையில் போடப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு நாற்காலியில் அவள் அமர்ந்திருந்தாள்.

'மா... கவினாம்மா... டீ எடுத்துட்டு வாம்மா' கொஞ்சம் சப்தமாகக் கேட்டாள்.

'தோ.. வரேமா' கிச்சனிலிருந்து கவினா குரல் கொடுத்துக் கொண்டே டீயைக் கொண்டு வந்து டீப்பாவின் மீது வைத்தாள். பிறகு காலை சமையல் வேலை செய்ய வீட்டுக்குள் சென்று விட்டாள்.

டீ கப்பை எடுத்து நுனிவாயில் வைத்தவளுக்கு நாக்கு சுட்டு விட்டது. கொஞ்சம் ஆறட்டும் என்று டீ கப்பை டீப்பாயில் வைத்து விட்டாள். டீயைக் கண்டதும் அவளுக்குப் பாலா வின் நினைவு தான் வந்தது.

திருமணமான புதிதில் ஞாயிற்றுக் கிழமைகளில் நெடு நேரம் தூங்கி எழுந்து, டீ போட்டு மாடியில் எடுத்துக் கொண்டு போய் விடுவர். மாடியில் வேப்பமரத்தின் நிழல் தளர்ந்து போய் இருக்கும். சூரியன் வந்தாலும் சூடு

தெரியாது. கணவரோடு பேசி சிரித்து மகிழ்ந்து, பொறுமையாக டீ குடிப்பது வழக்கமாக இருந்தது. அந்த வழக்கமும் இன்றில்லை. பாலாவும் இன்று இல்லை என ஏங்கியவள் பெருமூச்சு விட்டாள்..

பாலாவின் உறைந்து கிடந்த நினைவு கள் உருகி வழிய ஆரம்பித்தன. உண்மை யிலேயே அவன் நல்ல கணவன் தான். அன்பை அனுசரணையை அளவுக்கு அதிகமாகக் கொட்டியவன்தான். அதை விட குழந்தைகளை நேசிக்கிற தகப்ப னாகவும் இருந்தான். ஆனால் ஒரு விசத்தில் மட்டும் பொய்க்காரனாக இருந்து விட்டானே என்பதைத்தான் அவளால் மறக்கமுடியாமல் இருந்தது. டீயின் சூடு ஆறவில்லை. பாலாவுடன் வாழ்ந்த ஆறாத அந்த நினைவுகளை அசைப் போட்டாள்.

அப்போது பாலா அவள் எதிர் சேரில் வந்து உட்காருவதாக உணர்ந்தாள். பாலா அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

' நலமா இருக்கியா அமுது'

'நலமா? நானா? ம்.. இருக்கேன்' பெரு மூச்சுடன் கூறினாள்.

'நான் தப்புப் பண்ணிட்டேன் அமுது, என்னை மன்னிச்சிடு'

' கண்கெட்ட பிறகு சூரியநமஸ்காரமா பாலா, சரி நான் இப்ப நான் எந்த மன நிலையில் இருக்கிறேன் என்பது உனக்குத் தெரிகிறதா? எத்தனை கஷ்டங்கள் அவ மானங்கள்! அதையெலாம் தாண்டி வந்துட் டேன். இருந்தாலும் நான் அனுபவிக்காத அந்த வாழ்வு எனக்குத் திரும்ப கிடைக்குமா? அது தரும் துயரத்திலிருந்து விடுபட முடியலையே பாலா'

'புரியுது. ஆனா...?'

'அப்ப நான் நம்ம வீட்ல கல்யாணம் பண்ணி வந்த புதுசுல, சின்னசின்ன சந்தோசங்களைக் கொட்டிக் கொட்டி கொடுத்தியே. ஞாபகமிருக்கா' இருக்கு எனத் தலையாட்டி, அமுதுவை உற்று நோக்கினான். இருவரின் நினைவுகளும் முன்னோக்கி கடந்த காலத்தை இழுத்துச் சென்றன.

'அமுது, இங்க வாயேன்.. சீக்கிரம் வாயேன்..' சமையல் கட்டில் இருந்தவளை அறைக்குள் அவசர அவசரமாக அழைத் தான் பாலா.

'இப்பதான் பாயசம் பண்ணிக்கிட்டு இருக்கேன். வட வேற சுடனும், லேட் ஆகுது. பிறகு வரேன்'

' அது கிடக்கட்டும். வா.. சீக்கிரமா' கணவன் துரிதப்படுத்தவே அடுப்பை நிறுத்திவிட்டு கையைக் கழுவி விட்டு முந்தானையில் கையைத் துடைத்தபடி அறைக்கதவைத் திறந்தவளுக்கு ஆச்சர்யம்.

' ஹாப்பி பர்த்டே டூ யூ' என்று மகளும் கணவனுமாய் வரவேற்றதில் அளவு கடந்த சந்தோஷத்தில் ஆகாயத்தில் பறந்தாள். அவள் கண்கள் விரிய, அருமையான முத்தத்தை இருவரும் இரண்டு கன்னத்தில் தர, பாலா ஒரு கவரை எடுத்து நீட்டினான் . அதை வாங்கி ஆவலுடன் பிரித்துப் பார்த்தாள். அவளுக்குப் பிடித்த சிவப்பு கலர்பட்டுச்சேலை. இன்னும் அவளுடைய சந்தோசம் நூறு டிகிரியைத் தொட்டது. பாயசத்தை மறந்தவளாக பட்டுப் புடவை பிரித்து, அதன் அழகை ரசித்தாள்.

'ரசித்தது போதும்மா. போய் வடை பாயாசம் செஞ்சு சீக்கிரம் கொடும்மா, பசிக்குது' கெஞ்சிய மகளைச் செல்லமாய் கிள்ளிவிட்டு சமையல் அறைக்குள் சென்று ஆக வேண்டியதைப் பார்த்தாள்.



## பெண்ணியம் செல்வக்குமாரி

அப்போதெல்லாம் மாலை நேரம் ஆகியவுடன் அடிக்கடி எங்கேயாவது பீச் சினிமா என ரொம்ப சந்தோஷத்தோட கிளம்பி போவார்கள். அங்கேயே ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு, வீடு வந்து சேர 12 மணி கூட ஆகிவிடும். இப்படி ஒரு கலையாக மகிழ்ந்து இருந்த குடும்பம் தான் இரண்டாவதாக மகன் விக்கி பிறந்த போது துயரத்தை அனுபவிக்கத் தொடங்கியது.

இரண்டாவது மகன் பிறந்த போது பாலாவுக்கு ஆக்சிடென்ட் ஆகிவிட்டது. நடக்க முடியாமல் ஆறு மாதம் கிடந்தான். குழந்தையும் பிறந்து, ஆறு மாதம் நடக்க முடியாமல் இருந்து குடும்பத்தில் தானும் வேலைக்குச் செல்ல இயலாதநிலையில் குடும்பத்தில் சொல்ல முடியாத கஷ்டம். கால் ச00ரியான பிறகு வேறு வேலைக்குப் போக ஆரம்பித்தான். அங்கிருந்துதான் பாலாவுக்குச் சனியன் பிடித்தது.

புதிய நண்பர்கள் கிடைத்தனர். அவர்களோடு சென்று குடிக்க ஆரம்பித்தவன், நாளடைவில் குடிகாரனாகவே ஆகிவிட்டான். சினிமா, பீச் என்பதையே மறந்து போனான். ஒவ்வொரு மாலை நேரத்திலும் ஏதாவது சாக்கு சொல்லிவிட்டு வெளியே போவது, இரவு 10 மணிக்கு மேல் வருவதென ஆகிவிட்டது. அந்த நிலையில் , அவள் இரு குழந்தைகளோடு பசிபட்டினி என நரக வேதனையை அனுபவித்தாள்.

ஒரு நாள் 11 மணி இருக்கும், வீட்டிற்குள் வந்தவன் மிகுந்த குடியோடு தள்ளாடித்தள்ளாடி வந்தான். தோசைக்குச் சட்னி வேண்டாம் என்று பக்கத்து வீட்டில் மீன் குழம்பு வேண்டுமென அடம்பிடித்து வாங்கி வரச் சொல்லிச் சாப்பிட்டான்.

ஒருநாள் இரவு ஜாமம் இருக்கும் குழந்தைகளோடு உறங்கிக் கொண்டிருந்த அமுதவல்லியை ‘அமுது அமுது எழுந்து வா‘ என்று மிக மெதுவாக அழைத்து, பின்பக்கத்து அறைக்கு வரச் சொன்னான். ஓர் ஆவலில் அவள் அங்கே சென்றாள். அவன் அவளோடு உறவு கொள்ள முயன்றபோது , அவளை அறியாமலேயே அவனைத் தள்ளி விட்டுவிட்டாள். கீழே தடுமாறி விழுந்துவிட்டான். காரணம் குடியின் நாற்றத்தை அவளால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. அவன் முத்தமிடும்போது, அந்த நாற்றம் நாசிக்குள் சென்று குடலைப் பிடுங்கியது. விழுந்தவனைத் தூக்கி அவனை அங்கேயே விட்டு விட்டு குழந்தைகளோடு அவள் போய்ப் படுத்துக் கொண்டாள்..

எந்தப் பொழுதும் அவனால் குடிக்காமல் இருக்கவும் முடியவில்லை. அதனால் அவளைத் தொடவும் முடியவில்லை. அவளால் செக்ஸை ஒருபோதும் அனுபவிக்க முடியவில்லை.

குடும்ப வாழ்வில் மனைவிக்கு, மகளுக்கு, மகனுக்குத் தேவையானதைச் செய்து கொடுக்க முடியாமல் குடிதான் தன் வாழ்வானது என்றவனை எப்படித்தான் திருத்துவது? போராடித் தோற்று ஒரு முடிவெடுத்தாள்.

இனி இவனை நம்பி சீரழிவது தான்

மட்டுமிருந்தால் தேவலை. தங்களோடு குழந்தைகளும் சீரழியக்கூடாதென வேலைக்குப் போனாள். வளர்ந்து வரும் குழந்தைகளைச் சரியாக கவனிக்க முடியாமல் வேலை வேலையென்று ஓடினாள். வேலைக்குப் போகும் பெண் களுக்கு ஞாயிறு ஓய்வுநாள் கெடையாது, அன்றுதான் கூடுதல் வேலைகளைச் செய்யும் நாள்.

ஒரு நாள் ஞாயிறு மதிய வேளையில் குடித்துவிட்டு வந்திருந்தவன் எதை எதையோ உளறிக் கொட்டிக் கொண்டி ருந்தான். சந்தேகம் வந்துவிட்டது போலும். அதைக் கேட்ட அவளால் அழுகையைக் கட்டுப்படுத்த இயலவில்லை. மாடிக்குச் சென்று மொட்டை வெயிலில் நின்று தேம்பித் தேம்பி அழுதாள். அவள் அழுவதைக் கேட்டு, அவன் மேலே வந்தான் குடி வாடையோடு. வந்தவன் அவள் காலில் விழுந்தான். ‘அமுது, தப்பா ஏதும் சொல்லலை. என்னை விட்டு விலகி இருப்பதைப் பொறுத்துக்க முடியலடி. அதான் நான் பேசினேன். இனிக் குடிக்க மாட்டேன். என்னை நம்பு‘ என்றான்.

‘இதை இதுவரை ஆயிரம் தடவை சொல்லிட்டீங்க. இன்னும் நம்ப சொல் றீங்க? ‘ மறுபடியும் அழுதாள்.

‘என்னை நம்பு அமுது‘ சத்தியம் செய்து அவளைத் தொட முயன்றான். முடிந்ததா? முடியவில்லை. அவனை இந்தக் குடியோடு ஏற்க அவள் மனம் ஒப்பவில்லை. அவனோடு கூடிய உடலு றவை நிராகரித்தாள்.

வேலையில் இருந்த ஒரு பொழுதில் இடிபோல ஒரு செய்தி வந்தது. பாலாவை ஆசுபத்திரியில் சேர்த்திருக்கிறார்கள் என்ற தகவல் நண்பர் மூலமாக வந்தது.

அதை பாலாவிடம் சொல்லத் தொடங்கினாள்.

‘நீ குடியை விட்டுத் திருந்தாம போயிட்டியே என்ற வேதனை இன்னமும் வாட்டுது பாலா. நீ ரத்த வாந்தி எடுத்து ஹாஸ்பிடல் இருந்தியே, உனக்கு ஞாபகம் இருக்கா?‘

‘ஆமா நீ ஹாஸ்பிடல்ல வந்து பார்த்த போது எனக்கு ஞாபகம் இருந்தது. ஆனா அதற்கு அடுத்த நாளே சுயநினைவை இழந்துட்டேனே...‘

‘ஆமா, அட்மிட் ஆன அடுத்த நாளே நீ உணர்வு இழந்துட்ட, வாயால மூச்சு விட்ட, நாங்க மூணு பேரும் கதி கலங்கி நின்றோம். அப்ப சிஸ்டர் வந்து என்ன சொன்னாங்க தெரியுமா? உன் கூட யாராச்சும் இரவு ஆம்பளைங்க தங்கனும்னு சொன்னாங்க. நான் எந்த ஆம்பளைய போய்த் தேடுவேன்?. சொல்லு நமக்குன்னு யார் இருந்தா அப்ப? நான் உறவுன்னு சொல்லி கூப்பிட யாரிருக்கா? உங்க உறவுகள் உரிமை கொண்டாட என் சாதியில்ல முன்னாடி வந்து நின்னுச்சி. உங்க சொந்தம் என்னைத் தீண்டத் தகாதவளாத்தானே பாத்திச்சி.

உன் அண்ணன் மகன்கள் எட்டிக் கூட பாக்கலயே. அவங்கள எப்படி கூப்பிடுவேன்? சொல்லு, இரவு முழுக்க அந்தப் பனியில மூன்று பேரும் கெடந்தோமே. ஒருவாரமா ஆஸ்பத்திரியே கதியாக . இரவு கண்ணு முழுச்சதால நம்ம பையனுக்கு ஜுரம் வந்துட்டு நடுக்கம் எடுத்துகிச்சு. யாரை கவனிப்பேன் சொல்லு?‘

‘ கேட்கவே கஷ்டமாயிருக்கு. இவ்ளோ தொல்லைக் கொடுத்திட்டேனா?‘

‘அதுக்குப் பிறகு நடந்த காரிய மிருக்கே. ஐயோ... எத்தனை கஷ்டங்கள்.. உறவுகளோட நக்கலான பேச்சுகள், சகிச்சிக்க முடியாத சடங்குமுறைகள், மத்தளத்துக்கு இருபக்கம் அடிபோல உன் இறப்பு நிகழ்வு இருந்திச்சி பாலா. எப்படியோ கடந்து வந்துட்டேன். ஆனா நாம நம்ம காதலை நாம விடாம இருந்திருக்கலாமோ?‘

‘உன்மேல எனக்கு ரொம்ப காதல்டி. அதை நீ மறந்துட்டே. என்னை ஒரு குடிகாரனாவே பார்த்து கடைசி வரைக்கும் உதாசீனப்படுத்திட்டே. அது பொறுக்கா மல் தான் நான் திரும்பத் திரும்ப குடிக்க ஆரம்பிச்சேன். உன்னை விட்டு நான் எங்க போய் தேடுவேன் சொல்லு?‘

‘உண்மைதான் பாலா. உன்மேல எனக்கும் அளவுகடந்த காதல் இருந்திச்சி. ஆனா அந்தக் குடி நாத்தம், சிகரெட் நாத்தம் என் காமத்தைத் தலைகீழா புரட்டி போட்டுட்டது உனக்குத் தெரியுமா? உன்னோட எத்தனை ஆசை

ஆசையா இருந்திருக்கேன். நாம ரெண்டு பேரும் எத்தனை இரவுகளை முழுக்க அனுபவச்சிருப்போம்.

உன் குடியால எனக்கு மனம் கூடாமலே போச்சே. உன் கண்கள் என்கிட்ட கெஞ்சிட்டு இருக்கும். என் மனசுல ஒரு தடைய நான் போட்டுகிட்டேன். ஏன் தெரியுமா? நீ திருந்துவன்னு. எத்தனையோ நாள் எதிர்பார்ப்போட இருந்திருக்கேன் பாலா‘

‘குடி நம்ம காதலையும் அழிச்சி, என்னையும் அழிச்சிட்டது. உன் சம்ம தம் இல்லாமல் உன்னைத் தொடக் கூடாதுன்னு..‘ அழுதான். இவளும் அழுதாள்.

‘சரி விடு, இப்போதாவது குழந் தைங்களோட சந்தோசமாயிரு‘

‘நீ என்னதான் எனக்கு ஆறுதல் சொன்னாலும், உன்னை நான் இப்படி சாக விட்டு இருக்கக் கூடாது ? வேற ஏதாவது செஞ்சு நான் உன்னைப் பொழைக்க வச்சிருக்கணும். நல்ல டாக்டரைப் பார்த்திருக்கணும். நல்ல கிளினிக்கில் கொண்டு போய் நான் உன்னை கவனிச்சிருக்கணும். அந்தக் குற்றவுணர்வு இருக்கு பாலா. ஆனா நம்ம நடுத்தர குடும்பத்து வாழ்க்கையில இதெல்லாம் சாத்தியமா ? சொல்லு‘.

பாலா மௌனமாகப் பார்த்தான்

‘இன்னமும் உன்கிட்ட கேட்க ஒரு கேள்விதா மிச்சமிருக்கு பாலா. இந்தக் குடி எந்த விதத்தில் என்னையும் நம் காதலையும் விடபெரிசா போயிடுச்சி? இந்தச் சந்தேகந்தான் என் வாழ்நாள் முழுக்க இருந்துகிட்டே இருக்கு, பதில் சொல் பாலா‘ கோபத்துடன் எழுந்து அவன் சட்டைப் பிடித்துக் கேள்வி கேட்பதுபோல் பாவனை செய்தாள். அவன் பதில் சொல்ல முடியாமல் கண்கலங்கினான்.

பின்னர் ‘நீ இன்னொரு திருமணம் செய்து கொண்டு மறுபடி வாழ் அமுது‘ என்றான்.

‘அதை நீ சொல்லக்கூடாது பாலா. அது முற்ற முழுக்க நான் எடுக்க வேண்டிய முடிவு‘ என வெகுண்டெழுந்தாள்.

திரும்பிப் பார்த்தாள். பிறகு சிரித்துக் கொண்டே சேரில அமர்ந்து கப்பைக் கையில் எடுத்தாள்.

காபி ஆறிப் போயிருந்தது.

## பசுமையைப் பாதுகாப்போம்

நாளும் மெலியும் நாட்டினில் பசுமை
கோளும் எரியும் கோடை வெய்யிலில்
உயிராம் காற்றும் உணவாம் நீரிலாப்
பயிரும் வாடும் பலமிலா வேருடன்
வானத் தாயின் வல்லமை ஓசான்
மானத் தைத்தான் மண்ணிலே உரித்திட
புறவூதா தீயது புலம்பெயர்க் காட்சி
நிறமிலா நிலையினில் நிலமும் எரியும்
பச்சைத் துணியிலாப் பால்நிற விதவை:
இச்சை தணித்திடுமா இந்தக் காகிதம்
மரத்தை அறுத்து மாளிகை விடுதியாம்
வரத்தைத் தருமா வானிலே மாமழை
காசின் தணப்பில் காற்றின் துரோகிகள்
வீசும் அனலில் வியர்க்கும் வறியவர்
ஓயா துழைக்கும் ஓங்கிய மரங்களை
ஓயா தழிக்கும் ஓட்டை மனிதனால்
சாபமும் கொண்டு சாயும் காடுகள்
கோபமும் கொண்டு குதறும் சுனாமி
பிழையும் செய்தாய்ப் பிழைமிகு மனிதா
மழையும் எப்படி வரம்தரும் எளிதாய்
செயற்கைக் காட்சிச் செயலிலா மாற்றமாம்
இயற்கைத் தாயவள் எழிலிலாத் தோற்றமாய்

### கவியன்பன் கலாம்





## தேடத் தொடங்குகிறான்

நீண்ட தினங்களுக்குப் பிறகு
வனத்தில் நுழைந்த
பறவை நோக்குபவனை
வரவேற்கிறது பேரமைதி
வளியின் வேகம் நின்றதென
அமைதி காக்கின்றன
இலையும் கிளையும்.
கீச்சொலிகளும் உறுமல்களும்
கேளாது பேரச்சமூட்டுகிறது காடு.
சருகுகளையும் நகர விடாது
காலடிக்குள்
கிடத்திக் கொள்கிறது மரம்.
கடந்து போகாத வழித்தடங்களில்
காலடித் தடங்கள் காணாது
கலக்கமடைகிறது மனம்
ஆகாயப் பாலத்தில்
வெளியை அளக்கும்
புள்ளினங்கள் இல்லாது
வெறுமையில் விசும்புகிறது வனம்
கண்ணீரைப் பொழிய மறுத்து
மேகத்தைக் கரைத்து விடுகிறது வானம்.
வண்ணங்கள் தொலைத்த வானவில்லென
நிறமற்றுத் திரியும் தடங்களில்
தேடத் தொடங்குகிறான்
பறவையின் நிழலை.

### இளையவன் சிவா

# பாலும் தெளிதேனும்




## மைதிலி சம்பத்

செகந்திராபாத்


மதுரையிலிருந்து வந்து நின்ற பஸ்ஸி லிருந்து இறங்கினார் பஞ்சநாதம் பிள்ளை தன் கையில் ஒரு பையுடன். 'என்ன கசகசப்பு, என்ன வியர்வை. இந்தக் காலை வேளையிலேயே. வீட்டிற்குப்போய்க் குளித்து, சாப்பிட்டுவிட்டு நல்லதாக ஒரு தூக்கம் போடணும்' என்று நினைத்துக் கொண்டே நடந்தார். கொஞ்ச தூரத்தி லேயே என்னவோ பெரிய சப்தம். கசமுச என்று பெண்கள் பெரிதாக அழுகிறமாதிரி வேறு இருந்தது. ஆண்கள் குரல் சண்டை யிடுகிற மாதிரியும் கேட்டது. நடையை வேகமாகப் போட்ட அவர் ஆலமரத் தருகில் வருகையில் சப்தம் காதைக் கிழித்தது. ஊர்ஜனம் மொத்தமும் அங்கு தான் இருந்தார்கள். இரண்டு போலீஸ் கான்ஸ்டேபிளும் இன்ஸ்பெக்டரும் வேறு நின்றிருந்தார்கள்.

ஏற்கனவே அழுது கொண்டிருந்த பெண்கள் இவர் வருவதைப் பார்த்ததும் 'ஐயா, பிரெஸிண்ட் ஐயா! நீங்களே கேளுங்கய்யா இந்த அநியாயத்தை.' என்று சொல்லி இன்னும் பெரும்குரலெடுத்து அழுதார்கள்.

'நீங்க சொல்றது ஒண்ணும் புரியல்லை. யாராவது ஒருவர் அழுகையை நிறுத்தி என்ன நடந்ததுன்னு சொல்லுங்க' என்றார்.

லைப்ரரியைப் பார்த்துக் கொள்ளும் ரவி முன்னால் வந்தான்.

'ஐயா! நாங்க ஒண்ணறை மாசமா ராவா பகலா உழைச்சி உருவாக்கின விநாயகர் சிலைகள் எல்லாம் ஷெட்டில் இருக்குதய்யா. இந்தப் போலீஸ் வந்து அதெல்லாம் விக்கக்கூடாது, அது மாசுக் கட்டுப்பாடு ஆணையத்தின் ரூல்ஸ் படி இல்லை என்று சொல்லி நாங்க சொல்லச் சொல்லக் கேட்காமல் பூட்டி ஸீல் வெச்சுட்டாங்கய்யா. பிள்ளையார் சதுர்த்திக்கு இன்னும் இரண்டு நாள்தான் இருக்குதய்யா. இப்படி அராஜகம் பண் றாங்களே, நீங்க கேளுங்கய்யா' என்றான்.

'எங்களுக்கு புகார் வந்தது அதனால ஸீல் வெச்சுட்டோம். எங்க கடமையைத்தான் நாங்க செஞ்சோம் சார்' என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

ஆலமரத்தடிக்கு எதிர்த்தாற்போல் ஒரு பெரிய ஷெட் உண்டு. அப்போதுதான் பார்த்தார் பஞ்சநாதம் பிள்ளை போலீஸ்காரர்களோடு வந்திருந்த ஒரு ஆள் அந்த ஷெட்டின் கதவில் பெரிய பூட்டுப்போட்டு சீல் வைத்திருந்தார்.

'இல்லீங்கய்யா! நாங்க கிழங்கு மாவு, காய்கறிச் சாறு இதையெல்லாம் வெச்சுத் தான் செஞ்சோம். எல்லாம் களிமண் பொம்மைதாங்க ஐயா. பிளாஸ்டர் ஃஆப் பாரிஸ் பக்கம் கூட போகலிங்கய்யா' என்றாள் ஒரு பெண்.

'சரி, அதுக்கான சர்டிபிகேட்டைக் காண்பிக்கச் சொல்லுங்க' என்றார் இன்ஸ்பெக்டர்.

'ஐயா, இவங்க வந்ததிலிருந்து சொல் றோம், அந்த சர்டிபிகேட் உள்ளேயே



இருக்குதய்யா. இந்தப் பிள்ளையாரை எல்லாம் இப்படியே விக்காமே வெச்சு கிட்டுருந்தா நாங்க லோனை எப்படீங் கய்யா அடைப்போம்'

'எங்க பிள்ளைகுட்டிங்கல்லாம் பட்டினியில் சாக வேண்டியதுதான். என்னய்யா அராஜகம் இது? கேட்பாரே யில்லையா?' என்று ஒருத்தி ஓலமிட்டு அழ, இன்னொருத்தி 'பிள்ளையாரே வந்துதான் இவங்களை மிதிச்சி கொல்லணும்' என்றாள்.

'ஏய்யா, இன்ஸ்பெக்டரு, உள்ளுக் குள்ளே சர்டிபிகேட்டை வெச்சு பூட்டிட்டு, சர்டிபிகேட்டைக் காமி, காமின்னா என்னாய்யா அர்த்தம்?' என்றார் பஞ்சநாதம் கோபமாக

'இத்தனைக்கும் இவங்க மூணுபேருமே நம்ம ஊர் மாப்பிள்ளைங்கய்யா' என்றாள் ஒருத்தி

'அட, ஆமா ! நானும் இத்தனை நாழியா கவனிக்கல்லியே! ஆமா, எங்கே இவங்க பெஞ்சாதிங்க எல்லாம்? அவங்கல்லாம் லோன் வாங்கல்லியா, இல்லே வேலை செய்யலியா?'

'ஆமாங்கய்யா, அவங்களும் எங்க ளோடு சேர்ந்து வேலை செய்யறவங்க தான். மூணு பேரும் சொந்தமா, ஏதோ துஷ்டின்னு போயிருக்காங்க. இதா, இப்ப வந்துருவாங்க' என்றாள் சுந்தரி.

அப்போது ஏகாலி வீட்டு ருத்ரய்யா கையில் ஒரு காகிதத்தை வைத்துக் கொண்டு மூச்சிரைக்க ஓடி வந்தான்.

'இந்தாய்யா இன்ஸ்பெக்டரு, இதோ இருக்கு நீ கேட்ட சர்டிபிகேட் இப்ப திறந்துவிடு கதவை' என்றார் பஞ்சநாதம்

'இல்லீங்கய்யா! ஒருதரம் ஸீல் வெச்சதை அதிகாரிங்க உத்திரவு இல்லாமே, அவங்க கூட வராமே, நாங்க திறக்கக்கூடாது. அதுதான் ரூல்ஸ்'

'கொஞ்சம் தயவு பண்ணுங்கய்யா! பாவம்! பொண்ணுங்கல்லாம் எப்படி அழுவுது, பாருங்க'

'இனிமே கெஞ்சல் கிடையாது. அவங்க மூணு பேர்தான் இருக்காங்க, நாம எத்தனை பேரு இருக்கோம்? ஒரே நசுக்கா நசுக்கிட்டு நம்ம வேலையைப் பார்க்க வேண்டியதுதான். வாங்கய்யா, முதல்ல கட்டிப்போடுவோம் இவங்களை' என்றான் முத்துவீரன்.

அதே நேரம் ஆளுக்கொரு கெரஸின் கேனோடு அங்கே வந்து சேர்ந்தார்கள் ராமக்கா, ராணி, மனோகரி மூவரும்.

'இப்ப இவங்க இந்த ஷெட்டைத் திறக்கல்லேன்னா, நாங்க மூணுபேருமே கெரஸினை ஊத்திக்கிட்டு தீக்குளிச்சுடு வோம். ஆமா, ருத்ரய்யா வந்து சொல்லும் போதே நாங்க ஒரு முடிவோடதான் வந்திருக்கோம். எங்களுக்கு வரிசையா மூணு பொட்டைபிள்ளைங்க. நான் ஏட்டு மனோகரோட பொஞ்சாதி. இது ஏட்டு ஆறுமுகம் பொண்டாட்டி. மனோஹரிக்கும் இந்த இன்ஸ்பெக் டருக்கும் கல்யாணமாகி மூணு மாசம்தான் ஆவுது. அதுக்குள்ளாற அவ செத்தான்னா, இவரு இன்ஸ்பெக்டராக இருக்க மாட்டாரு. கம்பி எண்ணி, களி திங்க வேண்டியதுதான்' என்றாள் ராணி.

'நீங்க என்ன வேணா செஞ்சிக்குங்க. நாங்க கதவைத் திறக்க முடியாது' என்றார் இன்ஸ்பெக்டர்.

' அட, அறிவுகெட்ட மூதி!' என்று வைதுகொண்டே ராமக்காவின் கணவன் ஆறுமுகம் அவளை மரத்தின் பின்னால் ஒரு ஓரமாக நின்று கொண்டு கூப்பிட்டான்.

'அடி ராமக்கா, உன் புருஷன் உன்னைக் கூப்புடுறான் பாரு. போய் என்னான்னு கேளு' என்றாள் ராணி.

'எனக்கு அது சொல்ற எந்த விஷயமும் வேணாம். நான் செத்து போறேன். மனுஷன் திண்டாடட்டும்' என்றாள் கோபமாக ராமக்கா.

' அடி,போடி! போய் என்னானுதான் கேட்டு வாயேன்' என்று ராணி சொல்ல, ராமக்கா அவனிடம் போனாள்

'ஏய், கிறுக்கு பிடிச்ச கருமமே! இந்தக் காரியம் பண்ண எதிர்கட்சி எங்களுக்கு 10 லட்சம் கொடுக்கறாங்கடி. ஸீல் வெச்சவனுக்கு ஒரு லட்சம், எங்க மூணு பேருக்கும் ஆளுக்கு மூணு லட்சம் கிடைக்கும். நீ பண்ணின பிள்ளையார் மொத்தத்தையும் வித்தாகூட உனக்கு என்னடி கிடைக்கும்? எத்தனை செலவு? சாமான்கள் வாங்க, கொட்டகை வாடகை, கரண்ட் பில்லு எல்லாம் உங்கப்பனா குடுப்பான்? போ, போய் கொஞ்ச நேரம் பேருக்கு அழுதுட்டு வீட்டைப் பார்க்க போயிடு.'

'ஓஹோ! ஆமா, இந்தப் பிள்ளையாரை எல்லாம் விக்கப்போறதில்லை ரொம்ப சரி! வேறே என்ன செய்யப்போறதா உத்தேசம்?'

' என்ன செய்வோம், ஜேசீபி மெஷினை வெச்சு எல்லாத்தையும் உடைச்சி ரோட் போடறவனுக்கோ, பில்டிங் கட்றவ னுக்கோ வித்துடுவோம்'

'சீ! நீயும் ஒரு மனுஷ ஜன்மமா? நீயும்

இந்த சாமியைக் கும்பிடறவந்தானே? இப்படிச் சொல்ற உன் வாய் ஏன் இன்னும் இழுத்துகிட்டுப் போகல்லே? அதை உடைச்சி போட்டு அதும்மேலே நடப்பேன்னு சொல்றியே? இந்த எண்ணத்துக்கே நீ நாசமாப் போயிடுவே. பணம் கொடுக்கறவங்க கிட்டேயெல்லாம் பணம் வாங்கி. அதேயே கட்டீட்டு அழு. நான் போய் சேர்றேன் சாமிகிட்டே' என்று பொரிந்து தள்ளிவிட்டு கிரஸின் கேனைக் கையிலெடுத்தாள்.

'என்னய்யா, இந்தப் பிள்ளை போய்ச் சேரட்டும். நீ உன் பொண்ணுங்களை வெச்சு வளர்த்துகறியா?' என்று கேட்டார் பஞ்சநாதம்.

அதற்குள் தன் தலையில் கெரசினைக் கொட்டிக் கொண்டுவிட்டாள் ராமக்கா.

'எல்லோரும் கேட்டுக்கோங்க. இந்த அளுங்க எதிர் கட்சி காரங்க பணம் தரேன்னு சொன்னதனால்தான் இத்தனையும் செய்யறாங்க. எல்லோரும் கவனியுங்க அவங்களை. எனக்கு யாராவது ஒரு நெருப்புப் பெட்டி கொடுங்களேன்' என்றாள் ராமக்கா.

'சும்மா இரு அக்கா.. லஞ்சம் வேறேயா? இதுங்களே போலீஸு, எந்த போலீஸ்கிட்டே போய் புகார் பண்றது? வாங்க, நாமே செமையா கவனிப்போம் இவங்களை' என்றான் ருத்ரன் ஆத்திரத்தோடு. அதற்குள் இன்ஸ்பெக்டர் அந்த கொடவுன் பூட்டைத் திறந்து விட்டார்.

ஆறுமுகம் ராமக்காவை முறைத்தான். 'வாடி, நீ வீட்டுக்குத்தானே வரணும்' என்றான்.

'இந்தாங்க, ஏட்டய்யா! இந்த அக்கா மேலே நீங்க கையை வெச்சீங்க, மகளிர் கமிஷன் உங்க வீட்டிற்கு வந்துடும். ஜாக்கிரதை' என்றார் பஞ்சநாதம்.

போலீஸ்அவரைமுறைத்துக்கொண்டே ஜீப்பில் ஏறி கிளம்பிவிட்டார்கள். திறந்திருந்த ஷெட்டுக்குள் நுழைந்த பஞ்சநாதம், அங்கிருந்த கற்பூரத்தை எடுத்து அவரே திருஷ்டி சுற்றிப்போட்டார். ' உங்க எல்லாரையும், பிள்ளையாரையும் பிடித்திருந்த திருஷ்டி எல்லாம் போகட்டும். அப்பறம், காலையிலிருந்து யாரும் ஒண்ணும் சாப்பிட்டிருக்க மாட்டீங்க. நான் போய் உங்களுக்கெல்லாம் கூட்டாஞ்சோறு ஆக்கிவெச்சு அனுப்பறேன். சாயந்திரம் டீயும் வடையும் அனுப்பறேன். எல்லோரும் வேலையைப் பாருங்க. நாளைக்கு சாயந்திரமாவது சந்தைக்குக் கொண்டு போகணும்' என்றார். ' அப்பறம் இந்த செய்தியைப் பாருங்க. சிலைகளில ஒரு வேளை பிளாஸ்டர் ஃஆப் பாரீஸோ, இல்லே, வேறே ரசாயனக் கலவையோ கலந்திருந்தா அதை குடிக்கற தண்ணீர்ல கரைக்க வேண்டாம். உங்க வீட்டிலேயே வசதி செய்துகிட்டு கரைச்சுடுங்க அப்படீன்னு போட்டிருக்காங்க, அப்ப கூட சிலைகளை எல்லாம் உடைக்கச் சொல்லல்ல' என்றார்.

' அப்பனே! விநாயகா! எலோரையும் காப்பாத்து' என்று வேண்டிக்கொண்டவர் 'பாலும் தெளிதேனும்' என்ற பாடலைப் பாடிவிட்டு கிளம்பினார்.

'பிரெஸிடென்ட் ஐயா! ரொம்ப நன்றிங்க' என்று எல்லோரும் கையெடுத்துக் கும்பிட்டார்கள். 'ஐய்யாவுக்கு ஜே' என்ற் ஒருவர் கத்த, எல்லோரும் ஜே போட்டார்கள். அடுத்து ' விநாயகருக்கு' என்று ஒருவர் கத்த மறுபடியும் எல்லோரும் ஜே போட்டார்கள். பிறகு எல்லோரும் மனத்திருப்தியுடன் உள்ளே போனார்கள். ■

# ஹைக்கூ கவிதைகள்

சந்தை இரைச்சல்
அமைதியாக உறங்கும்
பூக்காரி மடியில் குழந்தை

பறந்து திரிந்தே
கழி(ளி)க்கிறது
ஒருநாள் சீவிக்கும் ஈசல்

நேர்மையில்
நிறையவே உண்டு
நிம்மதியின்மை

மண்குடத்தில்
ஒளிந்திருக்கின்றன
குயவனின் கைரேகைகள்

வேலைக்குச் சென்றதும்
தன்னந்தனியாக
இருக்கிறது வீடு

சிரிக்க நல்ல துணை
சில சமயங்களில்
அழுகையில் தொலையும் நட்பு

அடடே என்ன ஒற்றுமை
ஒரே செடியில்
முள்ளும் மலரும்

பெரிதாகி விடுகிறது
பிரிவின் இடைவெளியில்
சிறு நேசம்

இரத்த இழப்பில்லை
இதயமாற்று சிகிச்சை
இந்தக் காதலில்

ஒளி தருகிறது
எரியும் மெழுகுவர்த்தி
சாவை அறியாமல்

வளையல் போடுகிறது
விழும் நதியில்
வான் மழை

நூலகத்திற்குச் சென்று
அமைதியாய் வாசிக்கிறான்
அலைபேசியில்

குடும்பப் புகைப்படம்
கூடி எடுத்ததும்
வீட்டிற்கு ஒன்று

நிறுக்கும் தராசு
தங்கம் எடைபோட
மறுதட்டில் குன்றிமணி



Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்
இலங்கை



# உன்னதமான உழைப்பாளர் தினம்

உலக நாடுகளில் பல 18ம் நூற்றாண்டுக் காலப்பகுதியிலே கைத் தொழிலில் வளர்ச்சி கண்டு கொண்டிருந்தது! அன்றைய காலங்களில் தொழிலாளர்கள் ஓய்வில்லாமல் வேலை செய்து கொண்டிருந்தனர்! அவர்கள் சுமார் 16 தொடக்கம் 18மணி நேரம் வேலை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்! அவர்களின் உழைப்புகேற்ற ஊதியமும் அன்று வழங்கப் படவில்லை! நீண்ட நேரம் வேலை செய்த தொழிலாளர்களுக்கு ஓய்வு உறக்கம், நல்ல உணவு என்பன கிடைக்கவில்லை! அதனால் அவர்களின் உடனலமும் பாதிக்கப் பட்டது!

இவ்வாறான பல்வேறு துன்பங்களுக்கு உள்ளான பாட்டாளி வர்க்கத்தினர், உழைப்பைச் சுரண்டி வாழும் முதலாளி மார்களுக்கு எதிராக ஒன்று சேர்ந்தனர்! உரிமைப் போராட்டங்களில் குதிக்கத் தொடங்கினர்! உரிமைப் போராட்டங்களின் போது அவர்கள் கடுமையான தாக்குதல்களுக்கும் உள்ளானார்கள்! இரத்தம் சிந்தினர்! பலர் தங்களின் இன்னுயிர்களையும் இழந்தனர்!

நமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் சகல விதமான சாதனங்களும் தொழிலாளர்களின் இயங்குநிலையின் மூலமே எமக்குக் கிடைக்கின்றன என்றால் அது மிகையாகாது! அவர்களுக்கிடையில் ஏற்றத் தாழ்வு பாராமல், அனைவரையும் மதித்தல் நமது கடமையாகும்! எத்தனை தொழினுட்ப இயந்திரங்கள்

இயங்கினாலும், ஒவ்வொரு நாடும் உழைப் பாளர்களின் கைகளையும் எதிர்பார்த்துக் கொண்டு தான் உள்ளது!

நாட்டின் முதுகெலும்பான இவர்களை கௌரவப் படுத்தி வலுவூட்டவே உலகளாவிய ரீதியாக உழைப்பாளர்தினம் கொண்டாடப் படுகின்றது!

இன்றைய தொழிலாளர்கள் கொண் டாடும் உழைப்பாளர் தினமானது, பல்லாயிரக் கணக்கானோரின் இரத்தம் சிந்தியமையினால் கிடைத்தது என்பதை யாரும் மறுக்க முடியாது! இன்றைய தொழிலாளர்கள் அனுபவிக்கும் அத்தனை உரிமைகளுக்கும் பின்னால் குருதி தோய்ந்த சோக வரலாறு உண்டு என்பது பலருக்குத் தெரியாது!

கொத்தடிமைகளாய் நாடாத்தப் பட்ட உழைப்பாளர்கள் போராட்டத்தின் போது, தூக்கிய வெள்ளைக் கொடிகள் குருதியால் செங்கொடிகள் ஆயின!

அன்று 1832 ல் அமெரிக்காவின் பொன்ஸ்டன் நகரில் கப்பல் கட்டும் தச்சுத் தொழிலாளர்கள் வேலை நேரம் 10மணித்தியாலயமாகக் குறைக்கப் போரா டினர்! பிரான்ஸ் நாட்டிலே நெசவாளர்கள் 1834 ல் ஜனநாயகம் அல்லது மரணம் எனும் உரிமைப் போராட்டம் நடத்தினர்! அனைத்திலும் தோல்வியையே தழுவினர்! 1835 ல் அமெரிக்காவின் பிலடெல் பியா, பென்சில்வேனியா, போன்ற இடங்களில் நிலக்கரிச் சுரங்கத் தொழி லாளர்களும் போராடினர்! இங்கி லாந்தின் சாசன இயக்கம் (chartists) தொழிலாளர் நலன்களைக் குறிப்பிட்டுக் கோரிக்கைகளை முன் வைத்தது! இவ்வாறு உரிமைக்காக வேலை நிறுத்தங்களும் போராட்டங்களும் தொடர்ந்தன! யாவும் தோல்வியிலேயே முடிந்தன!

அவுஸ்ரேலியா மெல்பொன் நகரில் கட்டடத் தொழிலாளர்கள் 1856ல் பணி நேரத்தைக் குறைத்துக் கேட்டு, வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினர்! 1858 ல் வெற்றி பெற்றனர்! இது தொழி லாளர்களுக்கு உரிமை கிடைக்க, ஒளிக் கீற்றாக அமைந்தது!

என்றாலும், உலகெங்கும் உழைப்பாளர் கள் முதலாளி வர்க்கத்தினரால் ஒடுக்கப் பட்டனர்! அமெரிக்காவில் 1861ல் உள்நாட்டுப் போரும் வேலை நிறுத் தங்களும் இடம் பெற்றன! உழைப்பா ளரைக் கொடூரமாகச் சுரண்டி வாழும் முதலாளிகள், உழைப்பாளரின் வேலை நேரக் குறைப்புக் கோரிக்கைக்கு உடன் படவேயில்லை!

1867 ல் கார்ல்மாக்ஸ் ராஷ்யாவில் மூலதனம் எனும் நூலை வெளியிட்டார்!

அவர் 8மணி நேரம் வேலை செய்தல், 8மணி நேரம் ஒய்வு 8மணி நேரம் பொழுது போக்கு எனத் தொழிலாளர் ஒரு நாள் வாழ்க்கை அமைய வேண்டும் என்று வலியுறுத்தி வழி காட்டினர்! வெள்ளை யரும் கருப்பினத்தாரும் ஒன்று படுவதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்!



- கிண்ணியா சபீனா

அது மட்டுமல்லாமல், பணிநேரக் குறைப்புக்காக அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பும் கடுமையாகப் போராடியது! தொடர்ந்தும், 1870களில் போராட்டங்கள் வேலை நிறுத்தங்கள் வலுப்பெற்றன! 1877 ல் ரயில்வேத் தொழிலாளர்களும் சுரங்கத் தொழிலாளார்களும் மிகப் பெரிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்! அதுவும் தோல்வியையே தழுவியது! இருந்தும் தொழிலாளர்கள் சோர்ந்து போகவில்லை!

பின்னர் அமெரிக்காவில் நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டம் 1886ல் தொடங்கப்பட்டது! சிக்காக்கோ நகரில் மாத்திரம் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்று சேர்ந்தனர்! இந்த நிகழ்வானது, தொழிலாளர்களின் உரிமைப் போராட்ட விடயத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்! அப்போது காவற்துறையினரின் துப்பாக்கிச் சூட்டினால், நான்குதொழிலாளர்கள் உயிரிழந்தனர்! அதைத் தொடர்ந்து குண்டு வீச்சின் போது காவல் துறையினரில் ஒருவர் பலியானார்! இச்சம்பவம் (Haymarket) வைக்கோல் சந்தைப் படுகொலை எனப்படுகின்றது! அப்போது போராட்டக்காரர்களின் தலைவர்கள் 8பேர் கைது செய்யப் பட்டனர்! அதிலொருவர் சிறையில் தற்கொலை செய்து கொண்டார்!

பின்னர், 1887 ல் கைது செய்யப் பட்ட தலைவர்கள் ஏழுபேரும் தூக்கிலிடப் பட்டார்கள்! அவர்களின் இறுதி ஊர்வலத்தில் சுமார் 5இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர்! இந்நாள் உழைப்பாளர் வரலாற்றில் அமெரிக்காவின் கருப்பு நாள் எனப்படுகிறது!

அதைத் தொடர்ந்து, 1889ல் பாரிஸில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு இடம்பெற்றது! அதில் 18 நாடுகளின் சர்வதேச தொழிலாளர் பாராளுமன்றப் பிரதிநிதிகள் 400பேர் கலந்து கொண்டனர்! அதில் கலந்து கொண்ட கார்ல்மாக்ஸ் தொழிலாளர்களின் 8மணி நேர வேலை சம்பந்தமான கருத்துக்களை முன் வைத்தார்! அங்கு மே முதலாம் திகதி யைத் தொழிலாளர் தினமாக்க அறைகூவல் விடுக்கப் பட்டது!

வியர்வையில் குளித்துக் குருதியைக் கொட்டிப், பல உயிர்களை இழந்து தொழிலாளர்கள் பெற்ற தினமே, உழைப்பாளர் தினமான மேதினமாகும் என்றால் மிகையாகாது!

இன்னும் தொழிலாளர்கள், உரிமைகளை வென்றெடுக்கப் போராட்டங்கள் செய்ய வேண்டிய நிலையிலேயே உள்ளனர்!

இலங்கையிலும் உழைப்பாளர்கள் தொழிலாளர் சங்கத் தலைவர் ஏ.ஈ குணசிங்கவின் தலைமையில் உரிமைகளுக்காக அன்று போராடினார்கள்!

இன்று மேதினம், அரசியல் கட்சி ரீதியாகவே, கொண்டாடப் படுவதனை அவதானிக்க முடிகிறது!

இன்றும் சில இடங்களில் 8மணி நேரம் பணி செய்தல் புறக்கணிக்கப் படுகின்றது! அது மட்டுமல்லாமல் தொழிலாளர் நலன் பேணலும் கவனிக்கப் படுவதில்லை! பெண் தொழிலாளர்கள் வன் கொடுமைக்கு உள்ளாக்கப் படுவதுமுண்டு! சித்திரவதைக்கு ஆளாக்கப் படுவதுமுண்டு!

ஆகவே, மே தினத்தில் உழைப்பாளர்களின் நலன்கள் கிடைக்க ஒத்துழைப்போம்! அவர்களை மதித்துக் கௌரவிப்போம்!

## கள்ளச் – சிரிப்பழகி

துள்ளியே ஓடுகின்ற
கள்ளச் சிரிப்பழகே!
உள்ளம் தடுமாறுகின்ற
கள்ளூறும் செவ்விதழே!
மாங்கனிகள் குலுங்கிடும்
மாந்தோப்புக் கிளியே!
மாமனை சாய்க்குதடி
செந்தூர விழியே!
பூப்போட்ட சீலையிலே
கிராமத்து மின்னல்!
நானுமதை பார்க்கயிலே
மூடுவதேன் சன்னல்!
காதோரம் ஆடுகின்ற
சின்னஞ்சிறு கம்மல்!
காதலைப் பேசுதடி
நித்தமும் கண்ணில்!
வெட்கப்பட்டு நெளிகின்ற
அக்காமக ரத்தினமே!
இரவினில் தூக்கமில்லே
குறுநகை சித்திரமே!
இளமைகள் வரைந்த
அழகிய பூவனமே!
இறைவன் வழங்கிய
அதிசய சீதனமே!

– லீ.லியாகத்அலி



## விழுந்த மலர்கள்

மண்ணில் விழுந்த
மலர்ந்த மலரே!

காற்றின் வேகத்தை
தாங்காது விழுந்தாயா!
கிளைகளின் ஆட்டத்தின்
கிளர்ச்சியில் விழுந்தாயா!

மனம் எங்கும் வீசியே
மயங்கித்தான் விழுந்தாயா!
வண்டுகளின் தொல்லையால்
வாடித்தான் விழுந்தாயா!

நாளைய மலர்களுக்கு
வழி தந்து விழுந்தாயா!
இன்றைய நாள் முடிய
ஏக்கத்துடன் விழுந்தாயா!

மங்கை நான் சூடிக்கொள்ள
மனமுவந்து விழுந்தாயோ!
மறைக்காமல் சொல்லிவிடு
மண்ணில் விழுந்த மலரே!

– ஜனனி குமார்

## உழவனே உயர்ந்தவன்



நஞ்சை எல்லாம் புஞ்சை ஆகும்
விவசாயி கால் பட்டால் மண்ணும்
பொன் ஆகும் விளைவது பயிராகும்
விலையில்லாத நெல் மணி அழகாகும்
வளைந்து நிற்கும் செங்கதிர் உழைப்பாகும்
வறட்சி வந்தால் வாடுவது மண் ஆகும்
பட்டினியால் வாடுவது பல நாடுஆகும்
மழையின் தேவை அதிகமாகும்
மண் வாசனை மிக மணமாகும்

R.S. பாலகுமார், சென்னை.

# வாழ்க்கையின் தேடல்

இயந்திர உலகில் எதை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறோம், எதற்காக ஓடுகிறோம் என்ற ரகசியம் உணராமலே நாம் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு முன்னேற முயல்கிறோம். வாழ்க்கை வாழ பல ஆண்டுகள் ஆகலாம் .ஆனால் வாழ்க்கை மாற சில நொடிகளே போதும் .அந்த சில நொடிகளின் தேடல் தான் வாழ்க்கையின் ரகசியம்.

வாழ்க்கை அடுத்த நொடியில் ஆயிரம் ஆச்சர்யங்களை ஒளித்து வைத்திருக்கிறது. அவற்றில் சில சந்தோஷங்களாகவும் பல சங்கடங்களாகவும் கூட இருக்கலாம். ஆனால் எதையும் ஏற்று பயணிக்க தான் நமக்கு இயலவில்லை.எதிர்வரும் அனைத்தும் புதிராகவே இருப்பதால் தான் வாழ்க்கை ருசிக்கிறது. எல்லா சூழ்நிலையையும் வெற்றியுடன் கடந்து விடுவோம் என்ற தன்னம்பிக்கை தான் நமக்கு அவசியம் .

அனுபவங்களின் அரிச்சுவடியே வாழ்க்கை. தேடலின் பரிசு என்னவாக இருந்தாலும் அதை முழு மனதுடன் ஏற்கும் பண்பும் நமக்கு வேண்டும்.இதை உணர்த்தும் ஒரு வேடிக்கை கதை ஒன்று உண்டு.

அரசன் ஒருவன் தன் மக்களுக்கு ஒரு வினோத போட்டியை அறிவித்தான். தன் கோட்டை கதவுகளை கைகளாலேயே திறக்க வேண்டும். அவ்வாறு திறந்து வெற்றி பெற்றால் தன் நாட்டின் ஒரு பகுதியை பரிசாக வழங்குவதாகவும் மாறாக தோல்வியுற்றால் இரு கைகளும் துண்டிக்கப்படும் என அறிவித்தான். மக்கள் எதிர்மறையாக யோசித்து போட்டியில் கலந்து கொள்ள தயங்கினர். வெற்றி பெறும் வாய்ப்பு எந்த வகையிலும் சாத்தியமில்லை என்று மக்கள் கலந்து கொள்ளவில்லை. அப்பொழுது கூட்டத்தி லிருந்து ஒரு இளைஞன் போட்டிக்கு முன்வந்தான். மக்கள் அவனை திகைப் புடன் பார்த்தனர் .

எளிய உருவம் கொண்ட அவனை மக்கள் கண்டித்தனர். சிலர் எள்ளி நகையாடினர். இந்தப் போட்டிக்கு நீ தகுதியானனவன் இல்லை. உன்னை விட வீரர்கள் கூட அஞ்சி பின் நிற்பதை நீ பார்க்கவில்லையா? உன் கைகளை இழந்து விடாமல் பத்திரமாய் வீட்டிற்கு செல் என்று எச்சரித்தனர். ஆனால் அந்த இளைஞன் புன்னகைத்தபடி பதிலளித்தான். ‘‘ஒரு வேலை நான் போட்டியில் வென்றுவிட்டால் நாளை நான் உங்கள் அரசன். தோற்றால் கைகள் தானே உயிர் இல்லையே .நான் முயற்சிக்கிறேன்’’ என்று சூளுரைத்தான் .

திடமான இளைஞனின் பதிலை கேட்ட மக்கள் திகைத்து நிற்க, மக்களின் கண்கள் பல அவனின் அடுத்த அடியை எதிர்நோக்கி காத்திருந்தது . கனத்த மனத்துடன் வானுயர்த்தி இறைவனை

வணங்கி தன் இரு கைகளாலும் கோட்டை கதவுகளை வேகமாக தன் முழு சக்தியுடன் தள்ளினான். என்ன ஆச்சர்யம்? கதவுகள் திறந்தன. காரணம் கோட்டை கதவுகள் தாழிடவில்லை. திறந்துதான் இருந்தது. மக்களின் தன்னம்பிக்கையும் வீரத்தையும் சோதிக்க அரசன் இந்த போட்டியை அறிவித்தான். மல்யுத்த வீரர்கள் கூட அஞ்சிய போட்டியை எளிய தோற்றம் கொண்ட இளைஞன் தன் தன்னம்பிக்கையால் வென்றான்.மக்களுக்கு புதிய அரசனாக பதவி ஏற்றான் .

நம்மில் பலர் இப்படித்தான் இருக்கிறோம். தோற்றுவிடுவோமோ அல்லது இழந்துவிடுவோமோ என்ற அச்சத்தில் முயற்சிக்காமலே இருக்கிறோம். தேடல் இல்லா மனித வாழ்க்கை தொலைந்தே போகும் .



***பிள்ளையின் தேடல் அன்னையின் மடியில்..!***
***உழவனின் தேடல் கழனியின் நெற்பயிரில் ..!***
***ஓவியனின் தேடல் வண்ணத்தின் உயிர்ப்பில் ..!***
***காதலனின் தேடல் அவளின் விழிஈர்ப்பில் ..!***
***சிற்பியின் தேடல் சிலையின் வடிவில்..!***
***கடலின் தேடல் அலையில்..!***
***கவிஞனின் தேடல் தன் படைப்பில் ..!***

***தேடலுக்கு என்றும் இல்லை முற்றுப்புள்ளி !***
***தேவைக்கு அதிகமாய் ஆனபின்னும் ,***
***தேவையில்லை என்று உணர்ந்த பின்னும்***
***ஓயப் போவதில்லை இந்த தேடல்..!***

***எனினும் இந்த தேடல் தான்***
***வாழ்வின் உயிர் சாவி !***
***உன்னை உன்னில் தேடு !***
***ஆசையாய் தேடு அமைதியாய் தேடு !***
***சுகமாக தேடு சுவாரஸ்யமாக தேடு !***
***வாழ்க்கை இனித்திடும்! சுகப்படும் ..!!!***

வாழ்க்கையை சுமையாக கருதா மல் சுகமாக நினைத்து கடந்தால், தேடல் நிறைந்த இந்த பயணம் நம் அனைவருக்கும் சுவாரஸ்யமே..!!

**பா . சூர்யா** M .Sc .,M.Phil.,B.Ed .,

# இராம வேல்முருகன் வலங்கைமான்

## பாடல்கள்

1

**ஆண்டவனைத் தொழுவேன்**

ஆண்டவன் பாதம் அடிபணிவேன்
அவனருள் பெறவே தொழுதெழுவேன்
தாண்டவன் மகனின் தயவினிலே
தாரணி மீது நடமிடுவேன்
வேண்டுநல் வரங்கள் பெற்றிடுவேன்
வெற்றியை ஈட்டி வலம்வருவேன்
சீண்டுவோர் மனத்தை மாற்றிடுவேன்
செந்தமிழ்ப் பாக்கள் நெய்திடுவேன்

2.

**நேர்மையை விதைப்பேன்**

நெய்திடும் பாக்கள் வழியேநான்
நேர்மையை என்றும் விதைத்திடுவேன்
பெய்திடும் வானப் பெருமழையாய்
பெருங்கவி யாவும் விளைத்திடுவேன்
மெய்தவழ் பூமி எங்கணுமே
மேன்மை பெருகிட உழைத்திடுவேன்
பொய்மையின் காலை உடைத்திடுவேன்
போர்க்குணத் தாலே உயர்ந்திடுவேன்

3

**நற்றமிழ் மகனாவேன்**

உயர்ந்திடும் வழிகள் கண்டறிவேன்
உண்மையை அதனுள் சேர்த்திடுவேன்
வியந்திடும் செயல்கள் புரிந்திடுவேன்
வெற்றியை நாளும் அருந்திடுவேன்
அயர்ந்திடா வகையில் உழைத்திடுவேன்
அருளெலாம் பெற்றே வாழ்ந்திடுவேன்
நயத்தகு கவிகள் நான்படைத்தே
நற்றிமிழ்த் தாயின் மகனாவேன்!

4

**பொருப்பென உயர்வேன்**

நற்றமிழ்த் தாயின் மகனாகி
நாட்டினில் நானும் சிறப்புறுவேன்
கற்றவர் துணையை நாடிடுவேன்
கற்பன யாவும் கற்றிடுவேன்
பெற்றவர் மனத்தை மகிழ்வித்தே
பெருமைகள் யாவும் பெற்றிடுவேன்
பொற்றுக ளாகி மின்னிடுவேன்
பொருப்பென உயர்ந்து நின்றிடுவேன்

5

**வெற்றியை வேண்டுவேன்**

நிற்கையில் நானோர் மலையாவேன்
நடக்கையில் நானோர் நதியாவேன்
பொற்கையைக் கொண்ட மன்னரெலாம்
போற்றிடும் கவிதைச் சிலையாவேன்
கற்கையில் குழந்தை மனத்தோடு
கற்றிடும் சிறிய குளமாவேன்
விற்கையைக் கொண்ட இறைவனிடம்
வெற்றியை வேண்டும் குகனாவேன்!

6

**பணிவைக் கற்பேன்**

குகனவன் அன்பைக் குழைத்தெடுத்தே
குவலயம் முழுக்க வலம்வருவேன்
பகலவன் ஒளியை உள்வாங்கிப்
படைத்திடும் உணவைப் போல்நானும்
அகம்நிறை தமிழின் துணையுடனே
அற்புதக் கவிகள் படைத்தளிப்பேன்
சிகரமாய் ஒருநாள் எழுந்தாலும்
சிந்தையில் பணிவைக் கற்றிடுவேன்!

7
**நானோர் தமிழேந்தி**

கற்கையில் நானோர் கையேந்தி!
கற்பனை தேடும் கவியேந்தி!
அற்பரின் சேர்க்கை விலக்கிவைத்தே
ஆய்ந்திடும் வெண்பாப் புகழேந்தி!
சொற்பதம் அறிய தினமோடிச்
சொக்கனை வணங்கும் குறளேந்தி!
பற்பல ஆக்கம் செய்திடவே
பற்றெலாம் கொண்ட தமிழேந்தி

8
**கம்பன் வழி செல்வேன்**

தமிழ்தனைக் கையில் ஏந்திடுவேன்
தரணியில் அவளைப் பரப்பிடுவேன்
அமிழ்தென அவளைத் தினமுண்டே
அவனியில் நானும் நிலைத்திடுவேன்
குமிழென முடியும் வாழ்க்கையிலே
குதித்திடும் மனிதப் பதர்களின்முன்
நிமிர்ந்திடும் இமயப் பொருப்பாகி
நீள்புகழ் கம்பன் வழிசெல்வேன்

9
**நம்பிக்கையால் வளர்வேன்**

கம்பனின் விருத்தம் நான்படித்தே
கருமுகில் மழையாய்க் கவிவடிப்பேன்!
வம்பனாம் ஒட்டக் கூத்தரென
வருபவர் மூக்கை நானுடைப்பேன்
கொம்பினை உடைத்து நூற்செய்த
குலமகன் துணையால் நான்வெல்வேன்
நம்பியே வந்த நல்லோரின்
நம்பிக்கை யாலே நான்வளர்வேன்!

10
**மயங்குதல் தொலைப்பேன்**

நானெதும் புதிதாய்ப் படைப்பதில்லை
நற்றமிழ் மொழியைச் சிதைப்பதில்லை
ஏனென எதையும் கேட்டுநின்றே
எதற்குமே தலையைச் சொரிவதில்லை
தேனென இனிக்கும் செந்தமிழைத்
தெருவினில் இழுத்து விடுவதில்லை
மானென ஈற்றில் வாழுரில்
மயங்குதல் தொலைத்தே வாழுகிறேன்!

## நான் - கண்ணீர் - தனிமை

நான் கடந்துபோகிறேன்
கடந்துபோகிறேன்
எல்லாவற்றையும் மறந்து
கடந்துபோகிறேன்
கடந்து போகிறேன்
கடந்து போகையில்
இழப்புகள் எண்ணி
நான் உடைந்து போகிறேன்
உடைந்து போகிறேன்
உடைந்து போகையில்
கண்ணின் நீரருவியில்
நான் நனைந்து போகிறேன்
நனைந்து போகிறேன்

கண்ணின் நீரைத்
துடைக்கும் இதயமெங்கே
இதயமெங்கே

கண்ணின் நீர்கண்டு
துடிக்கின்ற இதயமெங்கே
இதயமெங்கே

யாருமற்ற பாலையில்
நடந்து போகும்
உணர்வில் வீழ்கிறேன்
கைபிடித்து நானிருக்கேன்
சொல்லும் இதயமெங்கே
இதயமெங்கே

‘யாரிடமும் எதையும்
எதிர்பார்க்காதே சுதந்திரமாய் இரு‘
சுவாமி விவேகானந்தர்-
வரிகளை துணையாக்கி
தனிமையில் ஆழ்கிறேன்
தனிமையில் ஆழ்கிறேன்
என் எழுத்துகளால் வாழ்கிறேன்
என் எழுத்துகளால் வாழ்கிறேன்

**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு



# நம்பிக்கை

ஆர்.சாந்தி,

தூத்துக்குடி.

மேலூர் அருகேயுள்ள சொக்கம் பட்டி கிராமத்தைச் சேர்ந்தவன் மணி மாறன். அங்கேயே பிறந்து, வளர்ந்து பெட்டிக்கடை நடத்தி வந்தான். வியாபாரம் பெரிய அளவில் இல்லை யென்றாலும், ஓரளவு வருமானம் வரும்நிலையில் வீட்டில் மணிமாறனுக்கு வரன் பார்க்க ஆரம்பித்தனர். மதுரையைச் சேர்ந்த செளந்தர்யாவைப் பெண் பார்க்கச் சென்றபோது, அவளது குயில் போன்ற குரலின் இனிமையில் மணிமாறன் மயங்கினான். அடுத்து வந்த முகூர்த்த நாளில் இருவருக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பெட்டிக்கடை வியாபாரம் என்றால் சில இடங்களில் வியாபாரம் நன்றாக நடக்கும். ஆனால் மணிமாறனின் கடை வியாபாரம் ரொம்பவும் சுமாராகவே இருந்தது.

அவர்களின் இல்லறத்தின் இனிமையில், ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள் செளந்தர்யா.

சில வருடங்களுக்குப் பிறகு...

‘ஏங்க, நாம இந்த ஊர்ல விவசாயம் பார்த்தாப் பரவாயில்லை.. இந்த வருஷம் இல்லைனா அடுத்த வருஷம் விளைச்சலைப் பெருக்கி, வருமானம் பாக்கலாம்னு நினைக்கலாம். ஆனா, பெட்டிக்கடைன்னா இன்னும் எத்தனை வருசம் ஆனாலும், இவ்ளோதானே வருமானம் வரும். அதனால, நாம மதுரைக்குப் போய் அங்க ஜவுளி வியாபாரம் பாக்கலாமான்னு நெனைக்கேன்... முதல்ல கொஞ்சம் வியாபாரம் டல்லாத்தான் இருக்கும். அப்புறம் போகப்போகச் சரியாகிடும்.. நல்லா யோசிங்கப்பா...‘ மனைவி செளந்தர்யா மந்திரியாக மாறி ஆலோசனை வழங்கினாள். அவளது ஆலோசனை சரியாகப்பட..... மனைவி, குழந்தையோடு மதுரைக்கு இடம் மாறினான் மணிமாறன்.

மதுரையில் ஒரு கடையைப் பிடித்து, செளந்தர்யாவின் உறவினர்கள் மூலமாக சூரத்திற்குப் போய், அங்கே மொத்தமாக ஜவுளி வாங்கி, செளந்தர்யா துணிக்கடை என்று பேர் வைத்து தொழிலைத் துவங்கினான். சின்ன கடைதான். ஆனால் வியாபாரம் நன்றாக நடக்க, நாட்கள் இனிமையாகப் போனது.

நிறைய நாட்கள் செளந்தர்யாவும் கடைக்கு வந்து வியாபாரத்தைக் கவனித்து மணிமாறனுக்கு ஒத்தாசையாக இருந்தாள்.

‘ஏங்க, வியாபாரம் கொஞ்சம் கொஞ்சமா முன்னேறி வர்றது மனசுக்கு நிறைவா இருக்கில்ல...‘ சிரித்த முகத்துடன் செளந்தர்யா கேட்க,

‘ஆமா தங்கம்... எனக்கும் ரொம்ப சந்தோசமா இருக்கு. அதுக்கு முக்கிய காரணம் உன்னோட குயிலான குரல் தான்... நீ கஸ்டமர்கிட்ட பேசறப்பவே இவ்ளோ இனிமையா இருக்கே... இதுவே நீ பாட்டுப் பாடினா கேட்கறதுக்கு

எவ்ளோ சுகமா இருக்கும்... உன்னை ஒருநாள் பாடவச்சிக் கேக்கணும்னு ஆசையா இருக்குடி...'

'என்னங்க நீங்க, காலை நேரத்தில இதுபோல விளையாடிகிட்டு...' சௌந்தர்யா வெட்கப்பட,

'நிஜமாதாண்டி சொல்றேன்... உன் குரலில் ஒரு வசியம் இருக்குடி' அவன் தீர்மானமாய்ச் சொன்னான்.

'சரி சரி, அத விடுங்க... போனமுறை தீபாவளிக்கு நம்ம கடையில துணிகள் நிறைய விற்றதால, நமக்குக் கடன் பிரச்சினை கொஞ்சம் குறைஞ்சிருக்கு. ஐயா கருப்பசாமி புண்ணியத்தில இந்த முறையும் அதேபோல விற்பனை இருக்கணும்...' அன்பு மனைவி சௌந்தர்யா கரிசனத்தோடு சொல்ல,

'ஆமாண்டி செல்லம், எல்லாம் நான் உன்னை மனைவியாகக் கை பிடித்த நல்ல நேரம்தான். இதேபோல வியாபாரம் நடந்தாலே போதும், நமக்கு நல்ல காலம்தான்.. நம்ம பிள்ளையையும் நல்லாப் படிக்க வைச்சிடலாம்.. ' கண்களில் கனவு தெரிய, 'சரி, நேரமாகுது... நான் கடைக்கு கிளம்பறேன்..' சௌந்தர்யாவின் கன்னத்தை ஆசையோடு மீண்டும் கிள்ளி விட்டு, குழந்தையையும் கொஞ்சி விட்டு கடைக்குக் கிளம்பினான் மணிமாறன். அன்புக் கணவனைக் காதலோடு பார்த்தாள் சௌந்தர்யா.

வாழ்க்கை பூர்த்தியாகத் தொடங்கியது போல் இருந்தது.

கடையைத் திறந்து கடை ஊழியர் களிடம் அன்றைய வேலைகள் குறித்துப் பேசிய மணிமாறன், அன்றைய தினத்தின் முதல் வியாபாரத்தைத் துவக்கிப் பில் போட்டான்.

அப்போது, குடோனிலிருந்து வந்த ஊழியரொருவர்,

'அண்ணே, நம்ம குடோன்ல, வயர் எரிஞ்சி புகைவாசனை வந்தா எப்படியிருக்குமோ, அதுபோல வாசனை சில சமயம் வருது... இன்னைக்கு என்னவோ வாசனை அதிகமா தெரியுது..'என்றார்.

'இதெல்லாம் உடனே சொல்ல மாட்டீங்களா தம்பி..?' பதறினான் மணிமாறன்.

'சூப்பர்வைசர் கிட்ட இத பத்தி போன வாரம் கூட சொன்னேனே '

'அப்படியா... அவர் சொல்ல மறந்து இருப்பாரு. பரவால்ல, விடு. நான் போய் என்னன்னு பார்க்கிறேன்.'

சொல்லிக்கொண்டே விரைவாய் குடோனுக்குள் சென்றான் மணிமாறன். கருகும் வாசனை சற்று தூக்கலாகவே தெரிந்தது.

அங்கிருந்த ஒரு ஊழியரை அழைத்து 'இபி ஆபீஸ்ல போய் இதை பத்தி கொஞ்சம் சொல்லிட்டு வா' என சொன்னவாறே, அடுக்கி வைத்திருந்த மூட்டைகளை அசைக்காதவாறு மெதுவாய் நுழைந்து வாசனை வரும் இடம் தேடினான். ஒரு சில நிமிடங்களில் கடையில் புகைமூட்டம் சூழ ஆரம்பிக்க, மணிமாறனுக்கு மூச்சுத் திணற, விரைவாய் வெளியில் வர எத்தனிக்கையில், மூட்டைகள் சரிந்து அவன் மீது விழுந்த அந்த நொடியில் குப்பென மூட்டைகளைச் சுற்றி தீ பற்றியது.

..................

குடோனுக்குள் ஏற்பட்ட மின்கசிவால்... தீவிபத்தில் சிக்கி மணிமாறன் கரிக்

கட்டையானான் என்ற செய்தி மட்டுமே சௌந்தர்யாவுக்கு வந்து சேர்ந்தது! சௌந்தர்யா அழுது புரண்டு தவித்து தடுமாறினாள். வாழ்க்கை கேள்விக்குறியானது.. மகன் வெங்கட்டின் பட்டுமுகம் மனதைப் பிசைந்தது. கணவனின் இழப்பு, வீட்டு வாடகை, குழந்தையின் எதிர்காலம், இதர வீட்டுச் செலவு.... எல்லாமாகச் சேர்ந்து அவளைப் பயமுறுத்தியது.

கணவன் இல்லாத வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியாத அதே நேரத்தில், குழந்தையின் முகம் அவளை நிதானப்படுத்தியது.

கடைக்குள் தீயில் சிக்கி எரியாமல் மீதமிருக்கும் துணிகளைக் கொண்டு, வேறு இடத்தில் நடைபாதைக் கடை போட்டாலென்ன...? அந்த வியாபாரத்தி லும் சம்பாதிப்பவர்கள் இருக்கிறார் களே... எண்ணத்தைச் செயலாக்கினாள் சௌந்தர்யா.

கடையின் இன்சூரன்ஸ் பணமும், பொருளாதாரத்தை சரி செய்யும் நம்பிக்கையை கொடுத்தது.

இருந்தாலும் அவளது மனம்,

'நான் கண்ட கனவென்ன..? இன்னைக்கு இருக்கும் இருப்பென்ன..? பெரிய கடைகள், ஆன்லைன் வியாபாரம், என எத்தனையோ விசயங்கள் இருக்குறப்போ, என்னோட நடை பாதைக் கடையில் யார் துணி வாங்குவாங்க...? எப்படிப் பிள்ளையை வளர்க்கப் போறேனோ தெரியலையே...' வேதனையில் உழன்றது. கணவனை மனதிற்குள் நினைத்து கும்பிட் டாள். ஒருவழியாக மனதைத் தேற்றிக் கொண்டு வியாபாரத்தைக் கவனிக்க ஆரம்பித்தாள் சௌந்தர்யா.

ஆடைகளின் வகைகளை அழகான வர்ணனையோடு, ஒரு பாடலைப் பாடுவது போல், சத்தமாகக் குரல் எழுப்பி விற்பாள் சௌந்தர்யா.

இன்றைக்கென்னவோ.... காலையி லிருந்தே துணி வாங்க ஒருவருமே வரவில்லை. கூவிக்கூவி வருவோர், போவோரையெல்லாம் அழைத்தாள். அவளது குரலில் குயிலின் இனிமை அப்படியே இருந்தது..

'போலீசுக்கு ரெண்டு நாளா மாமூல் கொடுக்கல, பால்காரர் காலையிலே பணம் கேட்டார்.... தீபாவளி வேற வருது.. கடவுளே, என்ன செய்ய போறேன்..?' மனதுக்குள் வேதனை அலையடித்தது.

அவளது குரல் தொடர்ந்து ஒரு பாடலைப் பாடுவது போல் சேலைகளின் தரம் பற்றி சொல்லிக்கொண்டேயிருந்தது... சிலர் திரும்பிப் பார்த்தனர். அவளின் குரலின் அழகை ரசித்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த கார் ஒன்று சௌந்தர்யாவின் கடையருகே ஒதுங்கியது. காரிலிருந்து ஒரு பெரியவர் இறங்கினார்.

இறங்கிய வேகத்தில்,

'என்னம்மா, சேலையெல்லாம் புதுசு தான..? இந்த மஞ்சள் கலர் சேலை என்ன விலை...?' என்று கேட்டார்.

'வாங்கய்யா, இந்த சேலை மார்கெட்ல புதுசா வந்திருக்கு.. ரொம்ப வெய்ட்டா இருக்காது. விலை குறைவுதான்... பாருங்க... இதுக்கு சட்டைத் துணி ஃப்ரிதான்.. வாங்குங்கய்யா..' சேலை விற்க வேண்டுமென்ற பரபரப்பில் சௌந்தர்யா பேசினாள்.

பெரியவர் சேலையைக் கையில் வாங்காமல், அவளது குரலை ரசித்தார்.

‘ஐயா, இந்த சேலை உங்களுக்குப் பிடிச்சிருக்கா..?‘

‘பிடிச்சிருக்கும்மா. ஆனால் சேலையை விட, உன்னோட குரல்தான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு... ரசிச்சுக் கேட்டேன். அதனால்தான் காரை இந்தப் பக்கமா நிறுத்தினேன்...‘

‘என்னய்யா சொல்றீங்க...? வயசில பெரியவரா இருக்கீங்க.. நீங்க இப்படிப் பேசலாமா...?‘ சற்றே பயந்தாள் சௌந்தர்யா.

‘அம்மா.. பயப்படாத தாயி.... என் பேரு ராமச்சந்திரன். நான் ஒரு ஆடியோ கம்பெனி நடத்திட்டிருக்கேன்.. நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்கம்மா.. இவ்ளோ அருமையான உங்களோட குரல் வளம், இப்படி நடைபாதைக் கடை வியாபாரத்துக்காகக் கூவி அழைக்கற தோட முடிஞ்சி போயிடக் கூடாதுனு நினைச்சு தான் நான் உன்கிட்ட பேசிகிட்டு இருக்கேன். இப்போல்லாம் எந்த ஒரு வியாபாரத்துக்கும் விளம்பரம் தேவைப்படுது, விளம்பரம் இல்லாத வியாபாரமே இல்லைன்னு கூடச் சொல்லலாம். அதனால நீங்க என்னோட கம்பெனில வேலைக்குச் சேர்ந்து கம்பெனி விளம்பரங்களுக்கு குரல் கொடுக்கலாம். அதோட முறையாப் பயிற்சி எடுத்து கத்துக்கிட்டா உங்களால பாடவும் முடியும்..‘ பெரியவர் உதவும் மனப்பான்மையோடு சொல்ல,

‘ஐயா.. என்னய்யா சொல்றீங்க....? எனக்குப் பாட்டெல்லாம் பாட வராது...‘ தழுதழுத்தாள் சௌந்தர்யா.

‘மனசில உறுதியோடு முயற்சியும், பயிற்சியும் எடுத்தா வந்திடும்மா... பிறந்த வுடனே குழந்தை எழுந்து நடக்குமா...? இல்லையே... விதை போட்டவுடனே மரத்தில பழம் பழுக்குதா...? இல்லையே... நம்பிக்கை தானேம்மா வாழ்க்கை.. நீங்களும் நம்பிக்கையோட முறையாப் பயிற்சி எடுத்துக்கிட்டா நல்லாப் பாடுவீங்க.. எனக்கு உங்கமேல நம்பிக்கை யிருக்கும்மா.. கொஞ்சம் நான் சொல் றதைக் கேட்டு முயற்சி செய்துதான் பாருங்களேன்.. நிச்சயமா நீங்க பின்னாடி ஒரு நாள் பெரிய பாடகியா வருவீங்க...‘ பெரியவர் ராமச்சந்திரன் ஊக்கமளித்துப் பேச,

‘சரிங்க ஐயா.. நீங்க இவ்ளோ அக்கறை யாச் சொல்றீங்க... முயற்சி எடுக்குறேங்க...‘ நம்பிக்கையோடு பதிலளித்தாள் சௌந் தர்யா.

அவரின் முகவரியை வாங்கிக் கொண்டு நாளை வந்து பார்ப்பதாகச் சொன்னாள்.

வானம் மின்னிற்று!.

’மதுரை கருப்பசாமி ஐயா.... எனக்கு இவ்ளோ பெரிய யோகத்தைக் கொடுப்பார்னு நான் கனவிலே கூட நெனைச்சிப் பாக்கலியே...’ என யோசித்தவள், கணவனை நினைத்து கண் கலங்கினாள். ’நம்ம பிள்ளைக்காக தான் நான் வாழ்றேங்க. நீங்க ரசித்த உங்க சௌந்தர்யாவோட குரல்தான்... என்னை உலகத்துக்கு அறிமுகப்படுத்தப் போகுதுங்க.’ மனம் விம்மிற்று. ’தெய்வமாயிருந்து நீங்கதான் என்னையும், புள்ளையையும் ஆசிர்வதிக்கணும்...’ ஆண்ட வனுக்கும், கணவனுக்கும் ஒரே நேரத்தில் நன்றி சொன்னாள் சௌந்தர்யா.

நட்சத்திரங்கள் கண் சிமிட்டின.!

(முற்றும்) ■

# கடவுள் கிடைக்காத சொல்

சாலையை பார்த்தபடி
அமர்ந்திருக்கும் என் பின்னேதான்
அவரும் அமர்த்திருக்கிறார்
என்னைப் பார்த்த அனைவரும்
வணக்கம் சொல்வதும்
அவரைப் பார்த்து
உதட்டையும் மார்பையும்
ஒன்று சேரத் தொட்டு செல்வதும்
எனக்கு ஆச்சர்யமகத்தான் இருந்தது...

அப்படியென்ன அவரிடம்
நான் வெளியே நிற்கிறேன்
அவர்
அறைக்குள் பூட்டப்பட்டுள்ளார்
நான் புன்னகைத்தாலும்
சோகமுற்றாலும்
அவர் முகத்தில்
எந்த மாற்றமுமில்லை

நான் அசைந்து நிமிரும் பொழுதெல்லாம்
அவர் அந்த இடத்தை விட்டு
நகர இயலவில்லை
ஆனாலும் ஏதோவொன்று அங்கு அவரிடம்...

மறுநாள் பார்த்தேன்
நீராட்ட ஒருவன்
பூக்களை தொடுக்க ஒருவன்
இப்படி சீராட்டிட தோன்றும்
அவனிடம்
அப்படியென்ன உள்ளது

அம்மாவிடம் அவ்வப்போது
வினவும் பொழுதெல்லாம்
கேட்பதையெல்லாம் கொடுப்பவர் என்றாள்
அம்மாவின் நிம்மதியான தூக்கம்
இதுவரை நீடித்ததே இல்லை

அப்பாவிடம் கேட்டால்
அவர்தான் உலகிற்கே எல்லாம் என்றார்
இன்றும்
அவப்பாவின் முதுகவலிக்கு
நான்தான் தைலம் போட்டுவிடுகிறேன்

அக்காள் இருவரும்
ஒரு பூசை விடுவதில்லை
ஆனாலும், அவ்வப்போது
அழைப்பில் கவலைகளை பகிர்வர் இருவரும்...

எல்லாம் என் பின்னால்
இருப்பவனென்றால்
எனது உதட்டிற்கும்
மார்பிற்கும் இடையே தோன்றிய
ஒன்றினை
மார்பிற்கு கீழ் உள்ள உறுப்பு
எப்படி கண்டிறும்
ஆனாலும் கையேந்தி வேண்டிக் கொண்டுதான்
இருக்கிறார்கள்
கடவுளெனப் பெயர் வைத்து
முடிமுதல் அடிவரை கற்களால்
கரு வண்ணம் பூசிய கடவு
கிடைக்காத சொல்லென்றினை....!

**சே கார்கவி கார்த்திக்**
நாகப்பட்டினம்



இலங்கை தர்காநகர்
மர்ஹூமா ஷஹ்னா ஸப்வானின்

# ‘எரியும் நட்சத்திரம்’

### கவிதை நூல் விமர்சனம்

வெலிகம ரிம்ஸா முஹம்மத் (பன்னூலாசிரியர்)




சங்க காலத்தில் தமிழ் இலக்கிய மரபானது செய்யுள் இலக்கியமாகப் படைக்கப்பட்டு வந்துள்ளன. அக்கால புலவர்களின் கவிதைகள் கருத்துச் செறிவும் சொற்செறிவும் மிக்கனவாகக் காணப் பட்டன. அதன்பின்னரான காலப் பகுதிகளில் மரபுக் கவிதை, வசன கவிதை, புதுக் கவிதை, நவீன கவிதை, பின் நவீனத்துவக் கவிதை, தன்முனைக் கவிதை, ஹைக்கூ கவிதை என படித்தரங்கள் மாற்றமடைந்து வந்துள்ளன.

செய்யுள் இலக்கியங்கள் கற்றோருக்கு மாத்திரமே புரிந்த காலம் மாறி பாரதியாரின் காலத்தில் எழுதப்பட்ட உரைநடைக் கவிதைகள், பெரும்பாலான மக்களிடத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றன. பிற்காலத்தில் பிரதேச மொழி நடையில் எழுதப்படும் படைப்புகள், வாசிப்பின் மீதுள்ள ஆர்வத்தைத் தூண்டியது எனலாம்.

இலங்கை தென் மாகாணத்தைப் பொறுத்தளவில் எழுத்து மொழிக்கும், பேச்சு மொழிக்கும் பாரியளவு வித்தியாசங்கள் காணப்படுகின்றது. சில சமயங்களில் பேச்சினிடையே சிங்களச் சொற்களும் ஊடுருவிக் காணப்படுகிறது. படைப்பாக்கத்தின் போது பிரதேச மொழி வழக்கை வாசகர்கள் விரும்புவதால் படைப்பாளர்கள் அதில் அதிக கவனம் செலுத்தலாயினர். அதேபோல தென்னிலங்கைப் படைப்பாளிகள் கவிதைகள் மீது அதிக முனைப்புக்காட்டி வந்துள்ளனர். இதில் ஆன்மீகம் சார்ந்த அதாவது பக்தி இலக்கியங்களே மிகவும் முக்கியத்துவம் பெற்றுக் காணப்பட்டன.

தென்னிலங்கை என்ற வரையறைக்குள் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களே உள்ளடங்குகிறது. எனினும் மறைந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் ’ஈழத்து தமிழ் இலக்கியத் தடம்” என்ற தனது நூலில் தென்னிலங்கை என்பது இலக்கிய ரீதியாக பாணந்துறை முதல் திக்குவல்லை வரையான பிரதேசம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தென்னிலங்கையின் முன்னோடிக் கவிஞர்கள் என்று நோக்கும் போது அதில் மிக முக்கியமான கவிஞர்களாக கவிஞர் ஏ. இக்பால் மற்றும் திக்குவல்லைக்

கமால் ஆகியோர்களைப் பிரதானமாகக் குறிப்பிடலாம்.

ஆக்க இலக்கியங்களைப் படைப்பதிலும் அதனை இரசிப்பதிலும் மிகவும் சுருங்கிப்போன வாசிப்பு வட்டத்தைக் கொண்டுள்ள இன்றைய காலகட்டங்களில் அதிலும் பல்வேறு வகையான வேலைப் பளுக்களுக்கு மத்தியிலும் பெண்களின் ஈடுபாடு இத்துறையில் மிகவும் குறைவாகவே இருந்து வருகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் இலக்கியத் துறையில் சிறப்பாகத் தடம் பதித்து தனக்கென்று ஒரு தனியான இடத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்கு பாரிய அர்ப்பணிப்புகள் தேவைப்படுகின்றது. இத்துறையில் தொடர்ந்து இயங்குவதாலேயே நிலைத்து நிற்க முடியும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இன்று வெளியிடப்படுகின்ற "எரியும் நட்சத்திரம்" கவிதை நூலாசிரியர் தர்கா நகர் ஷஹ்னா ஸப்வானும் தென்னிலங்கையைச் சேர்ந்தவராகின்றார். இவர் சிறுவயதிலிருந்தே இலக்கியத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர் என்பதை அவருடைய 'எரியும் நட்சத்திரம்" கவிதைத் தொகுதி மூலம் தெரிந்து கொண்டேன். பாடசாலைக் காலத்திலிருந்தும் அதற்குப் பின்னரான காலப் பகுதியிலிருந்தும் இவருக்கு கவிதைத் துறை மீது ஒரு அலாதியான ஈடுபாடு இருந்திருக்கிறது. அத்துடன் இத்துறையில் தனது பெயரையும் பதிக்க வேண்டும் என்பதுவும் ஷஹ்னா ஸப்வானின் ஆசையாக இருந்திருக்கிறது. இவருடைய இந்த விருப்பத்தின் வெளிப்பாடாகவே "எரியும் நட்சத்திரம்" என்ற இந்தக் கவிதைத் தொகுதி 113 பக்கங்களை உள்ளடக்கியதாக வெளி வந்துள்ளது.

இந்தப் பெண் கவிஞர் எங்கள் எல்லோரையும் விட்டு மறைந்துவிட்டார். இனி எங்களுக்கென்ன என்று நினைக்காமல் இவருடைய கவிதைகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்தெடுத்து, இவருடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் வகையில் 'இளம் தாரகையின் தூரிகை" என்ற குழும உறுப்பினர்களான இவருடைய நண்பர் குழாம் இந்தக் கவிதை நூலை வெளியிட்டு வைப்பது பெரும் மகிழ்வுக்குரியது, பாராட்டுக்குரியது. இந்தப் பணிக்கு மிகவும் உறுதுணையாக இருந்த களுஃ ஸாஹிரா கல்லூரியின் பிரதி அதிபரான, நூலாசிரியரின் தந்தை ஏ.எச்.எம். ஸப்வான் அவர்களும் பாராட்டுக்குரியவர்.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள வலம்புரி கவிதா வட்டத் தலைவர் கவிஞர் என். நஜ்முல் ஹுசைன் அவர்கள் நூலாசிரியர் ஷஹ்னா ஸப்வான் பற்றிக் குறிப்பிடும் போது,

விடை கொடுத்துச் சிறகடித்தாள்
ஷஹ்னா ஸப்வான்..
கவிதை நடைக்குள்ளே
சிறைப்பிடித்துத் தொட்டாள்
தொடுவான்..

என்று குறிப்பிட்டு நூலாசிரியரின் சில கவிதைகளை நயந்து தனது கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். நஜ்முல் ஹுசைன் அவர்களின் அணிந்துரையில் குறிப்பிட்டிருப்பது போல எம்மை விட்டும் பிரிந்து சென்ற, அதுவும் இளமையில், அதுவும் திருமணம் முடித்து ஆறே மாதங்களில் இந்த உலகிற்கு விடை கொடுத்த இந்தப் பெண் கவிஞர் ஷஹ்னா ஸப்வான் அவர்களை நினைக்கும் போது உண்மையில் எனது மனதும் கனத்தே போகின்றது. மட்டுமல்லாமல் இந்தக் கவிதை நூலினூடாக கவிதை உலகில் நிறையச் சாதிக்க வேண்டும் என்ற தனது ஆசையைப்

பதிவு செய்து ஷஹ்னா ஸப்வான் எனது விழிகளிலும் கண்ணீரைத் தேங்க வைத்துவிட்டார்.

அடுத்து தமிழ்நெஞ்சம் சஞ்சிகை யாசிரியர் அமினின் ''மனதினிலே நிலைத்திருப்பாய் நீண்டு'' என்ற தலைப்பில் அமைந்த நீண்ட வாழ்த்து (33 வெண்பா) இந்த நூலை அலங்கரிக்கின்றது. அந்தக் வாழ்த்துக் கவிதையின் சில பகுதிகள் இதோ :-

போட்ட விதை எல்லாம்
புவியில் பரிணமித்து
பாட்டு மலராக பவனி
வர - ஏட்டிலுள்ள
சங்க மொழி வாசமுன்னை
சந்திக்கத் தேடியதே
எங்கு நீ சென்றாய்
இயம்பு?

காயத்தைத் தந்து கடந்தமையால்
பாட்டா லுன்
நேயத்தைத் தந்து நிறைந்த
மையால் - நீயளித்த
பங்கில் உனை வையும்,
பாராட்டும் சப்தத்தை
எங்கிருந்து கேட்பாய்
இயம்பு?

என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு எம் மனதையும் கவலையில் ஆழ்த்துகின்றார் வெண்பாவில் தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள்.

தர்காநகர் க஌ஃ அல் ஹம்றா மகா வித்தியாலய முன்னாள் அதிபர் எம்.இஸட்.எம். நயீம் அவர்கள், அல் ஹம்றாவின் 'பழைய மாணவி'' ஷஹ்னா ஸப்வான் என்று குறிப்பிட்டு தனது ஆசியுரையை வழங்கியுள்ளார். அதில் ஷஹ்னா ஸப்வான், கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் தனது ஓய்வு நேரத்தை முழுமையாகக் கவிதை புனைவதில் ஈடுபடுத்தி வந்தார். அவரது கவிதைகள் புதுமையும் ஆழ மான கருத்துக்களையும் கொண்டு விளங்கின. இவர் தேசிய மட்டத்திலான கவிதைப் போட்டிகளில் பங்கு கொண்டு பாராட்டுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கது என்று கூறி புகழாரம் சூட்டியுள்ளார்.

மற்றும் ஒரு வாழ்த்துரையை நூலா சிரியருக்கு கற்பித்த ஆசிரியையான தர்காநகர் க஌ஃ அல் ஹம்றா மகா வித்தியாலயத்தின் உப அதிபர் எம்.எம்.எஸ். பரூஸா வழங்கியுள்ளார். ஷஹ்னாவின் முதலாம், இரண்டாம் தர ஆசிரியையாய் கற்பித்த அவர் - அந்தப் பிஞ்சுப் பூவின் இதழ் விரல்களைப் பற்றிப் பிடித்து அச்சரம் பழக்கிய ஞாபகம் என் உள்ளத்திலே இன்றும் ஆழப் பதிந்துள்ளது. என் உள்ளத்தோடு ஒன்றித்த ஷஹ்னாவின் கவிதைகளும் கவிதைகள் வெளிப்படுத்திய கருத்துகளும் உலகமே படித்து வியந்தபோது இரண்டாம் தாயாய் நானும் வியந்து பெருமிதம் அடைந்தேன் என்கிறார்.

அடுத்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன அறிவிப்பாளரும் ஆசிரியையுமான ஸில்மியா ஹாதி அவர்களும் ஒரு வாழ்த்துரையை வழங்கியுள்ளார். அதில். 'இது இலை மறைத்த காயல்ல. மரம் மறைத்த வித்து. எழுந்து ஒவ்வொன்றாய் பளபளக்கும் பச்சைத் தளிர்களை உலகுக்கு நீட்டி, அழகு காட்டி, துளிர்விடும் போது தானா உலர்ந்து போக வேண்டும்? காலடியில் வைரங்கள் ஒளிர்ந்திருப்பது பூமியை மிதித்துச் செல்லும் எங்களுக்கு தெரியாமலே போயிற்றே' என்று ஆதங்கப்படுகின்றார்.

"எரியும் நட்சத்திரம்" கவிதைத் தொகுதி யின் உள்ளடக்கமானது - எழுத்துலகம், மனதோடு கொஞ்சம், நேசம், குடும்பம் ஆகிய நான்கு உப தலைப்புக்களில் முன்வைக்கப்பட்டுள்ளன. நூலில் இடம் பிடித்துள்ள இவருடைய கவிதைத் தலைப்புகளைப் பொதுவாக நோக்கும் போது காலத்துக்குத் தேவையான, யதார்த்தமான பாடுபொருள்களைப் பிரதி பலிக்கின்ற பல்வேறு வகையான தலைப்பு களில் அமைந்துள்ளது.

"எரியும் நட்சத்திரம்" ஷஹ்னா ஸப்வா னின் கன்னிக் கவிதைத் தொகுதியாகும். இந்த நூலிலுள்ள பல கவிதைகள் இது கன்னிக் கவிதைத் தொகுதி என்பதைப் பறை சாற்றி நின்றாலும்கூட சில கவிதைகள் கவிதைக்கேயுரிய இலக்க ணங்களைப் பின்பற்றி கனதியான முறையில் சிறப்பாக அமைந்துள்ளது என்று உறுதியாகக் கூறலாம். அகம் சார;ந்த மன உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற கவிதைகளைத் தேடி வாசிப்போர் நிச்சய மாக தர்காநகர் ஷஹ்னா ஸப்வானின் கவிதைகளையும் வாசிக்க முடியும்.

இவர் சில கவிதைகளினூடாகத் தனது மனப்பாரங்களை மொழிபெயர்க்கிறார்.. தனது எதிர்பார்ப்புகள் மற்றும் ஆசைகளை யெல்லாம் வெளிப்படுத்தி இருக்கின்றார். அத்துடன் சக மனிதர்கள் மூலமாக தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் பகிர்ந்து கொள்கின்றார்.. இயற்கை வனப்பையும் கவிதைக் கண்களால் பார்த்து இரசிக்கிறார்.. சிலவற்றில் வாழ்க்கைத் தத்துவங்களையும் முன்வைக்கிறார்.. மறுபக்கம் தனது தாயாருக்காக கண்ணீரும் வடிக்கின்றார்..

மொத்தத்தில் தமிழின் சிறப்பு, மானிட அவலம், நாட்டு நடப்பு, அனுபவப் பாடம், இயற்கையின் வனப்பு, போலி முகம், வாழ்வின் யதார்த்தம், ஆன்மீகம், துரோகம், நட்பின் தூய்மை, பெண்மையின் கண்ணியம், உணர்வுகளின் வெளிப்பாடு, தாய்ப் பாசம் போன்ற கருப்பொருட்கள் இவருடைய கவிதைவெளியை வியாபித்து நிற்கின்றன.

இனி இவருடைய கவிதை நூல்களில் விரிந்து கிடக்கும் கவிதைகள் பலவற்றில் சில கவிதைகளை எடுத்து நோக்குவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக் கின்றேன்.

பக்கம் 01 இல் இடம்பிடித்துள்ள ''எழுதுகோல்'' என்ற முதலாவது கவிதை ஒரு மனிதனின் சிந்தனை சக்தியை எழுத்து வடிவமாக மாற்றும் எழுதுகோலின் பங்களிப்பு பற்றி பேசி நிற்கின்றது. ஒரு கருவியாக எழுதுகோல் காணப்பட்டாலும் அதன் மைத்துளிகள் மனதின் பிரதிபலிப்பாக இருப்பதுவே நிதர்சனமாகின்றது.

தலை குனிந்து எழுதும்
எழுதுகோலினால் தான்..
இங்கு பலரின் வாழ்க்கை
தலை நிமிர்ந்து நிற்கின்றது..

சில நேரங்களில் அவரவர் வரிகள்
அவரவருக்கே ஆறுதலாகின்றன..
எழுத்தாளனின் எழுதுகோல்
சிந்திய எழுத்துக்கள்
ஒரு பொழுதும் திகட்டாது..

கையெழுத்தை சீராக்கி
தலையெழுத்தை உயர்வாக்கி
மையெழுத்தை அழகாக்கும்
அகிலத்தையயே சிறப்பிக்கும்..

என்ற கவிஞரின் வரிகள் மூலம் "எழுதுகோல்" பற்றிய தனது கருத்தைப் பதிவு செய்கின்றார்.

அடுத்ததாக பக்கம் 7 இல் அமைந்துள்ள 'யாவும் எனக்கு கவிதை தான்'' என்ற கவிதையினூடாக நமது கவிஞர் எல்லா வற்றையும் தனது கவிதைக் கண் கொண்டு பார்க்கின்றார்.

பாரதி தொட்டு அத்துனையுமே இங்கு
எனக்குக் கவிதை தான்..
காற்று, மரங்கள், பூக்கள் இவையெல்லாம்
எனக்குக் கவிதை தான்..
சுட்டெரிக்கும் சூரியனும்
எனக்கு கவிதை தான்..
கலைந்து செல்லும் மேகங்களும்
எனக்குக் கவிதை தான்..
இரவில் எரியும் விண்மீன்களும்
எனக்குக் கவிதை தான்..
இரவை துவைக்கும் விடியலும்
எனக்குக் கவிதை தான்..

என்று இவர் அனைத்தையும் தனது கவிதைக் கண் கொண்டே பார்க்கின்றார்.

அடுத்ததாக பக்கம் 28 லுள்ள 'அடையாளங்கள்'' என்ற கவிதை மிகவும் எளிமையான சொற்களால் பின்னிப் பிணையப்பட்டுள்ளது. பாமர மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் வாழ்வியல் தத்துவங்களைப் பிரதிபலிப் பதாக இந்தக் கவிதை அமைந்திருக்கிறது.

வியர்வைத் துளிகள் உழைப்பிற்கான
அடையாளங்கள்..
பசியும் தாகமும் கஷ்டத்தின்
அடையாளங்கள்..
நண்பர்கள் நேசத்திற்கான
அடையாளங்கள்..
காத்திருப்புகள் பொறுமையின்
அடையாளங்கள்..

என்று குறிப்பிட்டு இறுதியாக முகத்தின் சுருக்கங்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் என்று தனது கவிதையை நிறைவு செய்கின்றார்.

அடுத்ததாக பக்கம் 38 இல் அமைந் துள்ள 'முகமூடி உலகம்'' என்ற கவிதை யானது சிலர் அணிந்துள்ள முகமூடிகளைக் கழற்றுவதாகவே அமைந்துள்ளது. மேலும் சுயநலமிகளாக வாழ்கின்ற சிலரின் போலி முகங்களை தோலுரித்துக்காட்டுவதாகவும் இக்கவிதை அமைந்துள்ளது. அத்துடன் மாய உலகின் அற்ப ஆசைகளில் மூழ்கி மனிதத் தன்மைய இழந்து வாழ்பவர் களுக்கு ஒரு சாட்டையடியாக இக்கவிதை அமைந்துள்ளது. கவிதையின் சில வரிகள் இதோ:-

உண்மையாக சிலரோடு
உயிராகப் பழகினாலும்
மென்மையாய் சில நேரம்
மெதுவாக அணுகினாலும்
தன்மையே இல்லாமல்
தரமாக மதிப்பதில்லை..
வசந்தத்தின் வாசலில்
வழிமூட முளிக்கின்றார்..
அசைந்திடும் தென்றலுக்கும்
அணை போட முயல்கின்றார்..

அடுத்ததாக பக்கம் 44 இல் அமைந் துள்ள "நேசம்'' என்ற கவிதை யதார்த்த வாழ்வை படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இருளை நேசி விடியல் தெரியும்..
தோல்வியை நேசி வெற்றி தெரியும்..
மக்களை நேசி மனிதாபிமானம் தெரியும்..
தாயை நேசி அன்பு தெரியும்..
அன்பை நேசி அடிமைத்தனம் தெரியும்..
தந்தையை நேசி உழைப்பு தெரியும்..
உழைப்பை நேசி உயர்வு தெரியும்..
உன்னையே நீ நேசி
உலகம் உனக்கு அழகாய் தெரியும்..

இக்கவிதையில் நேசத்தின் மூலம்

நாம் அடையும் பிரதிபலன்கள் சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இனிமை யான சொல்லாடல்களால் இக்கவிதை ஆக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

அடுத்து பக்கம் 55 இல் அமைந்துள்ள "புன்னகை" என்ற கவிதை மனிதர்களைப் பார்த்துப்புன்னகைக்கவேண்டும்என்பதை மீண்டும் ஒருமுறை நினைவு படுத்துவதாய் அமைந்துள்ளது. புன்னகைக்கக்கூட மறந்து போன அவசரமான ஒரு உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். புன்னகை பற்றிய கவிதையின் சில வரிகள் இவ்வாறு அமைந்துள்ளது.

மொழிகளால் நொறுக்கப்படாத
பொதுமொழி புன்னகை..
வார்த்தைகளால் இறுக்கப்படாத
வாய்மொழி புன்னகை..
உள்ளத்தின் விதைகளை
உதட்டில் விரிக்கும்
உன்னத மொழி புன்னகை..
பல் இல்லாக் குழந்தைக்கும்
அழகு புன்னகை..
உதடுகளை விரியுங்கள்..
புன்னகை புரியுங்கள்..

இக் கவிதை புன்னகையின் பரிணாமங் களை எடுத்துச் சொல்வதாகவே அமைந் துள்ளது. புன்னகையே ஒரு மனிதனின் அழகுக்கு இன்னும் அழகு சேர்க்கிறது. இறுக்கமான சூழ்நிலைகளை இலகுவாக்கு கிறது.

ஹிஜாப் எனது கண்ணியம், விடை பெறும் ரமழான், தியாகத் திருநாள், வருடத்திற்கொரு முறை பூக்கும் ரமழானே போன்றஆன்மீகம்சார்ந்தகவிதைகளையும் இந்த 'எரியும் நட்சத்திரம்" கவிதை நூலில் காணலாம்.

அடுத்து பக்கம் 69 இல் அமைந்துள்ள "தியாகத் திருநாள்" என்ற கவிதை நபி இப்றாஹீம் (அலை) அவர்களது தியாகத்தை நினைவுபடுத்துவதாய் அமைந்துள்ளது.

தியாகத்தின் மகத்துவத்தை
உணர்த்தும் இப் பெருநாள்..
நம் தியாகத் திருநாள்
ஹஜ்ஜுப் பெருநாள்..
உலகெங்கும் ஒளியேற்றும்
தியாகத் திருநாள்..
குர்பானி கொடுத்திடும்
சங்கைமிகுத் திருநாளாம்..
இப்ராஹிம் நபியின்
மகத்தான தியாகத்தை
உலகெங்கும் நினைவூட்டும்
பெருநாள் இதுவாம்..

அடுத்ததாகபக்கம்75இல்அமைந்துள்ள ''மழை நாள்'' என்ற கவிதையானது மழையை இரசிக்கும் கவிஞரின் மனதைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந் துள்ளது. மழையை இரசிக்காத கவிதை யுள்ளம் இருக்க முடியாது. மழை தரும் இன்பத்தையும், அழகியலையும் வார்த்தைக்குள் உள்ளடக்கும் திறமை கவிஞர்களுக்கே உரியது. 'மழை நாள்'' என்ற கவிதையின் சில வரிகள் இதோ:-

மழை வரும் நேரம்
மனதில் இன்பம் ஊறும்
சாலை எங்கும் நீரும்
சாகசம் காட்டி ஓடும்..

மழையை இரசித்தே எனக்கும்
கவி கோர்க்கத் தோணும்..
நித்திரா தேவி என்னை அழைக்க
மை கக்கி, எழுத்துச் சிக்கி,
அடிக்கும் காற்றில்
என் வெள்ளைக் காகிதம்
சிறகு முளைத்துப் பறக்கும்..

அடுத்து பக்கம் 92 இல் உள்ள

“நம்பிக்கையுடன் இவள்” என்ற கவிதையில் உள்ள இரண்டு வரிகள் கவிஞர் என்னுடன் பேசுவதாகவே என் மனதுக்குத் தோன்றுகின்றது. அதாவது அந்தக் கவிதையில் வருகின்ற இரண்டு வரியான ’தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்’ என்ற வரி கருத்தொன்றைத் தொக்கி நிற்பதாக எனக்கு நினைக்கத் தோன்றுகின்றது. அதாவது “தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். எனது கவிதைகள் பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் சுதந்திரமாகச் சொல்லுங்கள். அது உங்கள் சுதந்திரம்” என்று ஷஹ்னா ஸப்வான் எம் அனைவருக்கும் சொல்வதாகவே நினைக்கத் தோன்றுகின்றது.

இந்த நூலின் கடைசிப் பகுதியில் தனது தாயாருக்காகவும் ’தாய் மடியைத் தேடுகிறேன்”, ’நீ இல்லாத என் உலகம்”, ’நான் தவிக்கின்றேன் தாயே” ஆகிய மூன்று கவிதைகளை இவர் எழுதியுள்ளார்.

பக்கம் 97 இல் அமைந்துள்ள ’நீ இல்லாத என் உலகம்’’ என்ற கவிதை என் மனதை மிகவும் பாதித்த ஒரு கவிதையாகவே இருக்கின்றது. அதற்குக் காரணம் எனது இருபது வயதுகளில் எனது தாயாரை இழந்த, அந்தத் துயரம் என் மனதை இன்றும் வதைத்துக் கொண்டே இருக்கின்றது. ஷஹ்னாவின் இந்தக் கவிதை என்னை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் எனது தாயாரின் நினைவுகள் மற்றும் எனது தாயாரைப் பிரிந்த மனத் துயரங்களை மொழிபெயர்ப்பதாகவே அமைந்துள்ளது. இக்கவிதையின் சில வரிகளைப் பார்ப்போம்.

பாசமுடன் நீ அளித்த உந்தன்
ஒற்றைப் பிடிச் சோற்றுகாக
இப்பொழுதும் நான்
ஏங்குகிறேன் உம்மா..
நெற்றி வியர்வை சிந்திப் பரிமாறும்
உந்தன் கைப்பக்குவ உணவு
நானறிந்த அமுதத்தின் அசல்தான்
இருந்தும் தவறவிட்டேன்
பல நாட்கள்..

இப்படி எத்தனையோ தொலைத்து விட்ட மனக் கவலைகள் எனக்கும் உண்டு. இங்கே இந்தக் கவிதையோடு என் மனம் மிகவும் ஒன்றித்துப் போய்விட்டது.

இந்தக் கவிதை நூலை வாசிக்கும் அனைவரும் மறைந்த கவியாளுமை ஷஹ்னா ஸப்வானுக்காக கரமேந்திப் பிரார்த்திப்பார்கள் என்பது உறுதி. எல்லாம் வல்ல அல்லாஹ் இவருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் என்ற மேலான சுவனத்தை வழங்குவானாக என்று நானும் இரு கரமேந்திப் பிரார்த்திக்கின்றேன்!!!



# திருக்குறளும்,தன்முனை இயைபுக்கவிதைகளும்

(அறத்துப் பாலில் சில குறட்பாக்களுக்கு மட்டும்)

1)

குறள் - அதிகாரம் 28 - கூடா ஒழுக்கம்

வலிஇல் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று

(குறள் 273)

பொருள் :

தவக்கோலம் பூண்டு மனத்தை அடக்க முடியாதவர்கள், பசுவானது புலியின் தோல் போர்த்திக் கொண்டு மேய்ந்ததுபோலாகும்.

தன் முனைஇயைபுக் கவிதை.

புலித்தோல் போர்த்திய
பசுவின் காட்சி/
பண்பற்ற தவசிகள்
மனத்தின் மாட்சி /

2)

குறள் - அதிகாரம் 31 - வெகுளாமை

இறந்தார் இறந்தார் அனையர், சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை

(குறள் 310)

பொருள் :

கோபத்தைக் கைவிட்டர்வர்கள் துறவிகளுக்கு ஒப்பானவர்கள். கோபத்தைக் கைக்கொள்பவர்கள் இறந்தபிணத்திற்கு சமமானவர்கள்.

தன்முனை இயைபுக் கவிதை

கோபத்தை விட்டாரே.
தவத்தைத் தொட்ட வர்
கோபத்தைத் தொட்டாரோ,
உயிரை விட்டவர்

3)

குறள் - அதிகாரம் 32 - இன்னா செய்யாமை.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர் நாண,
நன்னயம் செய்து விடல்

(குறள் எண்-314)

பொருள் :

தமக்குத் துன்பம் இழைத்தவரையும் தண்டிக்கலாம். எப்படி என்றால், அவருக்கு நன்மை செய்து , அவர் வெட்கப்படும்படியாகச் செய்தலே ஆகும்.

தன்முனை இயைபுக் கவிதை

துன்பம் செய்தார்க்கும்,
இன்பத்தைக்கொடு
வெட்கித் தலைசாயும்,
நிலையில் விடு

4)

குறள் - அதிகாரம் 33 - கொல்லாமை

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை

(குறள் எண் 328)

பொருள் :

மிகப்பெரிய அளவில் பயன்தரும் ஒரு கொலை, என்றாலும்கூட , பண்புடையவர்கள் எவ்வுயிருக்கும் தீங்கு தரும் கொலைச் செயலை விரும்பமாட்டார்கள்.

தன்முனை இயைபுக்கவிதை

பயன்பல தந்தாலும்,
பழிச்செயல்கள் செய்வரோ?
உயிர்க்கொலை செய்வதையும்
உயர்ந்தோர் ஏற்பரோ?

5)
குறள் - அதிகாரம் 34 - நிலையாமை

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்,
போக்கும் அதுவிளிந் தற்று.
(குறள் எண் 332)

பொருள் :

கூத்தாடும் இடத்தில் கூட்டம் கூடும். கூத்து
முடிந்ததும் கூட்டம் கலைந்துவிடும்.
அதுபோல செல்வம் நிலையானதன்று.
சேர்தலும் உண்டு. நீங்குதலும் உண்டு.

தன்முனை இயைபுக் கவிதை.

கூத்து முடிந்ததும்,
கூட்டம் கலைந்திடும்
சேர்த்த செல்வமும்
ஒருநாள் கரைந்திடும்

6)
குறள் - அதிகாரம் 35 - துறவு.

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.
(குறள்- 347)

பொருள் :

பொருளின் மீதோ, உறவின் மீதோ,
ஆசைகள் அதிகம் வைத்து,விடாமல்
பற்றிக்கொண்டிருந்தால்,
துன்பங்களும் நம்மைப் பற்றிக்கொண்டுவிடா.

தன்முனை இயைபுக் கவிதை.

ஆசைகள் வைக்காதே,
அல்லல்கள் ஏற்காதே
ஆசைகள் தள்ளிட,
அல்லல்கள் நெருங்காதே

7)
குறள் - அதிகாரம் 38 - ஊழ்

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது
(குறள் 377)

பொருள் :

தன் முயற்சியால்
கோடிக்கனக்கான செல்வம் சேர்த்தாலும்
அதை நுகரும் வாழ்வு விதியால் அமைகிறது.

தன்முனை இயைபுக் கவிதை.

கோடி செல்வத்திலும்
கூழ்தான் உணவு
கொண்டதை நுகர
ஊழ்தான் திறவு

திருமதி. இரா.இராஜாமணி
ஈரோடு





# மலைக்க வைக்கும் மலேசியா

## பகுதி - 12

மருத்துவர்.க.கலைவேந்தன்

ராஜேந்திர சோழன் கால் பதித்த கடாரங்கொண்டான் என்ற பகுதியையும் ராஜ ராஜ சோழன் கால் பதித்த இலங்கை யிலும் ஒரே வருடத்தில் மூன்று மாத இடைவெளியில் கால் பதித்ததை மிகப் பெரும் பேராகவும் பெருமையாகவும் கருதுகிறேன்... தமிழன் என்பதில் மிக்க பெருமிதம் கொள்கின்றேன்... சென்ற பகுதியில் ராஜேந்திர சோழன் தடம் பதித்த கடாரங்கொண்டானில் உள்ள பல்வேறு விதமான கட்டிடக்கலை அமைப்புகளை பற்றியும் அதன் தொடர்ச்சியாக பத்துமலை முருகன் கோவில் மற்றும் இரட்டை கோபுரத்தை பார்ப்பதற்காக எங்கள் பயணத்தை தொடங்கினோம் என்று குறிப்பிட்டிருந்தேன்.. பத்துமலை முருகன் கோவில் என்பது மலேசியாவின் கோலாலம்பூரில் இருக்கின்ற ஒரு மிக முக்கியமான முருகனின் கோயில்.. எப்படி இங்கு அறுபடை வீடுகள் தமிழகத்தில் முருகப்பெருமானுக்காக வணங்கப் படுகின்றதோ அதைப்போலவே மலேசியாவில் பல்வேறு கோயில்கள் இருந்தாலும் கூட பத்து மலை முருகன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற கோவிலாக விளங்குகிறது... ஏற்கனவே நம் தொடர் கட்டுரையில் பினாங்கு மாநகரில் உள்ள தண்ணீர் மலை முருகன் கோயிலைப் பற்றி நாம் விரிவாக பார்த்தோம்.. அதைப் போலவே பத்துமலை முருகன் கோயில் களிலும் படிக்கட்டுகள் ஏற வேண்டியதாக இருந்தது... ஆனால் பத்துமலை முருகன் கோயில் ஒரு குகை கோயிலாக இருப்பது அந்த கோயிலின் மிகப்பெரிய சிறப்பம்சம் மற்றும் ஒரு மலைக் கோயிலாகவும் இருப்பது கூடுதல் சிறப்பு.... மலேசியா என்றாலே அனைவருக்கும் முதலில் ஞாபகம் வருவது பத்துமலை முருகன் கோயிலில் தைப்பூசம் அன்று அங்கு நடக்கப்படும் திருவிழாக்களும்தான்... அந்த வகையில் பத்துமலை முருகன் கோயிலைப் பற்றி சற்று

இரட்டை கோபுரத்தின் முன்



விரிவாக பார்க்கலாம்...

**பத்துமலைக் குகை முருகன் கோவில்**

மலேசியாவில் அதிக எண்ணிக்கை யிலான தமிழர்கள் (இந்துக்கள்) மட்டு மின்றி சீனர்களும் வந்து வழிபடக்கூடிய கோவில்களில் ஒன்று...

பத்துமலைக் குகை முருகன் கோவில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரை அடுத்து 13 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. இங்குள்ள முருகப் பெருமான் சுப்பிரமணிய சுவாமி என்று அழைக்கப்படுகிறார். இந்தப் பத்துமலைக் குகை முருகன் கோவிலில் இந்துக்கள் தவிர சீனர்களும் தங்கள் குறை தீர வேண்டிக் கொள்வதுடன், இந்துக்களைப் போல் அலகு குத்துதல், காவடி எடுத்தல் போன்ற வேண்டுதலுடன் அந்த நேர்த்திக் கடனையும் செலுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்து மதத்திற் குரிய கோவிலாக இருந்தாலும், மதப்பாகு பாடின்றி அனைவருக்கும் பொதுவான தாகிப் போய் விட்ட இந்தப் பத்துமலைக் குகை முருகன் கோவிலில் தைப்பூசத் திருவிழா வருடந்தோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**பத்துமலை முருகன் கோவில் வரலாறு கொஞ்சம் தெரிந்து கொள்வோம்...**

மலேசியாவின் பத்துமலையிலுள்ள சிறிய குகையில் "வேல் மாதிரி உருவம் கற்பாறையில் தெரிவதைக் கண்ட ஒரு தமிழ்ப்பக்தர் ஒரு மூங்கிலை நிறுவி அதை வேலாகக் கருதி வழிபட்டு வந்தார். பிறகு உலோகத்திலான வேல் நிறுவப்பட்டு முருகப் பெருமானுக்கு ஆலயம் அமைக்கப்பட்டது" என்கிறார்கள்.... தமிழ கத்தில் நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள திருமலைராயன் பட்டினத்தைச் சேர்ந்த



முருகன் சிலைக்கு பின் படிக்கட்டுகள் பயணத்தின்போது

காயோராகணம் பிள்ளை மலேசியாவில் குடியேறி நிறைய சம்பாதித்திருக்கிறார். இவர், தான் சம்பாதித்த பணத்தில் ஒரு பகுதியை இறைபணிகளுக்காகவும் செல வழித்தார். கோலாலம்பூரில் மாரியம்மன் கோவில், கோர்ட்டு மலைக்குப் பக்கத்தில் விநாயகர் ஆலயம் போன்றவைகளைக் கட்டுவித்த இவர் 1890-91 ஆண்டுகளில் பத்துமலைக்குகைமுருகப்பெருமானுக்கும் ஆலயத்தை கட்டியிருக்கிறார். இந்த மூன்று ஆலயங்களிலும் அனைத்து விழா

நாட்களிலும் காயோராகணம் பிள்ளை குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கே முதல் மரியாதை அளிக்கப்பட்டு வருகிறது என்கிறார்கள்.

இந்த பத்துமலையில் இரு குகைகள் உள்ளது. ஒன்று மிக ஆழமாகச் செல்வது, மிகவும் இருண்டது. மற்றொரு குகையில் தான் முருகன் கோவில் கொண்டிருக்கிறார். நக்கீரர் வரலாற்றில் ஒரு பூதம் அவரை ஒரு குகைக்குள் அடைத்து விட்டதாகவும், அங்கு ஏற்கனவே 999 பேர் அடைக்கப்பட்டு இருந்ததாகவும் நக்கீரரையும் சேர்த்து இவர்கள் எண்ணிக்கை ஆயிரமாகிவிட்டதாகவும் நபர்களின் எண்ணிக்கை ஆயிரமான பின்பு இவர்களைத் தின்ன பூதம் திட்டமிட்டிருந்தது என்கிற வரலாறு அனைவரும் அறிந்ததே. ஆயிரம் பேர் அடைத்து வைக்கக் கூடிய அளவிலான குகைகளை உடைய முருகனின் மலைக் கோவில்கள் தமிழ்நாட்டில் எதுவுமில்லை. பூதங்கள் கடல் கடந்து செல்லக் கூடிய ஆற்றலுடையவை என்பதால் நக்கீரர் அடைபட்டுக் கிடந்தது இந்த மலேசிய பத்துமலைக் குகையாகத்தான் இருக்கும். எனவேதான் இங்கு முருகனின் வேல் தமிழ்ப்பக்தர் ஒருவருக்குத் தென்பட்டது. அதன் பிறகுதான் இங்கு முருகன் கோவில் அமைக்கப்பட்டது என்றும் இங்குள்ள ஒரு சாரார் தெரிவிக்கின்றனர்.

கோவிலின் உள்ளே



### பத்துமலைக் குகை முருகன் கோவில் அமைப்பு

இந்த முக்கியமான பத்துமலைக் குகை முருகன் கோவில் 1891ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டிருக்கிறது. அப்போது இந்த முருகனைத் தரிசிக்க கரடுமுரடான பாதையில் செல்ல வேண்டியிருந்தது. அதன் பின்பு 1938 ஆம் ஆண்டில் இந்த மலைக் கோவிலுக்குச் செல்ல 272 படிக்கட்டுகளைக் கொண்ட மூன்று நடைபாதைகள் அமைக்கப்பட்டது. இது தவிர தனியே இரயில் பாதை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வழிகளைப் பயன்படுத்தி தரையிலிருந்து 400 அடி உயரத்தில் உள்ள கோவிலுக்குச் சென்று சுப்பிரமணிய சுவாமியான முருகப் பெருமானைத் தரிசித்து வரலாம்.

### மிகப் பெரிய முருகன் சிலை

தற்போது இந்தக் கோவிலுக்குச் செல்லும் பாதைகளுக்கு முன்பாக,

அதாவது நுழைவு வாயிலின் அருகில் தங்கம் போல் தகதகவென மின்னும்படியாக வர்ணம் பூசப்பட்ட மிகப் பெரிய முருகன் சிலை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மிகப்பெரிய வேலை வலது கையில் தாங்கி நிற்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ள இந்த சிலையின் உயரம் 42.7 மீட்டர், அதாவது 140.09 அடி. இந்த சிலை அமைக்க 2003 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட பணி 2006 ஆம் ஆண்டில்தான் நிறைவு பெற்றது. இந்த சிலை அமைக்க 2006 ஆம் ஆண்டில் இந்திய மதிப்பில் 2 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவாகி இருக்கிறது.

இந்த சிலை அமைப்பிற்கான கட்டு மானப் பொருட்கள் அதிகமாக பக்கத்து நாடான தாய்லாந்தில் இருந்து கொண்டு வரப்பட்டிருக்கிறது. உலகின் மிகப்பெரிய முருகன் சிலையாக அமைக்கப்பட்ட பின்பு இந்த பத்துமலைக் குகை முருகன் கோவிலுக்கு வருபவர்கள் எண்ணிக்கை யுடன்சுற்றுலாப்பயணிகளின்எண்ணிக்கை யும் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது.

மலாய்க்காரர்கள் எனப்படும் இசுலாமிய மதத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வழிபடுவதில்லை என்றாலும் இக் கோவிலையும், இங்குள்ள மிகப்பெரிய முருகன் சிலையையும் சுற்றுலாவாக வந்து பார்த்து வியந்து செல்கின்றனர்.

பல்வேறு வழிகளில் கொண்டு வரப் படும் பால் அனைத்தும் வேலுக்கு அபிஷேகம் செய்யப்படுகின்றது என்பது இங்கு மட்டுமே நடைபெறும் நிகழ்வு. தமிழகத்தில் உள்ள கோயில்களில் இவ்வாறு செய்யப்படுவதில்லை. மூன்று நாட்கள் இடைவெளியே இல்லாமல் இரவு பகல் என அனைத்து நேரங்களில் தொடர்ந்து பால் அபிஷேகம் நடை பெற்றுக் கொண்டிருப்பது இத்தலத்தின் பெருமைக்குரிய சிறப்பு.

சிறப்பு விழாக்கள்: முருகனுக்கு உகந்ததாகக் கருதப்படும் நாட்களில் சிறப்பு பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

இங்கு வருடந்தோறும் தை மாதம் வரும் தைப்பூசத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்தத் தைப்பூச

பத்துமலை முருகன்



விழாவில் இந்துக்கள் தவிர சீனர்கள் மற்றும் வேறு சிலரும் இங்குள்ள புனித ஆற்றில் நீராடிவிட்டு, தமிழ்நாட்டில் முருகன் கோவில்களில் நேர்த்திக் கடன்களாகச் செய்யப்படும் அலகு குத்துதல், பால்குடம் எடுத்தல், காவடி எடுத்தல் போன்ற பலவிதமான நேர்த்திக் கடன்கள் இங்கும் இருக்கிறது. ஆனால் இங்கு தமிழர்களைத் தவிர சீனர்கள் மற்றும் பிற மதத்தைச் சார்ந்தவர்களும் முருகனுக்கு வேண்டிக் கொள்வதும் நேர்த்திக்கடன் செலுத்துவதும் ஆச்சர்யமான ஒன்றாகும்.

**பயண வசதிகள் :** மலேசிய நாட்டின் தலைநகரான கோலாலம்பூரிலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் பத்துகுகை அல்லது பத்துமலைக் குகை எனும் இந்தப் பகுதி அந்நாட்டின் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக இருப்பதால் பயண வசதி சிறப்பாக செய்யப்பட்டிருக்கிறது.

KL டவரின் அடித்தளத்தில்



**திறக்கும் நேரம் :** பத்துமலைக் குகை முருகன் கோவில் மலேசியா நேரப்படி, காலை 08:00 மணி முதல் 01:00 மணி வரை, மாலை 03.30 மணி முதல் இரவு 08.30 மணி வரை திறந்திருக்கும்.

கோலாலம்பூர் தலைநகரிலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது பத்துமலை முருகன் கோவில்...

தொல்காப்பிய மரபுப்படி மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்தின் கடவுள் முருகன் என்றாலும், அந்த அற்புதக் கடவுள் அனைத்து இடங்களிலுமே கோவில் கொண்டுள்ளார். முருகப்பெருமான் தமிழ்நாட்டில் பழநி, திருப்பரங்குன்றம், திருத்தணிகை, குன்றக்குடி போன்ற மலைகளில் மட்டுமன்றி, பழமுதிர்ச்சோலையில், கடல் அலை தாலாட்டும் திருச்செந்தூர் மற்றும் நதிக்கரை ஓரங்களிலும் கூட கோவில் கொண்டு கோலோச்சுகிறார். தென்னகத்தில் முருகன் என்றும், வட புறத்தில் கார்த்திகேயன் எனவும் போற்றப் படும் தெய்வம், இலங்கையில், கதிர்காமம், யாழ்ப்பாண நல்லூர், லண்டன், கிழக்கு ஹேம், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலும் தமிழர்களின் தனித் தெய்வமாக அருளாட்சி புரிகிறான்.

**குகைக் கோவில் :** மலேசிய மண்ணில் முருகன் வீற்றிருக்கும் இடம் சற்று வித்தியாசமானது. குகன் என்ற பெயருக்கேற்ப குகையில் வாழுகிறான். குகை என்றதும் இங்கே உள்ள கல் மலையில் குனிந்து செல்லும் குறுகிய குகை அல்ல. மர வளம் மிகுந்த உயர்ந்த சுண்ணாம்பு மலைக்குகையில் கோவில் கொண்டு பரவசப்படுத்துகிறான். 'பது கேவ்' என்றால் மலாய் மொழியில் 'சுண்ணாம்பு குகை' எனப் பொருள்படும். தமிழர்கள் பேச்சு வழக்கில் பத்துமலை ஆக்கிவிட்டனர்.

பசுமை போர்த்திய நெடிய மலைத் தொடரின் அடிவாரத்தில் 140 அடி உயரத்தில் பொன்னிறத்தில் மின்னும் வேலவன் சிலை உருவாக்கப்பட்டுள்ளது. உலகிலேயே மிக உயர்ந்த சிலை இதுதான். இந்தியாவிலிருந்து சென்ற சிற்பிகளின் கைவண்ணத்தில் 2006-ல் உருவானது இந்தச் சிலை.

**சிவாலயம் :** வலப்புறத்தில், அரச மரத்தடியில் விநாயகருக்கு கோவில் உள்ளது. அவருக்கு தோப்புக் கரணம் போட்டு விட்டு, சில படிகள் ஏறினால் நந்தி தேவர் அமர்ந்திருக்க, அருகில் சுந்தரேசர் சிவலிங்கமாக வீற்றிருக்கிறார். தேவ கோட்டத்தில் தெற்கு நோக்கி தட்சிணாமூர்த்தி, மேற்கு கோட்டத்தில் லிங்கோத்பவர், வடக்கு நோக்கி நான் முகனும், துர்க்கா தேவியும் அருள் புரிகின்றனர். அருகே சண்டிகேசர் வீற்றி ருக்கும் சன்னிதியையும் தரிசித்து விட்டு கீழே வந்தால் மீனாட்சி அம்மன் புன்னகை தவழ காட்சிதருகிறாள். சரி.. குகையில் வாழும் சுப்ரமணியரைத் தரிசிக்கச் செல்வோம். பொன்னிற வேலவனின் அருகே இருக்கும் தோரண வாயிலைக் கடந்து 272 செங்குத்தான படிகளில் ஏறவேண்டும். படிகளை ஒட்டி அமைந்த செயற்கை நீரருவி ஆலயத்திற்கு அழகு சேர்க்கிறது.

குகை வாசலில் நுழைந்தவுடன் நமது வலக்கை பகுதியில் இடும்பனுக்கு சிறு சன்னிதி உள்ளது. அவர் காவடி எடுப்போரின் முன்னோடி அல்லவா. அவரை வேண்டிக் கொண்டு கொஞ்ச தூரம் படிகளில் சென்றால் மூலவர் முருகன் இருக்கிறார். இவ்வளவு பெரிய குகைக்குள் உள்ள ஒரு சிறு குகைக்குள் கிழக்கு நோக்கி தரிசனம் தருகிறார். கீர்த்தியில் பெரியவராய் உருவத்தில் சிறிய மூர்த்தியாக வெள்ளியால் மின்னுகிறார். அவரது திருவடி அருகே வேல் ஒன்று உள்ளது. அதற்கு தான் அபிஷேகம் செய்கிறார்கள். அந்த இடத்துக்கு சென்றதும் நமக்குள் ஒரு சிலிர்ப்பு ஏற்படுகிறது.

இப்பெருமானைப் பிரார்த்தித்துக் கொண்டால் கேட்டது கிடைக்கும், நினைத்தது நடக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. மூலவரான முருகர் தனியாக நின்றபடி தரிசனம் தருகிறார். மூலவர் சன்னிதிக்கு மேலே சற்று உயரமான இடத்தில், சுப்ரமணியர் தன் தேவியர்கள் இருவருடன் காட்சி தருகிறார். இப்பெருங்குகையின் உள்ளே ஒரு பகுதியில் பழநி தண்டாயுதபாணிக்கு சன்னிதி எழுப்பப்பட்டுள்ளது. மலாய் மொழியும், சீன மொழியும் பேசப்படும் இந்நாட்டில் இருக்கும் இந்த இயற்கைக் கோவிலின் இறை சன்னிதியில் ‘கந்தா போற்றி.. கடம்பா போற்றி’ என்று தமிழில் அர்ச்சிக்கிறார்கள். அந்த முருகனின் தேன்தமிழ்ப் பாக்களின் இசை காற்றில் மிதந்து கொண்டிருந்தது.

வித்தியாசமான வழிபாட்டு அனுபவத் துடன் படிகள் இறங்கி கீழே வந்தால், பொன்னிற சிலைக்கு இடப்புறம், அதாவது சிவாலயத்துக்கு எதிரே சனீஸ்வரன் வீற்றிருக்கும் தனி சன்னிதியும், எதிரே ஒன்பது கோள்கள் இருக்கும் நவக்கிரக சன்னிதியும் இருக்கிறது. அந்த இடத்தில் ஆஞ்சநேயருக்கும் சன்னிதி அமைந்துள்ளது.

**தல வரலாறு :** மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் மாரியம்மன் கோவில் அமைத்து பக்தி செலுத்திக் கொண்டி ருந்த வணிகத் தமிழரான தம்பு சாமிப்பிள்ளை என்பவரின் கனவில் முருகப்பெருமான் தோன்றி, தனது அருட்சக்தி இந்த இடத்தில் இருப்பதை உணர்த்தினார். அப்போது மலேசியாவை

ஆண்டு கொண்டிருந்த ஆங்கில ஆட்சியாளரின் அனுமதி பெற்று 1891-ல் சன்னிதியையும் கோவிலையும் அமைத்து வழிபாடுகளைத் தொடங்கினார்.

**தைப்பூசம் :** சுப்ரமணிய சுவாமிக்கு உகந்த கார்த்திகை, கந்தசஷ்டி போன்ற விழாக்களைவிட பத்துமலைதைப்பூசவிழா உலகப் புகழ்பெற்றது. தமிழகத்தில் பழநிமலை போல மலேசியாவில் பத்துமலையில் இந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. விரதமிருந்து மஞ்சள் ஆடை அணிந்து, பால் குடங்களை ஏந்தியும், காவடிகள் தூக்கியும், நாக்கில் வேல் குத்திக்கொண்டும், கோலாலம்பூர் மாரியம்மன் கோவிலிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் ஊர்வலமாக வந்து மலை ஏறி வழிபடுகிறார்கள். மலேசியத் தமிழர்கள் மட்டுமல்லாது, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, நாடுகளிலிருந்தும், தமிழகத்திலிருந்தும் மக்கள் கூட்டம் அலைமோதும். மலாய், சீன மக்களும் பிரார்த்தித்துக் கொண்டு தைப்பூச விழாவில் பங்குபெறுவது பரவசமான காட்சியாகும். கோலாலம்பூர் தலைநகரிலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது இந்த ஆலயம். குன்றிருக்கும் இடமெங்கும் குமரன் இருப்பான் என்பதனை விட தமிழர் இருக்கும் இடமெல்லாம் தமிழ்க்கடவுளான முருகன் காட்சிதந்து அருள்புரிகிறான் என்பது தான் உண்மை....!!!

பத்துமலை முருகன் கோயிலில் அருமையான தரிசனத்தை முடித்துவிட்டு அங்கே இல்லத்திற்கு தேவையான சில பூஜை பொருட்களையும் பத்துமலை முருகனின் வடிவிலான பல்வேறு விதமான நினைவுப் பொருட்களையும் பரிசுகளையும் பிரசாதத்தையும் வாங்கிக் கொண்டு மீண்டும் மலையில் படிக்கட்டுகளின் வழியாக இறங்கி நாங்கள் வந்திருந்த சுற்றுலா பேருந்து அடைந்தோம் படிக்கட்டில் ஏறும் போதும் இறங்கும் பொழுதும் தலையில் பூ வைத்துக் கொண்டிருந்தது கூட மிகவும் சிரமமான காரியமாக இருந்தது ஏனெனில் அங்க இருக்கின்ற குரங்குகள் பூவை கூட உணவு என்று பிரித்து உண்ணக்கூடிய ஒரு காட்சியை காண நேர்ந்தது அதனால் படிக்கட்டில் ஏறும் போதும் இறங்கும் போதும் கவனமாக குறிப்பாக தின்பண்டங்கள் ஏதும் இருந்தால் அவற்றை பையில் வைத்துக்கொண்டு கவனத்துடன் செல்வது அவசியம் சில நேரங்களில் செல்போனை கூட தட்டி விடக் கூடிய காட்சியை பார்க்க நேர்ந்தது எங்களுடன் வந்த ஒரு தோழியின் தலையில் இருந்த பூவை ஒரு குரங்கு உணவு என்று பிரித்து ஒன்ற அந்த காட்சி அங்க இருக்கின்ற அனைவரிடமும் சிரிப்பை ஏற்படுத்தியது ஆகவே பத்துமலை முருகன் கோயிலில் குரங்குகளும் சற்றும் அதிகம் என்பதால் படிக்கட்டுகளில் ஏறும் போது எச்சரிக்கையாக நடப்பது அவசியம் வயதானவர்கள் ஒரு சில படிக்கட்டுகளுக்கு பிறகு சற்று ஓய்வு எடுத்து விட்டு பயணத்தை தொடர்வது அல்லது இவராக பத்துவளை கோவில் முருகன் பயணத்தை முடித்துக் கொண்டு அடுத்ததாக மலேசியாவில் உலகமே வியந்து பார்க்கின்ற ஒரு அதிசயமாக நின்று கொண்டிருக்கின்ற இரட்டை கோபுரத்தை நோக்கி எங்களுடைய பயணத்தை தொடங்கினோம்....!!!

மலேசியா இரட்டை கோபுரத்துக்கு செல்லும் வழி எங்கும் பல்வேறு விதமான வான உயர்ந்த கட்டிடங்கள் கோலாலம்பூர் நகரை சுற்றி எங்கும் காட்சி அளிக்கின்றனர் மலேசியாவின் இரட்டை கோபுரத்தை அடைவதற்கு முன்பாக எப்படியும் ஒரு 500 வானுயர்ந்த கட்டிடங்களை பார்க்க நேர்த்தது வானமே

தெரியாத அளவிற்கு கோலாலம்பூர் நகரம் முழுவதும் மிக உயர்ந்த கட்டிடங்களால் நிரப்பப்பட்டிருக்கின்றது அவற்றில் ஒரு மிக உயர்ந்த கட்டிடமாக மலேசியாவில் ரெட்டை கோபுரம் தனித்து நிற்கின்றது குறிப்பாக இரவு நேரங்களில் விளக்கொளி யில் மலேசியா வென்றே கோபுரத்தை பார்ப்பது ஒரு தனி சுகம்...

**மலேசியாவின் ரெட்டை கோபுரத்தை பற்றிய விவரங்களை இங்கே தெரிந்து கொள்வோம்...**

மலேசியா என்றாலே நமக்கு எல்லாம் நினைவுக்கு வருவது இந்த இரட்டை கோபுரம்தான். இந்த 88 மாடி கட்டிடம்தான் உலகத்திலேயே உயரமான கட்டிடம் என்று 1998இல் இருந்து 2004 வரை சொல்லப்பட்டது, பின்னர் இதன் புகழை தைபெய் டவர் கொண்டு சென்றது. பெட்ரோனாஸ் என்பது மலேசியாவின் எண்ணை கம்பெனி, இது 1974இல் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது குறைந்த ஊழியர்களே இருந்தனர், அது வளர ஆரம்பித்தபோது கோலாலம்பூர் நகரின் பல பகுதிகளில் பணியாளர்கள் இருந்தனர், அதை ஒரே இடத்திற்கு நிர்வாகம் எளிமையாக உருவாக்கப்பட்டதுதான் இந்த இரட்டை கோபுரம்.

'பெட்ரோனாஸ் இரட்டை கோபுரம்' என்று அழைக்கப்படும் இது 1992ம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்டு 1999ம் ஆண்டு திறக்கப்பட்டது. நகரின் மைய பகுதியில் இருந்ததால், இதன் அஸ்திவாரம் தோண்டப்பட்டு மண் கொண்டு செல்லும்போது அந்த தடம் பல பல ஆண்டுகள் இருந்ததாக கூறபடுகிறது. இதை சீராகவும், சரியான நேரத்திலும் கட்டி முடிக்க பட வேண்டும் என்று ஒவ்வொரு டவரும் ஒவ்வொரு கட்டிட கம்பெனியிடம் கொடுக்கப்பட்டது. இந்த டவரின் டிசைன் என்பது இஸ்லாமிய சின்னமான எட்டு முனை கொண்ட நட்சத்திரம் போன்று அடித்தளம் அமைக்கப்பட்டது. பின்னர் அதன் மேலே வட்டமாக கண்ணாடியும், இரும்பும் கொண்டு அழகுபடுத்த பட்டது.

இது மொத்தம் 88 மாடி கொண்டது, அதில் இரண்டு வகையான பார்வை தளங்கள் உள்ளன. ஒன்று 41வது மாடியிலும், இரண்டாவது 86வது தளத்திலும் உள்ளது. உள்ளே செல்வதற்கு டிக்கெட் விலை கம்மிதான் என்றாலும், கிடைப்பது அரிது. அதிகாலையில் இருந்தே மக்கள் கூட்டம் லைனில் நின்று கொண்டிருக்கும், எங்களுக்கு நாங்கள் அதன் அருகிலேயே இருந்த ஒரு ஹோட்டலில் தங்கியதால் அவர்களே டிக்கெட் வாங்கி வைத்திருந்தனர்!

முதலில் நீங்கள் உள்ளே சென்ற வுடன் ஒரு ரூமில் உங்களை உட்கார வைக்கின்றனர், அங்கு அந்த கட்டிடம் பற்றிய விவரங்களும், மற்ற உலக கட்டிடங்களிடம் இருந்து இது எப்படி சிறப்பானது என்று காணலாம். ஒரு குழுவாக ஆட்களை அனுப்புகின்றனர், ஆதாலால் நீங்கள் நீண்ட நேரம் நிற்க தேவையில்லை. உங்களது நேரம் வந்த வுடன், நீங்கள் இன்னொரு அறைக்கு அழைத்து செல்லபடுவீர்கள். அங்கு இந்த கட்டிடம் உருவான கதை ஒரு வீடியோ வடிவில் காண்பிக்கப்படும். பின்னர், அங்கிருந்து ஒரு லிப்ட்டில் உங்களை 41வது தளத்திற்கு கூட்டி செல்வார்கள், அதுதான், இந்த இரட்டை கோபுரத்தை இணைக்கும் பாலம் !

இந்த பாலத்தின் டிசைன் ஒரு அதிசயம்தான். வேகமாக காற்று வீசும் போது என்னதான் கட்டிடமாக இருந்தா லும் அது ஆடும், அப்போது பாலம்

உடையலாம்... இதில்தான் தங்களது திறமையை காட்டி உள்ளனர். அதை நீங்கள் பலமாக காற்று வீசும்போதுதான் உணர்வீர்கள்! நீங்கள் அங்கு நின்று கொண்டு கீழே பார்க்கும்போது மனதில் ஒரு கிலியும், மகிழ்ச்சியும் தோன்றும் என்பது நிச்சயம். வெயில் காலத்தின் போது இந்த கட்டிடத்தின் அருகில் வெக்கையாக இருக்கும், கண்களும் கூசும், இது அங்கு உபயோகபடுத்தப்பட்ட இரும்பினால்...!!!

மலேசியாவின் தலைநகர் கோலாலம் பூரில் உள்ள KLCC இல் அமைந் துள்ள பெட்ரோனாஸ் இரட்டை கோபுரங்கள் இரட்டை வானளாவிய கட்டிடங்களாகும், ஒவ்வொரு கோபுரமும் 451.9 மீட்டர் உயரம் கொண்டது. கோலாலம்பூரின் வான்வழிக் காட்சியைக் கண்டு மயங்குவது மட்டுமின்றி, பல்வேறு செயல்பாடுகளையும் மக்கள் ரசிக்கும் உலகின் மிக உயரமான இரட்டைக் கோபுரம் இதுவாகும். பெட்ரோனாஸ் டவர்ஸ் அல்லது மெனரா பெட்ரோனாஸ் (மலாய் மொழியில்) என்றும் அழைக்கப்படும் பல பாலிவுட் மற்றும் ஹாலிவுட் திரைப்படங்கள் இங்கு படமாக்கப்பட்டன. டான்: தி சேஸ் பிகின்ஸ், இன்டிபென்டன்ஸ் டே: ரிசர்ஜென்ஸ், யுஎஸ் டிவி தொடர் 24 மற்றும் ஹிட்மேன் 2: சைலண்ட் அசாசின் என்ற திருட்டுத்தனமான வீடியோ கேம் ஆகியவை பெட்ரோனாஸ் டவர்ஸில் படமாக்கப்பட்டன.

**கட்டிடக்கலை சின்னம்**

இந்த அற்புதமான உயரமான இரட்டை கோபுரம் ஆசியாவின் முன்னணி கலாச்சார மற்றும் கட்டிடக்கலை சின்னங்களில் ஒருவராக அறியப்பட்ட சீசர் பெல்லி என்பவரால் வடிவமைக்கப்பட்டது. கோபுரங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன, ரப்-எல்-ஹிஸ்பை குறிப்பதாக வைத்து. ரப்-எல்-ஹிஸ்ப் ஒரு முக்கியமான இஸ்லாமிய அமைப்பாகும், பெட்ரோனாஸ் டவர்ஸ் அதன் மூலத்திற்கு முழுமையான நீதியை வழங்குகிறது. இரட்டைக் கோபுரங்களின் கவர்ச்சியைக் கூட்டுவது வெளிப்புற மேற்பரப்பை அலங்கரிக்கும் ஸ்காலோப் செய்யப்பட்ட வடிவமாகும். ஸ்காலப் செய்யப்பட்ட வடிவங்கள் பற்றிய பெல்லியின் யோசனை உண்மையில் இரட்டை கோபுரங்களின் மென்மையான தோற்றத்தையும் நேர்த்தியையும் பெருக் கியது. பெட்ரோனாஸ் இரட்டை கோபுரங் களின் கட்டிடக்கலை மிகவும் கவனத்தையும் பாராட்டையும் பெற்றது.

மெனாரா பெட்ரோனாஸின் டவர் 1 பெட்ரோனாஸ் தலைமையகத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் டவர் 2 பார்வையாளர்களுக்காக திறக்கப் பட்டுள்ளது. இருப்பினும், ஒரு நாளைக்கு பார்வையாளர்களின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ளது. இரட்டை கோபுரங்கள் அதிக வலிமை கொண்ட வலுவூட்டப்பட்ட கான்கிரீட்டுடன் கட்டப்பட்டுள்ளன, இது கட்டமைப்பு திரிபு மற்றும் அதிர்வுகளை குறைக்கிறது, இது மலேசியாவில் நன்கு கட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பான கட்டமைப்பாக அமைகிறது. பெட்ரோனாஸ் இரட்டைக் கோபுரங்கள் திவான் ஃபில்ஹார்மோனிக் பெட்ரோனாஸ் கச்சேரி அரங்கம் (தென்கிழக்கு ஆசியாவின் பாரம்பரிய இசைக்கான முன்னணி இடம்), KLCC சூரியா மால், ஸ்கை பிரிட்ஜ் மற்றும் பல இடங்களைக் கொண்டுள்ளது.

**பெட்ரோனாஸ் டவர்ஸில் உள்ள இடங்கள்**

KLCC பூங்கா

Roberto Burle Marx என்பவரால் வடிவமைக்கப்பட்ட KLCC பூங்கா பிரேசிலிய கட்டிடக் கலைஞரின் கடைசி வேலையாகும். இயற்கையின் உண்மைத்தன்மையால் சூழப்பட்ட பூங்கா, 'இயற்கை அன்னையின் முக்கியத்து வத்தை உலகம் இன்னும் கொஞ்சம் உணர்திறன் மற்றும் கல்வி கற்பிக்கட்டும்' என்ற நோக்கத்தில் ராபர்டோ பர்ல் மார்க்ஸ் பூங்காவை உருவாக்கினார் என்று கூறப்படுகிறது. லூஸிளீஸ் பூங்கா, சிமெண்ட் சிற்பங்கள், நீர் நீரூற்றுகள் போன்ற மனிதனால் உருவாக்கப்பட்ட வடிவமைப்புகளின் கலவையுடன் வெப்ப மண்டல பசுமை பாரம்பரியத்தை காட்சிப் படுத்துகிறது. இதனுடன், பூங்காவில் மரங்கள், புதர்கள், மரம் மற்றும் கற்கள் போன்ற இயற்கை அழகுகளும் உள்ளன. ராபர்ட் பர்ல் மார்க்ஸ், வடிவம் மற்றும் நிலப்பரப்பின் கூறுகளை உருவாக்கினார், இது பூங்காவிற்கு ஒரு மாயையை அளித்தது. KLCC பூங்கா மலேசியாவின் இரட்டை வானளாவிய கட்டிடங்களுக்கு அழகு சேர்க்கிறது, மேலும் அதை இன்னும் அழகாக்குகிறது.

KLCC பூங்கா உருவாக்கத்தில் பல்லுயிர் மற்றும் பாதுகாப்பு முக்கிய தாக்கங்கள். 23 முதிர்ந்த மற்றும் அரிய மாதிரிகள் பழைய சிலாங்கூர் டர்ஃப் கிளப்பில் இருந்து சேமிக்கப்பட்டு பூங்கா மைதானத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டன. பல்லுயிர் பெருக்கத்திற்காக 1900 உள்நாட்டு மரங்கள் மற்றும் தோராயமாக 66 வகையான பனைகள் நடப்பட்டன. பெட்ரோனாஸ் ட்வின் டவர் KLCC பூங்காவின் உண்மைகளில் ஒன்று, உள்ளூர் மற்றும் புலம்பெயர்ந்த பறவை களை கவரும் வகையில் மரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. KLCC பூங்காவில் பூங்காவின் நடுவில் உள்ள மனிதனால் உருவாக்கப்பட்ட ஏரி உள்ளது, அதில் 280-மீட்டர் உயரம் வரை நீரை சுடும் நீர் ஊற்று உள்ளது. பெட்ரோனாஸ் இரட்டைக் கோபுரத்தின் உயரத்தைக் கருத்தில் கொண்டு, மேல் மட்டங்களிலிருந்து பூங்காவின் அற்புதமான காட்சியை நீங்கள் அனுபவிக்க முடியும்.

**வான பாலம்**

உலகின் மிக உயரமான இரண்டு மாடி பாலம், பெட்ரோனாஸ் இரட்டை கோபுரத்தில் உள்ள ஸ்கைபிரிட்ஜ் கோபுரங்களின் 41 மற்றும் 42 வது தளங்களை இணைக்கிறது, இது தரை யில் இருந்து 170 மீட்டர் உயரத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஸ்கைபிரிட்ஜ் ஒரு மேடையாக செயல்படுகிறது, அங்கு நீங்கள் உயர்ந்த நிலைக்கு செல்ல லிஃப்ட்களை மாற்றலாம்; இருப்பினும், அவசர காலங்களில் இது பாதுகாப்பான வெளியேற்ற பாதை என்றும் கூறப் படுகிறது. இரட்டை கோபுரத்தின் 42வது தளம் பார்வையாளர்களுக்கு திறக்கப் படவில்லை; 41வது தளம் மட்டுமே பார்வையாளர்களுக்கு திறக்கப் பட்டுள்ளது. இருப்பினும், ஸ்கைபிரிட்ஜ் அனைவருக்கும் திறந்திருக்கும், அங்கு நீங்கள் நகரத்தின் கண்கவர் வான்வழி காட்சியை அனுபவிக்க முடியும். மலேசியா வில் உள்ள இந்த புகழ்பெற்ற கோபுரம் ஒரு நாளைக்கு 1000 பார்வையாளர்களை அனுமதிக்கிறது.

**கண்காணிப்பு தளம்**

டவர் 2 இன் 86வது மட்டத்தில் அமைந்துள்ள கண்காணிப்பு தளம் கோலாலம்பூர் நகரின் 360 டிகிரி வான் வழி காட்சியை மூச்சடைக்கக்கூடிய அழகிய காட்சியை வழங்குகிறது. இது தரையில் இருந்து 370-மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது மற்றும் இந்த ஆய்வகத்தில்

இரட்டை கோபுரங்கள், மலேசியா, கோலாலம்பூர் மற்றும் பிற சிறிய மாதிரிகள் உள்ளன. பார்வையாளர்கள் குழுக்களாக அனுமதிக்கப்படுகிறார்கள், ஒவ்வொரு குழுவும் 20 நிமிடங்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. உங்கள் 'கிராமிற்கு' நீங்கள் ஒரு டன் நிறைய படங்களை எடுக்கலாம், பார்வையைப் பாராட்டலாம் மற்றும் வேடிக்கையான நினைவுகளை உருவாக்கலாம்.

**திவான் ஃபில்ஹார்மோனிக் பெட்ரோனாஸ் கச்சேரி அரங்கம்**

தென்கிழக்கு ஆசியாவின் பாரம்பரிய இசைக்கான முன்னணி இடமான, திவான் ஃபில்ஹார்மோனிக் பெட்ரோனாஸ் கச்சேரி மண்டபம், மலேசியாவின் பெட்ரோனாஸ் இரட்டைக் கோபுரங்களின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாகும். இரண்டு கோபுரங்களுக்கிடையில் அமைந்துள்ள இந்த மண்டபத்தின் கட்டிடக்கலை வடிவமைப்பு மிகுந்த பாராட்டுகளைப் பெற்றுள்ளது மற்றும் உலகின் சிறந்த கச்சேரி அரங்குகளில் ஒன்றாகக் கூறப்படுகிறது. மண்டபத்தின் பின்னால் உள்ள உத்வேகம் 19 ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய கச்சேரி அரங்குகளில் இருந்து எடுக்கப்பட்டது. இந்த மலேசியக் கோபுரத்தில் உள்ள திவான் ஃபில்ஹார்மோனிக் பெட்ரோனாஸ் கச்சேரி மண்டபம் மலேசியன் பில்ஹார்மோனிக் இசைக்குழுவின் தாயகமாகும், மேலும் பல ஆண்டுகளாக, உலகின் மிகவும் புகழ்பெற்ற இசை மேஸ்ட்ரோக்கள் சிலவற்றை நடத்தியது.

இந்த இடங்கள் தவிர, பெட்ரோனாஸ் டவர்ஸில் KLCC சூரியா மால், பெட்ரோனாஸ் ஆர்ட் கேலரி, கோலாலம்பூர் மாநாட்டு மையம், பெட்ரோசியன் அறிவியல் மையம் மற்றும் பல உள்ளன. மேலும், KLCC சூரியா மால் மலேசியாவில் மிகவும் பிரபலமான சில உணவகங்களைக் கொண்டுள்ளது, அங்கு, நீங்கள் உண்மையான மலாய் உணவுகளை அனுபவிக்க முடியும்.

**பெட்ரோனாஸ் இரட்டை கோபுரத்தை எப்படி அடைவது**

பெட்ரோனாஸ் டவர்ஸின் இருப்பிடத்தைப் பொறுத்தவரை, அங்கு செல்வது மிகவும் கடினம் அல்ல. உங்கள் வசதிக்கு ஏற்ப மூன்று விருப்பங்களில் ஒன்றை நீங்கள் தேர்வு செய்யலாம் -

மலேசியாவில் வண்டிகள் எளிதான மற்றும் தொந்தரவு இல்லாத விருப்பமாகும். உங்கள் ஹோட்டல் இடத்திலிருந்து ஒரு வண்டியை வாடகைக்கு எடுக்கலாம்; அது உங்களை நேரடியாக KLCC சூர்யா மாலின் நுழைவாயிலில் இறக்கிவிடும். அங்கிருந்து, மால் மற்றும் கோபுரத்திற்கு அருகிலுள்ள KLCC பூங்காவை ஆராய்வதன் மூலம் பெட்ரோனாஸ் இரட்டை கோபுரங்களை நீங்கள் பார்வையிடலாம்.

மற்றொரு விருப்பம் KLCC LRT நிலையத்திற்கு LRT ஐ எடுத்துச் செல்வது. இது இரட்டை கோபுரங்களுக்கு அடியில் உள்ள KLCC சூரியா மாலுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. மீண்டும், நீங்கள் நிலையத்திலிருந்து இறங்கியவுடன், நீங்கள் கோபுரங்களுக்கு நடந்து செல்லலாம்.

கடைசியாக, நீங்கள் ஓட்ட விரும்பினால், நீங்கள் ஒரு காரை வாடகைக்கு எடுத்து மலேசியாவில் உள்ள இரட்டை கோபுரங்களுக்குச் செல்லலாம். அம்பாங் - கோலாலம்பூர் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையில் (AKLEH) நேரடியாக இணைக்கும் ஏராளமான வாகன நிறுத்துமிடங்கள்

உள்ளன.

**பெட்ரோனாஸ் இரட்டை கோபுரங்களின் நேரம்**

மலேசியாவிற்கு உங்கள் பயணத்தின் போது நீங்கள் பெட்ரோனாஸ் டவர்ஸைப் பார்க்க விரும்பினால், நேரத்தை மனதில் கொள்ளுங்கள். இரட்டைக் கோபுரங்கள் செவ்வாய் முதல் சனிக்கிழமை வரை பொதுமக்களுக்குத் திறந்திருக்கும். இது திங்கட்கிழமைகளில், ஹரி ராயா ஐடில்ஃபித்ரி மற்றும் ஐடிலாதா ஆகிய நாட்களில் மூடப்படும்.

நேரம் : காலை 09:00 முதல் இரவு
09:00 மணி வரை (செவ்வாய் முதல் சனிக்கிழமை வரை, வெள்ளி தவிர)
கடைசி டிக்கெட் கிடைக்கிறது : 08:30 PM
வெள்ளிக்கிழமை நேரங்கள் : 09:00 AM - 01:00 PM, 2:30 PM - 09:00 PM
தேவையான நேரம் : 1-2 மணிநேரம் (தோராயமாக)
பெட்ரோனாஸ் ட்வின் டவர்ஸ் டிக்கெட் விலைகள் :
பெரியவர்களுக்கு (13 முதல் 60 வயது வரை) - RM 80 அதாவது, 1409 INR
மூத்த குடிமக்களுக்கு (60 வயதுக்கு மேல்) - RM 42 அதாவது, 740 INR
குழந்தைகளுக்கு (3 முதல் 12 வயது வரை) - RM 33 அதாவது, 581 INR
குழந்தைகளுக்கு (3 வயதுக்கு கீழ்) - இலவசம்

**குறிப்பு :** கூறப்பட்ட மதிப்புகள் தோராயமானவை மற்றும் பல்வேறு காரணிகளைப் பொறுத்து சிறிது மாறுபடலாம்.

மலேசியாவின் இரட்டை கோபுரத்தை போலவே கே எல் டவர் என்று அழைக்கப்படுகின்ற ஒரு முக்கியமான



KL டவரின் முன்பாக

இடத்தையும் நாம் தவற விட்டு விடக் கூடாது... அந்த இடத்தில் மிக முக்கியமான சுற்றுலாத் துறைக்கான அம்சங்கள் நிறைய இருந்தாலும் கூட சுழன்று கொண்டே உணவு அருந்தக்கூடிய ஒரு அற்புதமான அறிவியல் தொழில்நுட்பத்தோடு கூடிய இடத்தை நிர்மாணித்திருக்கிறார்கள்.. அது மலேசியா செல்லும் அனைவரும் பார்க்க வேண்டிய இடம் கட்டை கோபுரத்தை பார்த்து விட்டு கேஎல் பார்ப்பதற்காக கிளம்பினோம்...

KL டவர் உலகின் ஏழாவது உயரமான தொலைத்தொடர்பு கோபுரம் ஆகும் (ஜப்பானில் உள்ள டோக்கியோ ஸ்கைட்ரீ, சீனாவின் கான்டன் டவர், கனடாவில் CN டவர், ரஷ்யாவில் Ostankino டவர், சீனாவின் ஓரியண்டல் பேர்ல் டவர் மற்றும் ஈரானில் உள்ள மிலாட் டவர்).

தொலைத்தொடர்பு சேவைகளின் தரம் மற்றும் ஒளிபரப்பின் தெளிவு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக கட்டப்பட்ட லுஸி டவர் கோலாலம்பூரின் சின்னமாகும் .

**கட்டமைப்பு ஐந்து அடிப்படை பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது :**

அடித்தளத் தளத்தில் பாதுகாப்பு நோக்கங்களுக்காக, சேமிப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக மூன்று அடித்தள தளங்கள் உள்ளன.

சுற்றுலா கட்டிடம் நிர்வாக அலுவலகம், நினைவு பரிசு கடைகள் மற்றும் 146 மீட்டர் நீளமுள்ள நடைபாதை மால் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

டவர்ஷாஃப்ட் நான்கு லிஃப்ட்களுடன் 22 நிலைகளையும், மொத்தம் 2,058 படிகள் கொண்ட படிக்கட்டுகளையும் கொண்டுள்ளது.

கோபுரம் 164,000 மீ 3 (5,791,605 கன அடி) என மதிப்பிடப்பட்டுள்ளது.

கோபுரத்தின் தலையில் பொது கண் காணிப்பு தளம் (276 மீ) மற்றும் சுழலும் உணவகம், தொலைத்தொடர்பு மற்றும் ஒளிபரப்பு நிலையங்கள் உள்ளன.

ஆண்டெனா மாஸ்ட் கோபுரத்தை முடிசூட்டுகிறது மற்றும் தொலைத் தொடர்பு மற்றும் ஒளிபரப்பு பரிமாற்றங் களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

KL கோபுரத்தை கட்டும் போது, பில்டர்கள் 100 ஆண்டுகள் பழமையான ஜெலுடாங் மரத்தை (Dyera costulata) சுற்றி ஒரு தடுப்பு சுவரைக் கட்டுவதில் சிறப்பு கவனம் செலுத்தினர். பாதசாரி வணிக வளாகத்திற்கு அருகில் காணப்படும் நினைவுச்சின்ன மரத்திற்கு தீங்கு விளைவிக்காமல் இருக்க, கோபுரம் RM 430,000 செலவில் மாற்றப்பட்டது.

KL டவர் மெனரா கோலாலம்பூர் S ஐ ஆல் நிர்வகிக்கப்படுகிறது. Bh., டெலிகாம் மலேசியா குழுமத்தின் முழுச் சொந்தமான துணை நிறுவனமாகும்.

கேஎல் டவர் தி அமேசிங் ரேஸ் ஆசியா 1 இல் முதல் பிட் ஸ்டாப்பாக இருந்தது மற்றும் அதே சீசனின் இறுதி கட்டத்தில் ஒரு ரூட் மார்க்கரை களமிறக்கியது. [14]

சுற்றுலாப் பயணிகள் லுஸி டவரை 360 டிகிரி பார்வையில் பார்க்க வருகிறார்கள். லிப்ட் கண்காணிப்பு தளத்திற்குச் செல்ல 54 வினாடிகள் மட்டுமே எடுக்கும் மற்றும் கீழே வர 52 வினாடிகள் ஆகும்.

மலேசியாவில் பல்வேறு இடங்கள் சுற்றி பார்க்க வேண்டியதாக இருந்தாலும் கூட இந்த பத்து மலை முருகன் கோவில் மலேசியாவின் ரெட்டை கோபுரம் மற்றும் கே எல் டவர் என்று அழைக்கப்படுகின்ற கோலாலம்பூர் கோபுரம் கண்டிப்பாக தவற விட கூடாத முக்கியமான இடங்கள்... இவற்றை சுற்றி பார்த்துவிட்டு அடுத்ததாக மலேசியா பயணத்தை முடிக்கும் நாளை நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் மலேசியாவின் முக்கியமான கடைவீதிகளையும் கடைவீதிகளின் ஊடாக இருக்கும் சில கோயில்களையும் பார்ப்பதற்காக எங்கள் பயணத்தை தொடங்கினோம்.. அதன் விவரம் அடுத்த பகுதியில் பார்க்கலாம்...!!!

(தொடரும்



## விரும்பாத திருப்பங்கள்

நேரானச் சாலைக்குத் திருப்பங்கள் வளைவினால்!
நேர்ந்திடும் யாவிலும் திருப்பங்கள் விளைவினால்!
விரும்பாதத் திருப்பங்கள் சாலைகளில் குழியினால்!
விரும்பினாலே திருப்பங்கள் நிகழாது விதியினால்!

வருந்தாது முயற்சித்தால் வாழ்விலே வசந்தங்கள்!
திருந்தாதச் சோம்பலினால் விரும்பாதத் திருப்பங்கள்!
கரும்பாக வாய்ப்புகள் காலங்கள் அளிப்பதுண்டு!
மருந்தாக ஒதுக்கிடின் மறைந்திடும் வழியங்கு?

ஒருபோதும் வழுவாது ஒவ்வாததை விலக்கு!
வருங்காலத்தை அறமே வளமாக்கும் விளக்கு!
பருந்தாகக் கவனமுடன் பண்பாட்டைப் பழக்கு!
விருதாவாகப் போகாது! வந்திடுமோ வழக்கு?

விழியாகக் கருதியே வினையாக்கி உயரும்
வழியிதனை அறிந்தாலே வாழ்வதுவோ எளிது!
பாரெங்கும் வணங்கிடுவார் பகலவனாய்த் தொழுது!
யாவருக்கும் தர்மமே வாழ்வியலில் பெரிது!

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி.

## வெட்கம்

அவள் தந்த புத்தகத்தில்
தேடியும் காணவில்லை
காதல் கடிதம்

தூக்கியெறிந்தேன்
வெறுமையில் ..

காற்றில் படபடத்து
பறந்து காட்டிய
பக்கங்களில் ..
எனக்குள்ளும்
எட்டிப்பார்த்தது
வெட்கம்

வட்டமிட்டிருந்தது
பக்கம் எண் ;- 143 .

- சாயி ராம்
தஞ்சாவூர்.

# உளி பேசும் மொழி

## 14




**நெல்லை க. சோமசுந்தரி**
(கவிஞர், எழுத்தாளர் & தொல்லியல் ஆர்வலர்),
சென்னை, தமிழ்நாடு

மனித நாகரீகமானது, ஆற்றங் கரையிலிருந்து தோன்றியது என்பது நாம் அனைவரும் அறிந்ததே! அவ்வகையில், முன்பு கம்பை ஆறு என வழங்கப் பட்ட, தற்போதுள்ள வேகவதி ஆற்றின் கரையில், நாகரீகத்துடன் கூடிய கலையின் அணிவகுப்புடன் கூடிய, பழம்பெரும் நகரான காஞ்சி மாநகரமானது ஆயிரம் கோவில்களின் நகரம் என்று அழைக்கப்படுகிறது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அப்பெயருக்கேற்ற வகையில் காஞ்சி முழுவதிலும், ஆலயங்களின் அடர்த்தியின் வரிசையினை அந்நகருக்குள் பயணிக்கும் போதே நம்மால் உணர முடியும்.

பல வரலாறுகளைத் தாங்கிய பல நூற்றுக் கணக்கான ஆலயங்கள், இந்நகரினை அலங்கரிப்பினும், ஏகாம் பரர் ஆலயமானது எல்லாவற்றிலும் பழம் பெருமை வாய்ந்ததாகவும், முதன்மையானதாகவும், கலைச்சுவடுகள் பல கடந்தும், இன்றும் அதன் கலையழகு மற்றும் கம்பீரம் சிறிதும் குன்றாமல், விண்ணை முட்டும் ராஜகோபுரங்களுடன் இம்மாநகரை நோக்கி வருவோரை வரவேற்கும் வகையில் காட்சியளிக்கிறது.

ஒரு நகரமானது, பழங்காலம் தொட்டு, கோவில்களை முதன்மையாகக் கொண்டு உருவாகியிருக்கிறது. அவ்வழியே, காஞ்சி நகரமானது ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும், இக்கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில், இன்றளவும் நகரங்களுக்கான கட்டமைப்புடன் அனைத்து வரையறை களுக்குள்ளும் உட்பட்டு, தொடர்ந்து நம்முடனே பயணிக்கிறது.

இந்நகரின் முதன்மையான ஏகாம்ப ரேஸ்வரர் ஆலயமானது தெற்கு ராஜ கோபுரம், மேற்கு ராஜகோபுரம் மற்றும் பல்லவ கோபுரம் ஆகிய கோபுரங்களை வாயில்களாகவும், கோவிலின் அரணாக வும், அமைக்கப்பட்டுள்ள தோற்றமானது, ஆலயத்தின் பரிமாணத்தை உயர்த்தி காட்டுவது மட்டுமின்றி, அதன் கம்பீரத்தை வெளிப்படுத்துகிறது. இதில், தெற்கு ராஜகோபுரமானது ஒன்பது நிலைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் பரிமாணங்கள் முறையே நீளம் 115 அடி அகலம் 82 அடி மற்றும் உயரம் 192





தெற்கு ராஜகோபுரம்

அடியாக அமையப்பெற்றுள்ளது. மேலும் இக்கோபுரமானது, 11 கலசங்களை அதன் உச்சியில் தாங்கி நிற்கிறது. மேலும் கோபுரத்தைச் சுற்றிலும் கலை யழகு மிளிரும் நூற்றுக்கணக்கான சுதைச் சிற்பங்கள் கோபுரத்தின் அழகினை மேலும் மெருகூட்டி இருக்கிறது.

சுதைச் சிற்பங்கள் என்பது சுண்ணாம்புக் கற்கள் மற்றும் மாக்குச்சி களை பயன்படுத்தி பழங்காலம் தொட்டு உருவாக்கப்பட்டவை ஆகும். இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த தெற்கு ராஜ கோபுரமானது ஏறத்தாழ 700 ஆண்டுகளுக்கு முற்பட்ட அதாவது 14-ம் நூற்றாண்டில் விஜய நகரப் பேரரசின் சிறப்பு வாய்ந்த மன்னர் கிருஷ்ண தேவராயரால் கட்டப்பெற்றது. இது விஜயநகர பேரரசின் கட்டிடக் கலையையும் அதன் ஆற்றலையும் பறைசாற்றும் வண்ணம் இன்றும் அழகுடன் உயர்ந்து நிற்கிறது.

இத்திருகோவிலின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள கோபுரமானது சுமார் ஆயிரத்தி நானூறு வருடங்களுக்கு முற் பட்டது. இது 7 நிலைகளைக் கொண்டு அதன் உச்சியில் 7 கலசங்கள் அமைக்கப்பட்டு, ஏறத்தாழ 35 அடிகள் உயரம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரத்தின் முகப்பு பகுதியில் மாடங்களை ஒட்டி துவார பாலகர்களின் சுதைச் சிற்பங்களும் கோபுர கலசங்களின் கீழ் அடுத்துள்ள மாடத்தின் வரிசையில் விநாயகர் மற்றும் முருகர் சிற்பங்களானது நின்ற கோலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், இங்கு அமைக்கப்பட்டுள்ள துவார பாலகர்களின் சிற்பங்களானது இரு கைகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் சிற்பங்கள் பல்லவர்கள் காலத்தில் உருவாக் கப்பட்டு செதுக்கப்பட்டன. குறிப்பாக, இரு கைகளை உடைய துவாரகர்களின் சிற்பங்கள் மகேந்திர வர்மராலும், நான்கு கைகளை உடைய துவாரக பாலகர்களின் சிற்பங்களானது அடுத்து வந்த பல்லவ மன்னர்களாக உருவாக்கப்பட்டிருக்கலாம் என்பது அறிஞர்களின் கருத்தாகும் .

நூற்றாண்டுகள் பல கடந்தும் கோபுரத்தில் உள்ள சிற்பங்களின் அமைப்பு மற்றும் தன்மையானது சிறிதும் குன்றாமல் அழகுடன் இன்றும் காட்சியளிக்கிறது. அவ்வழியே, இக்கோபுரத்தின் கலசங் களில் தலை பகுதியானது தாமரை இதழ்களை விரித்தது போன்ற அமைப் பில் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் அனைத்துமே கலசங்களுமே ஒரே அளவில் அச்சில் வார்த்தது போன்ற ஒரே மாதிரியான வடிவத்தில் ஒத்துக் காணப்படுகிறது.

அங்ஙனமே, பல்லவர்களின் கலைத்திற னும், அன்று வாழ்ந்த கலைச் சிற்பிகளின் நுட்பமான கவின் கலை அறிவும் இன்றும் பலருக்கும் பறைசாற்றும்



பல்லவா கோபுரம்



மேற்கு ராஜகோபுரம்

சான்றாக விளங்குகிறது. அடுத்துள்ள கோபுரமானது பல்லவமன்னர்களாலேயே கட்டப்பட்டது. இது ஏறத்தாழ ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தது இது ஏழு நிலைகளைக் கொண்டு, தரையிலிருந்து சுமார் 35 அடிகள் உயரத்தில் ஏழு கலசங்களை தன் உச்சியில் அலங்கரித்த வண்ணம் காட்சியளிக்கிறது. இக்கோபு ரத்தின் மாடங்களில் இருபுற மும் துவாரக பாலகர் நான்கு கைகளுடன் கூடிய சிற்பங்களானது வடிவமைக்கப் பட்டுள்ளது. இவ்வகையான துவாரக பாலகர்கள் மகேந்திரவர்மன் பல்லவனுக்கு அடுத்து வந்த நரசிம்ம பல்லவர் காலத்தைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் இரு கோபுர வாயில்களும் ஒரே காலத்தை சார்ந்திருந்ததாயினும் ஒவ்வொரு காலகட்டத்திலும் கலையின் பரிமாணமானது நுட்பமான வகையில் அழகின் தன்மை மாறாமல் புதுமைப் படுத்தப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளது. அவ்வகையிலே, இவ்வாலயம் மட்டுமின்றி, பல்லவர்களால் ஏற்படுத்தப்பட்ட பல கோவில்களும் காஞ்சி மாநகரம் முழுவதும் பல்லவர்களின் கலைத்திறனையும், கட்டி டத்தின் நுட்பத்தையும் சிற்ப அளவையும் இன்றும் தனித்துவமாக முரசுக் கொட்டி அறிவிக்கிறது.

இத்திருக்கோவிலின் சிறப்புகள் ஆனது, வெவ்வேறு நூற்றாண்டு கால இடை வேளைகளில் பல மன்னர்களானது ராஜ கோபுரங்கள் ஆனது எழுப்பப் பட்டிருப்பினும், அதன் அமைப்பில் எந்த விதமான மிகப் பெரிய மாற்ற வேறுபாடுகள் ஏதுவு மின்றி, கோவிலின் அமைப்பினது விரிவுபடுத்தப்பட்டுள்ளது ஆயினும் அந்த அந்த காலகட்டத்திற்கு ஏற்ப சிற்சில கலை நுட்ப மாற்றங்களுடன் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நூற்றாண்டுகள் இடைவெளி இருப்பினும், கட்டிடம் மற்றும் சிற்பக் கலையின் தொழில் நுட்பமானது அதன் ஆதாரத்தன்மையில் மாற்றமின்றி பல தலைமுறைகளுக்கும் கடத்தப்பட்டு, ஒவ்வொரு தலைமுறையினராலும் உணர்ந்து, உள்வாங்கி ஈடுபாட்டுடன் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. அதனாலேயே, அதன் சிறப்புகள் இன்றும் மானுட சமூகத்தால் கொண்டாடப்படுகிறது. இத்தகைய சிறப்புகள் மட்டும் இன்றி இவ்வாலயத்தின் மற்ற தனித்துவமான சிற்பங்களை அறிய தொடர்ந்து உளி பேசும் மொழியுடன் பயணியுங்கள்.

உளி பேசும் மொழி தொடரும் -■

---

## உளி பேசும் மொழி
## தொடர் கட்டுரையாருக்கு பிரபலங்களின் பாராட்டுகள்

காஞ்சிப் பட்டுப் புடவைகள்- ஓவிய மாமேதை மணியன் ஓவியங்கள் குறித்த உங்களின் இரண்டு கட்டுரைகளையும் ஆழ்ந்து படித்தேன்.

மிகவும் சிறப்பாக, செறிவான செய்திகளுடன், நல்ல நடையில் எழுதியிருக்கிறீர்கள்.

கண்களைக் கவருகின்ற காஞ்சிப் பட்டுப் புடவைகளின் உருவாக்கத்தில் உறைந்திருக்கின்ற நெசவாளர்களின் பேருழைப்பை உங்களின் கட்டுரை மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகிறது.

காஞ்சிபுரம் பகுதியில் எனது உறவினர்கள் பட்டுப் புடவைகளை நெய்யும்போது, அருகில் இருந்து கவனித்து நான் அடைந்த வியப்பை, மீண்டும் எனக்குள் தோற்றுவித்து விட்டீர்கள்.

அதேபோல ஓவிய மாமேதை மணியன் அவர்களின் ஓவியங்கள் பற்றிய உங்களின் கட்டுரை, பொன்னியின் செல்வன் கதையை முதல் முதலாக நான் படித்த 1970- களுக்கு என்னை இழுத்துச் சென்றுவிட்டது.

தறி வரைந்த ஓவியமாகவும், தூரிகை நெய்த பட்டுப் புடவையாகவும் இவ்விதழில் உங்கள் ஆற்றலை நீங்கள் அழகாக முன் வைத்திருக்கிறீர்கள்.

நல் வாழ்த்துகள்!

**கவிஞர். ஜெயபாஸ்கரன்**

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் பற்றிய அருமையான ஆராய்ச்சிக் கட்டுரை . அதன் கனத்தின் காரணம் புரிந்தது .

கீழடி , சிலப்பதிகாரம் , காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் கோயில் சிற்பங்கள் என்று நெசவுத் தொழில் கருவிகள், நுணுக்கங்கள் என்று பழந்தமிழர் வாழ்வோடு தொடர்பு படுத்தி நீங்கள் எழுதியுள்ள இந்தத் தொல்லியல் கட்டுரை படித்துப் பாதுகாக்க வேண்டிய கட்டுரை .

அடுத்து எந்த ஊர் சிற்பங்களின் உளிகள் பேசிய மொழிகள் வெளிப்படப் போகின்றன உங்கள் எழுத்தின் வழி என்று அறிய ஆவல் மேடம்

**திரு.நாகேந்திர பாரதி**
எழுத்தாளர்.
ஓய்வுபெற்ற வங்கி அதிகாரி (Manager)
சென்னை.

சிறப்பான கட்டுரை. நெசவுத் தொழிலின் தொன்மையை உணர்த்தும் கட்டுரை. புதுக் கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோயில் சிற்பங்களில் காஞ்சிபுரம் பட்டு சேலையின் முகப்பு வடிவமைப்புகள் செதுக்கப்பட்டுள்ளன... பல மேலைநாட்டுப் பெண்களின் உடைகளும் இங்கே உள்ளன.

**கவிச்சுடர் கல்யாண சுந்தரம்**

# காதலும் மோதலும் காதலும்

வார்த்தைகளின் வர்ணசாலம் வரைந்த கோலம்
வலம்வந்த பாதைகளில் வனப்பை நல்கி
பார்வைகளின் மோதலினால் பயமும் நீங்கி
பாதங்கள் நிலத்தினிலே படிந்த ஓவம்
கார்கால மழைச்சாரல் கடலாய் யெங்கும்
களிப்புடனே சில்லென்று களிப்பைத் தந்தும்
போர்க்காலப் பதைப்புடனே புகைய வைத்த
புதியதொரு தடமாகப் பொதிந்த காதல்

காதலினால் கலங்கிடாது கடிதம் மூலம்
கரைந்திடுமாம் கலந்திடுமாம் கனிந்த நெஞ்சம்
மோதலினால் முகந்திரிந்து மூட்டம் கொண்டு
முள்ளாக நெருடலினை முடித்த வேகம்
பாதகங்கள் செய்யவைக்கும் பக்கம் பார்க்கும்
பணிந்திடாது சந்தேகம் பதைத்துப் பூக்கும்
வாதனைதான் வளர்ந்திடுமே வதைக்கும் தேகம்
வழுங்குமந்த அன்பினாலே வளையும் மெல்ல

மெல்லமெல்லப் பேசிடவும் மென்மை யாக
மேனியெங்கும் மகிழ்வாகத் துள்ளி யாட
நல்லதுதான் என்றவளும் நன்றி கூறி
நகைத்திடுவாள் தலைவனுடன் நாட்டம் கொண்டும்
கல்லான உள்ளமதும் கவலை நீங்கி
காதலினால் சிக்குண்டே காலம் செல்லும்
மெல்லவனும் அவளழகைக் காண காண
மீன்போன்ற நீளவிழி மினுக்கி நீந்தும்

தமிழ்நெஞ்சம் அமின்



# அவளும் ஓர் எஜமானி தான்

சுஸானா முனாஸ்
மூதூர்.

அந்தச் சிறு ஒட்டு வீட்டின் முன் திண்ணைக்குந்தில், சுவரில் சாய்ந்தபடி அவள் உட்கார்ந்து இருந்தாள். ஒடிசலான தேகம். மாநிறத்துக்கும், கருமைக்கும் இடைப்பட்ட நிறம் . சற்றே கிழிசலுடன் கூடிய சேலை அவளைச் சுற்றியிருந்தது. அந்தத் திண்ணையின் எதிரே கீழே சற்றுத் தள்ளி, முன்னங்கால்களை மடித்துப் படுத்தபடி, தலையை நிமிர்த்தி அவளையே பார்த்துக்கொண்டிருந்தது அந்தப் பூனை. கறுப்பும், மஞ்சளும், வெண்மையும் கலந்து, யாரோ பிடித்து வைத்து வண்ணமடித்தது போல் இருந்தது அதன் தோற்றம். பூனைகளின் வழமையான கண்கள் போல் அல்லாமல், சற்றே வித்தியாசமாய் வெண்ணிறத்தில் நட்ட நடுவே சிறு கீறலாய் கறுப்புமணிகளுடன் மிக அழகாக இருந்தது அதன் கண்கள். அந்தப் பூனையையே வைத்த விழி மாறாமல் பார்த்துக்கொண்டிருந்தாள் அவள். அந்தப் பூனையும் கூட அவளைத்தான் இமைக்காது பார்த்துக்கொண்டிருந்தது. அதன் விழியோரத்தில் சின்னதாய் நீர்ப்படலம் இருந்த மாதிரி இவளுக்குத் தோன்றிற்று.



இந்தப் பத்து நாட்களாய் இப்படித்தான் அந்தப் பூனை வந்து அவள ருகில் படுத்துக் கொள்கிறது. அவளிடம் அது உணவு கேட்டுக் கத்தவில்லை. அதன் பாட்டில் படுத்துக் கிடக்கிறது. இடையிடையே எங்கேயோ கிளம்பிப் போகும். அப்புறம் திரும்பிவந்து அவளருகிலே நெருங்கியும், நெருங்காமலும் அளவான இடைவெளிவிட்டு, முன்னங்கால்களை மடித்து, அவளுக்கு முன்னால் படுத்துக் கொள்ளும். அவ்வேளைகளில் எல்லாம் அதன் பார்வை அவளை விட்டு அகலாது. இரவுகளில் மட்டுமே அவளை விட்டு அது அகன்றுபோனது.

இத்தனைக்கும் அவள் அதனை வளர்க்க வில்லை. அக்கம்பக்கத்தில் யாராவது வளர்த் திருக்கக்கூடும்... அல்லது தானாகவே தான் வளர்ந்ததோ... அவளுக்குத் தெரியவில்லை. அந்த ஆராய்ச்சிக்கு அவள் போகவும் இல்லை. சில காலமாய் தான் அது வந்து கொண்டிருந்தது. சில வேளைகளில் அதற்கு

அவள் உணவு கொடுத்திருக்கிறாள். சில நாட்களில் தேங்காய் சிரட்டையால் எறிந்து துரத்தியுமிருக்கிறாள். அந்தந்த நேரங்களில் அவளது மனநிலையைப் பொறுத்து அவளது நடவடிக்கை இருந்திருக்கிறது. அப்போதெல்லாம் இந்தப் பூனை எப்படி உணர்ந்திருக்கக்கூடும் என்பதை எப்படி நம்மால் ஊகிக்க முடியும்.

மனித மனம் என்பது நிமிடத்துக்கு நிமிடம் ஏன் வினாடிக்கு வினாடி மாறக்கூடியது என்பது பாவம் பூனை அறிந்திருக்க நியாயம் இல்லை. அதைப் பற்றி சிந்திக்க அவளுக்கும் எண்ணம் இல்லை. சிந்திப்பதனால் என்ன பயன்... அப்போதும் அந்தப் பூனை அவளைத் தான் பார்த்துக்கொண்டிருந்தது. அந்தப் பார்வையில் பரிதாபம் கலந்திருப்பதாய் அவளுக்குத் தோன்றிற்று. அது அவளது கற்பனையாகக் கூட இருக்கலாம். அவளது இதழ் கோடியில் வலிநிறைந்த இளம் புன்னகையொன்று தோன்றி மறைந்தது. நீ பரிதாபப்படுவதால் எனக்கு என்ன நடந்து விடப்போகிறது என்கிற சலிப்பான இதழ் பிதுக்கலை அந்தப் பூனை உணர்ந்திருக்க முடியாது.

திண்ணைக்கு முன்னே முற்றத்தில் பலத்த வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. கைகலப்பு ஏற்பட்டு விடுமோ என்கிற பயம் அக்கம் பக்கத்தில் இருந்தவர்களிடம் இருந்தது. இந்தப் பத்து நாட்களாய் தினமும் இது நடந்துகொண்டு தான் இருந்தது. வேடிக்கை பார்ப்பவர்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு நாளும் ஒவ் வொருவிதமாக இருந்தது. அவளுக்கு அது ஒரு பொருட்டாகவே இல்லை. பெரும் பான்மையான நேரங்கள் உணர்வுகள் மரத்துப் போனதுபோல் வெறித்த பார்வையுடன் அந்தத் திண்ணையில் சாய்ந்திருப்பதே அவள் வேலையாகிப் போயிற்று. இப்போ

# நேசித்திருப்போம்!!!

அன்பு செலுத்துகிறீர்களா!
உங்களை நீங்களே
கொஞ்சம் தயார்படுத்திக் கொள்ளுங்கள்!!!

எதிர்ப்பார்க்காமல்,
அதிக ஆசை கொள்ளாமல்,
அளவோடு நடந்துகொள்ளுங்கள்!

கர்வங்களை,
கௌரவங்களை,
பிடிவாதங்களை
எல்லாம் தளர்த்தி வையுங்கள்!

அதிபுத்திசாலித்தனமான
பேச்சும் செயலும்
தேவைபடாது!

கொஞ்சம் முட்டாளாய்,
கோபக்காரனாய்,
முரண்டுபண்ணும் குழந்தையாய்
மாறிவிடுங்கள்!

ஒரு நேசத்தை முழுதாய் அநுபவிக்க
எந்த சட்டதிட்டமும்
தேவையற்றது!

அது ஒரு மென்மலரை போல,
அதன் இதழ்கள் மடியும் வரை
அது மணம் வீசும்!

கொஞ்சம் நேசித்திருப்போம்!

Afra Jameel

தும் அதே பார்வை அந்தப் பூனை மேல் இருந்தது. அதுவும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தது. அதன் பார்வை யில் கனிவா... பரிதாபமா... அல்லது இரண்டுமா கலந்திருந்தது என்பதனை பிரித்தறியத் தெரியவில்லை அவளுக்கு.

இடையிடையே கண்களைத் திறந்து திறந்து மூடிக்கொண்டது அந்தப் பூனை. அந்தச் செயல் நீ கவலைப்படாதே என்று சொல்வது போல் அவளுக்குத் தோன்றிற்று. மனிதர்களின் சுயநலமிக்க ஆயிரம் ஆறுதல் வார்த்தைகளை விட அந்த ஒற்றைச் செயல் அதிகளவு ஆறுதலைத் தருவதாக அவள் உணர்ந்தாள். அவளது பார்வையில் தெரிந்த நன்றியை அந்த ஐந்தறிவு ஜீவன் உணர்ந்து கொண்டதா என்பது அவளுக்குத் தெரியாத போதிலும் அப்படித்தான் என்று அவளாகவே உறுதிப் படுத்திக்கொண்டாள். அதுவும் அப்படித் தான் என்பது போல் பார்வை மாறாமல் அப்படியே படுத்துக் கிடந்தது.

‘ஏம்பா... இப்படி சண்டை பிடிக்கி றீங்க.... இடிஞ்சு போய் உட்கார்ந்திருக்கிற அம்மாவுக்கு ஆறுதலா இருக்க வேணாமா...

பக்கத்து வீட்டுத் தாத்தா கடிந்து கொண்டார்.

‘யோவ்... பெரிசு... ஒன்வேலய பார்த்துட்டுப் போவியா... எங்க குடும்ப வெவகாரத்துல நீ ஏய்யா மூக்க நொளைக்கிறே ...‘

பெரியவனின் குரல் ஓங்கி எழுந்தது.

‘சே.... ஒங்கப்பன் இருந்தவரை இல்லாத கஷ்டத்தையெல்லாம் கொடுத்தான். இப்ப ஒங்க மொறையா... எந்த நேரத்துல பொறந்து தொலைச்சாளோ பாவி ...’

தாத்தாவின் அங்கலாய்ப்பு அவர்களின் வாய்த்தர்க்க சத்தத்தில் அப்படியே அமிழ்ந்து போயிற்று.

‘ஏம்மா பேசாம இருக்கீங்க... ஒரு முடிவ கெதியா சொல்லாம...‘ சாறனை தொடை தெரிய மடித்துக்கட்டிக் கொண்டு இளையவன் அடிப்பது போல் நெருங்கிவர, யாரோ அவனை இழுத்துக் கொண்டு போனார்கள். நல்ல வேளை தாயை அடித்த பாவத்தில் இருந்து அவன் தப்பிக் கொண்டான்.

அவன் நெருங்கி வந்து போட்ட சத்தத்தில் அந்தப் பூனை ஓர் உறுமலுடன் எழுந்து போய் சற்றே தள்ளி நின்று உடம்பை ஒரு முறை சிலிர்த்துவிட்டு, மீண்டும் வந்து அதே இடத்தில் அதே மாதிரியே படுத்துக்கொண்டது. அவளது வெற்றுப் பார்வையை அது புரிந்துகொள்ள நியாயமில்லை.

பத்து நாட்களுக்கு முன்னர் தான் அவள் புருஷன் இறந்துபோயிருந்தான். நிறை போதையில் பாதையை கடக்க முற்பட்ட போது, எதிரில் வேகமாய் வந்த வாகனத்தில் மோதுண்டு இறந்து போனான். வாகனம் ஓட்டி வந்தவன் மேல் எந்தத் தவறும் இல்லை. அந்தப் பிரதான சாலையில் திடீரென ஒருவன் முட்டாள்தனமாய் கடப்பான் என்பதை அவன் எதிர்பார்த்திருக்க மாட்டான். அந்த வாகனமோட்டியும் அப்படியே அவனை விட்டுவிட்டு ஓடி விடவில்லை. மனிதம் இன்னும் கொஞ்சமே கொஞ்சமேனும் வாழ்கிறது என்பதை உலகுக்கு உணர்த்து வதுபோல அவள் புருஷனை வைத்திய சாலையில் சேர்த்து அவன் இறந்து விட்டான் என்றதும் காவல்துறையிடம் சரணடைந்தும் விட்டான்..

சடலமாய் வீடு வந்தவனைப் பார்த்த வளுக்கு அழுகை வரவில்லை. பார்வை

வெறித்தது மட்டுமே. அது அவன் மரணத்தில் வந்த அதிர்ச்சியும் இல்லை. அவள் சுபாவமே இப்போது அப்படித் தான் மாறிப்போயிற்று. உயிரோடு இருந்த வரைக்கும் அவன் அவளை சந்தோஷமாகவே வைத்திருக்கவில்லை. மணம் முடித்த புதிதில் கொஞ்ச நாட்கள் புது உறவு, தாம்பத்யத்தின் புதுமை எல்லாமே வெகுளியான அவளை சந்தோஷமாய் வைத்திருந்தது என்பதென்னவோ நிஜம் தான். அந்தப் புதிதின் புதுமை மாறிய பின்னால் அவள் கண்டதெல்லாம் வேதனையின் பக்கங்களைத் தான். எல்லாமே பழகிப் போனால் சரியாகிவிடும் என்பது போல் வேதனைகளின் மத்தியில் வாழ்வதே அவளுக்குப் பழக்கமாய் போய்விட்டது.

தினமும் குடித்து விட்டு வந்து ரகளை பண்ணும் புருஷன்... எதற்கெடுத்தாலும் பட் பட்டென்று கை நீட்டும் அவன் இயல்பு... அதை விட பிடிக்குதோ இல்லையோ இரவுகளில் அவனது இச்சைக்கு அடிபணிய வேண்டிய கட்டாயம்... எல்லாவற்றையும் உள்ளுக் குள்ளே போட்டுப் புதைத்துக் கொண்டு, வாழ்க்கையை அதன் போக்கிலேயே வாழப் பழகிக்கொண்டாள் அவள்.

ஆரம்பத்தில் ஓரிரு தடவை எதிர்த்துப் பேசப் போய் அதனால் பட்ட ரணங்கள் அவள் வாயை அடைத்து விட, பேசா மடந்தையாய் போனவளின் இயல்பே அதுவென்றாகிவிட்டது. எதிர்த்துப் பேசி, பஞ்சாயத்துப் பண்ணி, வெளியேறி தனக்கென சுதந்திரமான ஒரு வாழ்வை வாழும் தைரியமோ, கல்வியறிவோ அவளுக்கு இல்லாத போது உணர்வுகளை அடக்கிக்கொண்டு அப்படியே வாழ்ந்து விடுவதை விட வேறு வழி.

உணர்வுகள் மரத்துப் போய் வாழ்ந்த

# இளையவன் சிவா - கவிதைகள்

1

உங்களின் வசதிக்காகவும்
வற்புறுத்தலுக்காகவும்
எனது அமைதியின் எல்லையை
திறந்து காட்டச் சொல்கிறீர்கள்
வன்மமும் சினமும்
வதங்கிப் போகாமல்
குருதி குடிக்கக் காத்திருக்கும்
இந்த நெஞ்சில்தான்
உங்களின் முன்னால்
ஆட்டம் காட்டாமல் அடங்கி
நிற்கிறது எனது சிரிப்பின் எல்லை
வாருங்கள்
உங்களின் வார்த்தைகளுக்கேற்ப
எனக்கான ஆயுதங்களைத்
தேடத் துவங்கலாம்.

2

நகரும் பாதையில்
இடைவெட்டும் எல்லா
பள்ளங்களையும்
மூடிடப் பார்க்கிறேன்
மேடுகள் எனைத் தாங்கிட
நீளும் கரங்களுக்குள்
மணற்குவியல்
இருப்பதை மறைக்க
பள்ளம் பார்க்கிறது
மேடாகிப் போன என்னை.

3

முட்டும் முயற்சிகளில்
தட்டும் கதவுகளில்
எட்டும் சிகரங்கள்
என்றும் தப்பாது
உழைப்பின் பாதையில்
தளராது நடை போடும்
அறிவின் பயணத்தில்
இடையூறுகள் நுழைகையில்
எல்லைகள் மாறியே
வெற்றியைத் தள்ளிவைக்கும்.
சோர்வின் பின் நின்று
உனக்கு நீயே கொள்ளி
வைக்காமல்
வேலையென எண்ணாது
சேவையெனப் புகழ்ந்தே
புறப்படு நில்லாது
தோல்வியும் மாறிடும்
வெற்றியென
துவண்டிடும் முயற்சியும்
எழுந்திடும் இமயமென.

வளுக்கு அவனது இழப்பு ஒரு வித விடுதலை உணர்வையே அவளுக்குத் தந்தது. தாம்பத்யம் என்பது வெறுமனே உடல் இச்சையைத் தீர்ப்பது இல்லை. மனதால் ஒன்றுபட்டு ஒருவரையொருவர் நேசித்து வாழ்வதுதானே... இங்கே மனம் ஒன்றுபடாத போது உடல் சேர்ந்தாலும் அங்கே உறவு மலர வாய்ப்பில்லை. கடனே என்கிற ஒரு வாழ்வில் அவனது இழப்பு கூட அவளுக்கு வருத்தத்தைவிட ஒரு வித நிம்மதி உணர்வையே தோற்று வித்திருந்தது. இந்த உணர்வை அவள் வெளிக்காட்டினால் சமுதாயத்தில் அவள் கேவலமானவளாய் சித்தரிக்கப் படக்கூடும். பெண்களின் உணர்வுகள் என்றுமே மதிக்கப்படுவதில்லையே...

அவளது வாழ்வில் இரண்டு சந்தர்ப் பங்களில் தான் அவள் முழுமையான சந்தோஷத்தை அடைந்திருக்கிறாள். அதுவும் கூட இப்போது அது ஏன் நடந்தது என்கிற வருத்தமே மேலோங்கி நிற்கிறது. அடுத்தடுத்த வருடங்களில் அவளுக்குப் பிறந்த இரண்டு புதல்வர் களின் பிறப்பு தான் அவள் வாழ்வின் மகிழ்ச்சியின் உச்சகட்டம். அந்தப் பிள்ளைகளின் இளமைப்பருவம் மற்ற துன்பங்களை அறவே மறக்கடித்து, அவளுக்கு மகிழ்ச்சியையே கொடுத்தது. பாலைவனத்தில் பசுஞ்சோலையைக் கண்டதுபோல் அவள் உள்ளம் குளிரத் தான்செய்தது. ஆனாலும் பிள்ளைகள் வளர வளர மனம் கல்லாக இறுகிப்போயிற்று.

ஆரம்பத்தில் என்னவோ நன்றாகத் தான் வளர்ந்தார்கள். குடிகாரத் தகப்பனின் பிள்ளைகள் இப்படித்தான் என்கிற முத்திரை பதிந்து விடக்கூடாது என்று அவளும் பார்த்துப் பார்த்து தான் வளர்த்தாள். ஆனாலும் என்ன விதிப்பயன் வேறு மாதிரி இருக்கும் போது, அவளாலும் தான் என்ன செய்து விட முடியும். எங்கே பிழைத்தது என்று புரிந்துகொள்ளும் புத்திசாலித்தனமும்தான் அவளுக்கில்லை. இருவருக்குமே படிப்பு ஏறவில்லை. அதைப் பற்றிக் கவலை கொள்ள அந்தத் தகப்பனுக்கு நேரமில்லை. அதைப் பற்றி புருஷனிடம் கலந்தாலோசிக்க இவளுக்குத் துணிவில்லை. விளைவு இருவரும் திசை மாறி சுற்றத்தொடங்கினார்கள். மனம் ரணகளமாகி அழுது அழுது அவள் உள்ளுக்குள் இறுகிப்போனாள்.

இருவருமே ஆளுக்கொருத்தியாய் இருந்து வந்து கல்யாணமும் பண்ணிக் கொண்டார்கள். அந்த நேரம் அப்பனுடன் ஒரு கலவரமே நடந்தது. அப்போதும் அவள் கண்ணீர் வழிய, வெறுமனே பார்வையாளராக மட்டுமே நிற்க முடிந்தது. அப்பனுக்கும், பிள்ளைகளுக்கும் அவள் ஒரு பொருட்டே அல்ல. வெறுமனே சமைக்கவும், துடைக்கவும் உள்ள இயந்திரம்.... அப்பனுக்கு இரவில் சூடு தணிக்கும் பொம்மை... அவ்வளவே... அவளது உணர்வுகள், ஆசாபாசங்கள், அவளது தேவைகள் எதுக்குமே ஒரு தசம வீதத்திலும் அங்கே இடமிருக்கவில்லை.

மகன்களுக்கு கல்யாணம் முடிந்ததும் வீடு இன்னும் சந்தைக்கடை போலாயிற்று. இவர்களுடன் கூட வந்தவர்கள் பின்னே எப்படி இருப்பார்கள்... தினமும் குழாயடிச் சண்டை தான். எதற்காக சண்டை பிடிக்கிறார்கள் என்பது பாதி நேரம் அவர்களுக்கே புரிந்திருக்காது. எது நடந்தாலும் கடைசியில் இவளது இடுப்பில் இவளது புருஷனால் விழும் உதையில்தான் அது முடியும். பெரும்பாலான நேரங்களில் சண்டை தொடங்கும்போதே, பெரியவனின் இரண்டு வயதுப்பெண்ணைத் தூக்கிக் கொண்டு, அவள் தெருவோரமாய் நடக்கத் தொடங்கிவிடுவாள். முடியும் போது வந்தாலும் புருஷனின் கை

இவளைப் பதம் பார்க்காமல் ஓயாது. சில நேரம் தவிப்பு... சில நேரம் கோபம்... சில நேரம் வெறுப்பு... சில நேரம் சலிப்பு.... எப்போதாவது தோன்றும் சின்னச் சின்ன சந்தோஷங்கள் என்பதே அவள் வாழ்க்கையாகிப்போயிற்று.

அந்தந்த நேரத்து மனநிலைக்கு ஏற்ற வாறு தான் அவளது நடத்தை அந்தப் பூனையோடு இருந்திருக்கிறது. அந்தப் பூனையின் மனதில் கூட..‘ என்ன இந்தப் பெண் ஒரு நேரம் உணவு தந்து என் பசியை ஆற்றுகிறாள்... இன்னொரு நாள் கடுகடுத்த முகத்துடன் தடியாலோ, சிரட்டையாலோ அடித்து விரட்டுகிறாள்...‘ என்று எண்ணியிருக்கக்கூடும். பாவம் அதற்கெங்கே தெரியப்போகிறது சுற்றி யுள்ளவர்களால் ஏற்படுத்தப்படும் மாறு பட்ட உணர்வு மாற்றங்கள்தான், அவளது மாறுபட்ட மனநிலைக்கும் காரணமென்று,



இன்னும் பலத்த சத்தம் கேட்டுக் கொண்டு தான் இருந்தது. என்ன கதைக் கிறார்கள் என்பது தெளிவாகப் புரியவே இல்லை. எல்லோரும் ஒரே நேரத்தில் பேசிச் சண்டைபோடுவதால், மொழிகள் கலவையாகி வெறுமனே புரியாத சப்தம் மட்டுமே கேட்டது. இத்தனை காலமும் சில்லறை விஷயங்களுக்காக சண்டை போட்டவர்கள், இப்போதுதான் உருப்படியாக ஒரு சண்டை போடுகிறார் கள். உருப்படியான சண்டையென்றால், தந்தையின் இழப்பின் பின் தனித்துப் போன தாயை யார் வைத்து நன்றாகப் பராமரிப்பது என்கிற பாசப் போராட்டச் சண்டை என்று நீங்கள் நினைத்துக்கொண்டால் அதற்கு நான் பொறுப்பாக முடியாது... அவள் இதழ்கள் இகழ்ச்சியாய் நெளிந்தன. இந்த ஒற்றை வீட்டை யார் கைப்பற்றிக்கொள்வது என்கிற போராட்டமே அங்கே நிகழ்ந்து கொண்டிருந்தது. அவளது புருஷன் இறக்கும் வரை இந்த வீட்டைப் பற்றிய உரிமைப் போராட்டம், அரசல் புரசலாக நடந்த போதிலும், அவனது மரணத்துக்குப் பின் தான் முழுவீச்சில் ஆரம்பமாயிற்று.

அங்கே கைகலப்பு தொடங்கிவிடும் போல் அத்தனை ஆக்ரோஷமாய் சொற் போர் நடந்துகொண்டிருந்தது. அவள் இப்போது தான் பூனையில் இருந்த பார்வையை விலக்கி முற்றத்தை நோக்கி னாள். அருகருகே இருந்த வீடுகளி லுள்ளோர் வேடிக்கை பார்க்க ஆங்காங்கே குழுமி நின்றார்கள். சிலரின் முகத்தில் பரிதாபம்... சிலரின் முகத்தில் பரிகாசம் ...

பெரியவன் சின்னவனின் நெஞ்சுச் சட்டையைப் பற்றி உலுக்கிக் கொண்டி ருந்தான். அருகில் நின்றவர்கள் அவர் களை விலக்கப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இருவரின் மனைவி மார்களும்கூட, கொண்டையை அள்ளி

முடிந்து கொண்டு, குத்துச்சண்டைக்கு தயாராவது போல் முறுக்கிக்கொண்டு நின்றார்கள். அவளின் பார்வை நகர்ந்து சற்றுத் தள்ளிப்போய் முற்றத்து மணலில் படிந்தது. அங்கே பெரியவனின் மூன்று வயதுக்குழந்தை, சின்னவனின் ஒன்றரை வயதுக்குழந்தையுடன் சிப்பிகளை வைத்து விளையாடிக்கொண்டிருந்தது. இந்தக் கச முசாக்கள் அந்தக் குழந்தைகளை சலனப் படுத்தவில்லை. முகத்தில் மலர்ந்திருந்த சிரிப்புடன் அந்தக் குழந்தைகள் தங்கள் உலகத்தில் லயித்திருந்தார்கள். அதனைப் பார்த்ததும் கண்களில் சிறிதே பளிச்சிட்ட ஒளியுடன் அவள் பூனையைத் திரும்பிப் பார்த்தாள். அதுவும் எதுவோ புரிந்த தினுசில் கண்களை ஒரு முறை மூடித்திறந்து அவளைப் பார்த்தது.

அவள் சட்டென எழுந்தாள். கலைந் திருந்த கொண்டையை உதறி திரும்பவும் முடிந்து கொண்டாள். வீட்டினுள் நுழைந்து ஒரு சிறுபையில் தனது உடைகளை அள்ளித் திணித்தாள். தன்னிடமிருந்த சிறு தொகைப் பணத்தை, சுருட்டி அதற்குள் வைத்தாள். சேலையை உதறி திரும்பவும் கட்டிக்கொண்டவள் வெளியே வந்தாள். ஓரமாய் கிடந்த செருப்பினை மாட்டிக்கொண்டு முற்றத் தில் இறங்கினாள்.

'எங்கேம்மா ராதிகா... போறே...' தாத்தாவின் குரல் தான் அவர்களைத் திருப்பிற்று. துணிப்பையுடன் நின்ற தாயைப் பார்த்தவர்கள், தங்கள் சண் டையை நிறுத்தி அருகில் வந்தார்கள்.

'என்னம்மா... இப்படி பேசாம கிளம்பினா எங்க பிரச்சினைக்கு என்ன தீர்வு...' பெரியவனின் அதட்டலுக்கு சின்ன வனும் ஒற்றுமையாய் தலையாட்டினான். இப்போதும் அவர்களது பிரச்சினைதான் முன்னின்றதே தவிர, தாயின் முடிவு அவர்களைப் பாதிக்கவில்லை. மனதில் வெறுப்பு மூள, அவள் எதுவும் பேசாமல் நடக்க முற்பட தடுப்பதுபோல் முன்னே வந்தவர்கள்

'சொல்லுங்கம்மா....' என்றார்கள் ஒரு மித்த குரலில்.

அவள் கண்களில் அனல் பறந்தது. சடாரென ஓங்கிய கை இருவரது கன்னத்தையும் முதல் தடவையாக பதம் பார்த்தது. அந்தக் கணம் அங்கே பலத்த அமைதி நிலவிற்று குழந்தைகளின் சிறு சிரிப்பைத் தவிர.

ஏகப்பட்ட அதிர்ச்சியுடன் கன்னத்தை இறுகப் பற்றிய படி, புலிபோல் கண்கள் மின்னப் பார்த்த தாயை மிரட்சியுடன் பார்த்தார்கள் அண்ணனும் தம்பியும். அவர்களை புழுக்களைப் பார்ப்பது போல் அருவருப்புடன் பார்த்தவள் 'த்தூ...' வென அருகில் காறி உமிழ்ந்து விட்டு , அவர்களைச் சுற்றிக் கொண்டு மேலே நடந்தாள். அவளது மனக்கண்ணில் என்றோ பார்த்த 'சரோஜினி அன்பு இல்லம்' என்கிற பெயர்ப்பலகை மின்னிற்று. மனம் நிர்மலமாகி, துணிப்பையை மார்போடு இறுகப்பற்றியபடி நடந்தவளின் கால்களை ஒட்டியபடி அந்தப் பூனையும் மெல்ல நடந்தது. விழிகளைத் தாழ்த்தி அதனைப் பார்த்தவளின் விழியோரத்தில் மெல்லிய நீர்ப்படலம் தெரிந்தது. குனிந்து அந்தப் பூனையைத் தூக்கியவள், தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டு நடந்தாள். அதுவும் என்ன நினைத்ததோ முரண்டுபண்ணாமல் அவளது நெஞ்சில் சாய்ந்திருந்தது. பூனைகள் தான் தங்கள் எஜமானர்களை தேர்ந்தெடுத்துக் கொள்கிறது என்று எங்கோ கேள்விப்பட்டது நிஜமாகிப் போன தினுசில் சலனமின்றி அவள் நடந்துகொண்டிருந்தாள்.

■

# மரணம் என்னை அழைக்கின்றது

என் பிடரி நரம்பை பதம்
பார்க்க வேண்டி
என்னை எந்நாளும்
துரத்திக் கொண்டிருக்கும்
மரணத் தோட்டாவின் வருகையை
இந்நாட்களில் நான்
அதிகம் உணர்கின்றேன்....

ஒவ்வொரு அசைவுகளிலும்
ஓராயிரம் முறை நினைவாகும்
மரண நினைவலைகளில் நிதம்
தொலைந்து போகின்றேன்...

இவ்வுலகில் நான் அதிகம் நேசித்த
என்னை இவ்வுலகில்
அதிகம் நேசித்த என்
அன்பான உறவுகளோடு
பல மணி நேரங்களை செலவிட
வேண்டுமென அகம் நாடுகின்றேன்...

சொந்த ஊருக்கு ஓடிச் சென்று
தாய் மடியில் ஓர் நொடி உறக்கத்திற்கும்;
தந்தை அரவணைப்பின் ஓர் நொடி
சுகத்திற்கும் ஒட்டுமொத்தமாய்
கண்ணீரில் மூழ்குகின்றேன்...

கொஞ்சி விளையாடி
மிஞ்சி சண்டையிட்டு கரம் கோர்த்து
கதை பேசி சுற்றி வந்த என் சகோதரிகளோடு
அன்பாட அடைக்கலம் தேடுகின்றேன்...

சின்ன வயது முதல் நான் சந்தித்த
என் பால்ய கால தோழிகளை சந்தித்து
அவர்களோடு பல மணி நேரம் செலவழித்து
இறுதியாய்... பிரியாவிடை பெற்று வர
கணம் தேடுகின்றேன்...



மாணவியென்ற நிலை தாண்டி;
மகளென்ற நிலையில் மகத்துவமாய்
என்னைக் கொண்டாடிய என்
ஆசான்களைக் கண்டு ஓராயிரம் முறை
நன்றிகள் சொல்லி வந்திட வேண்டுகின்றேன்...

இறுதியாய் அத்துனையும்
அடுத்த நொடியையே கேள்வியாக்க
உலக நொடிகள் யாவும் துறந்து
தொழுகை விரிப்பிலேயே
என் இறுதிப் பொழுதுகளனைத்தையும்
ஒட்டுமொத்தமாய் கழித்து விட
மனம் ஏங்குகின்றேன்...

பாத்திமா ஹகீமா அமீனுதீன்
ஓட்டமாவடி

# தன்முனைக் கவிதையின் தோற்றமும், வளர்ச்சியும் (4)



**அன்பு செல்வி சுப்புராஜூ**
பட்டாபிராம், சென்னை

காலமெல்லாம்
பசியோடு இருந்தவள் முன்
பலவகையாய் வைக்கப்படுகிறது
படையல் சோறு

தன்முனைக் கவிதைகளில் முதல் நூல் வெளியிட்ட கவிஞர் என்ற சிறப்புக்குரியவர் மதுரையைச் சேர்ந்த கவிஞர் இளவல் ஹரிஹரன் ஆவார். ஏறத்தாழ இருநூறு தன்முனைக் கவிதைகளுடன் தனிமனிதர் எழுதி வெளியிட்ட முதல் நூலாக 'குழந்தை வரைந்த காகிதம்' அக்டோபர் 2018 ஆம் ஆண்டு ஒவியா பதிப்பகம் வெளியீடாக வெளிவந்துள்ளது.

இந்நூலில் இருந்து ஓரிரு கவிதைக-ளைப் பகிர விழைகிறேன். தனிச்சுற்று இதழ்கள், சிற்றிதழ்களை வாங்கி வாசித்த அனுபவம் அனைவருக்கும் உண்டு. உயர்ந்ததரத்துடன் இருந்தாலும் கூட பொருளாதாரச் சிக்கலில் சிக்கித் தடுமாறாத சிற்றிதழ்கள் ஏதுமில்லை. அதனாலும், சூழலின் காரணமாகவும் ஒரு சில இதழ்கள் கைகளில் வராமல் போய்விடுவதுண்டு. இது சிற்றிதழுக்கே உண்டான அவலநிலை. ஆனால் அவ்விதம் நடந்தாலும் இதழின் மேலுள்ள ஈர்ப்பால் ஒருசிலர் ஆயுள் சந்தாதாரர் களாக தொடர்வார்கள். அந்த இதழின் இலக்கிய நயம், தரம், உள்ளீடு ஏதோ ஒன்று அவ்வாசகனை தன்வயப்படுத்தி தன்னுள்ளே மூழ்கச் செய்திருக்கும். அவ்விதமே அவனும், அவளும் போலும். வாழ்நாள் சந்தாதாரராக வாசிக்கக் காத்திருக்கிறான் அவன். காதலின் இனிமையை உணர்த்தும் கவிஞரின் பார்வை இளமை.

சிற்றிதழாய்
அவ்வப்போது நீ
வாராத போதும் உன்
வாழ்நாள் சந்தாதாரர் நான்

அடுத்தொரு கவிதையில் எத்தனை காலங்கள் கடந்து போயிருந்தாலும், திருந்தாத சமூகத்தை நோக்கித் தனது சுட்டு விரலை நீட்டியுள்ளார். என்றென்றும் ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி. ஒரே விதமான செயலை ஆண் செய்தால் அவனுக்கு ஒரு நியாயம், பெண் செய்தால் அவளுக்கு ஒரு நியாயம்... இது என்ன நியாயம்? என்று தன் மனக் குமுறலை வெளிப்படுத்தி இருக்கிறார் பாருங்கள்.

புத்தனாய் யசோதரையும்
நாடு துறந்திருந்தால்
கிடைத்திருக்கும்
ஓடுகாலிப் பட்டம்

ஆமாம்தானே... இக்கவிதை சரித்திர நிகழ்வினையே கேள்விக்குள்ளாக்கும் கவிதை மட்டுமல்ல, ஆணாதிக்க மனோபாவம் உள்ள சமூகத்தையும் கேலிக்குள்ளாக்கும் கவிதையும் ஆகும்.

தன்முனைக் கவிதைகளில் தனியொரு நூல்வெளியிட்ட முதல்பெண்கவிஞர்என்ற சிறப்புக்குரியவர் புதுச்சேரியில் வசிக்கும் கவிஞர் காரை இரா. மேகலா ஆவார். இவர் எழுதிய 'சுவரோர செம்பருத்தி' எனும் நூல் ஏப்ரல் 2019 ஆம் ஆண்டு 'இராகம் பதிப்பகம்' வாயிலாக வெளிவந்துள்ளது. இந்நூலில் இருந்து ஒரு சில கவிதைகள்

பாரம்பரியமான திண்ணைகளும், கூடங்களும், தூண்களும் அற்று கான்கிரீட் மயமாகிவிட்ட இன்றைய காலகட்டத்தில், தூண்களைக் கொண்டு தலைமுறையைக் கட்டிக் காத்த வரிகள். வரும் தலைமுறை யினருக்கு நாம் விட்டுச் செல்லும் வர லாற்று தடங்கள்

எத்தனை தலைமுறை
கட்டிப் பிடித்ததோ?
நடுக் கூடத்தில்
தேய்ந்த மரத்தூண்

பெண் குழந்தைகளை வெளியுலகம் அறியாதவாறு பூட்டி வைத்த காலங்கள் குறைந்து போனாலும் கூட, இன்றும் ஒரு தவறு நடந்தால் அதற்கான மொத்த பழியையும் தூக்கி பெண்களின் மேல் சாட்டும் வழக்கமே இன்றும் உள்ளது. அந்த இடத்தில் தவறு செய்வது ஆண்க ளாக இருந்தாலும்கூட, பெண்ணின் உடல-மைப்புகளை, ஆடைகளை, குணநலன்களை காரணமாக்கி, ஆண்களின் தவறு களை... சரியாக்கும் மனோபாவம் பெருகியுள்ள இன்றைய சூழலுக்கு ஏற்ற வகையில், அத்த-கைய சூழலை எவ்விதம் சரிசெய்யலாம் என்று தீர்வு சொல்லும் கவிதையாக இறுதி வரியில் எதிர்பாரா திருப்பமுடன் அமைந்த கவிதை இதோ

பெண் குழந்தைகள்
பாதுகாப்புடன் வளர
நெறியுடன் வளர்க்கப்பட வேண்டும்
ஆண் குழந்தைகள்

தன்முனைக் கவிதைகள் எழுதும் ஆர்வத்துடன் கவிஞர்கள் பெருகி வந்த வேளையில் அடுத்தொரு படிக்கல்லாக 26/01/2019 சனிக்கிழமை தஞ்சை மாநகரில் நடைபெற்ற 'கவியுலகப் பூஞ்சோ-லை' முகநூல் குழுமத்தின் மூன்றாமாண்டு விழாவில், கவிச்சுடர் கா.ந. கல்யாணசுந்தரம் ஐயா அவர்களின் தலைமையில் "நலம் தேடும் நட்பின் சுவடுகள்' எனும் தலைப்பிலான கவியரங்கம் நடைபெற்றது. 25/03/2019 இல் 'மூகரம்' குழுமம் முதன்முதலாக தன்முனைக் கவிதைகள் போட்டி நடத்தியதும். தொடர்ந்து 'தமிழ்ச்சேவை' முகநூல் குழுமம் அடுத்தடுத்து என இப்போது பல முகநூல் குழுமங்களில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

தன்முனைக் கவிதைகளுக்கு ம ற்று மொரு அங்கிகாரமாக 'இனிய உதயம், மகாகவி, காணி நிலம், கவி ஓவியா, மின்னல், தமிழ்ப்பணி, ஏழை தாசன், அருவி, இனிய நந்தவனம், பொதிகை மின்னல், கொலுசு உள்ளிட்ட இன்னும் பல இலக்கிய ம ற்றும் சிற்றிதழ்களும்... தமிழ்நெஞ்சம், குவிகம், வல்லினச் சிறகுகள், காற்றுவெளி, கவிதைப் பெட்டகம் போன்ற மின்னிதழ்களும் தன்முனைக் கவிதைகள் மற்றும் நூல்கள் குறித்த தகவல்களை வெளியிட்டது தன்முனைக் கவிதை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது எனலாம்.

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் ஒலிக்க வேண்டும்' என்றார் முண்டாசுக் கவிஞர் பாரதியார். அவரது கனவை நன வாக்கிய சிறப்பான நூலைப் பற்றி அடுத்த இதழில் கூறுகிறேன்.

அந்த புத்தகத்திலிருந்து நான் விரும்பிய ஒரு கவிதை உங்களுக்காக

தனியே
ஓய்வெடுக்க வேண்டும்
வெளியேற மறுக்கிறது
என் நிழல்

கவிஞர் காவனூர் ந.ம சீனிவாசன்...

# பிரிவு – சுகமா ? சோகமா?



கி. இரகுநாதன் பெங்களூர்.

பிரிவு சோகம் என்கிறீர்கள்
பிரிவே சுகம் என்கிறேன் நான்.

பிரிவு இயற்கையின் நியதி.
எதிராக செயல்பட்டால்
எதிர்மறை விளைவுகளே ஏற்படும்..
இதுவே உலக விதி.

சூரியனில் இருந்து பிரிந்த
சில துண்டுகள் தானே
இன்று நாம் வாழும் பூமியும்
இன்னபிற கோள்களும்...!!

நிலமும் நீரும்
காற்றும் கடலும்
பிரிந்திருந்தால் தான்
நமக்கு நிம்மதி.
ஒன்றாகச் சேர்ந்து விட்டால்...??
நம் கதி.... அதோகதி....!!

கடலில் இருந்து
நீர் ஆவியாகப் பிரியாவிட்டால்
மேகங்கள் ஏது ...???
மேகத்தில் இருந்து
நீர் பிரியாவிட்டால்
மழை தான் ஏது ...??

இரவும் பகலும்
இருளும் ஒளியும்
இன்பமும் துன்பமும்
ஆனந்தமும் அழுகையும்
பிரிந்து நிற்பதால் தானே
வாழ்க்கை வசீகரம்...!!
தண்டவாளங்கள்
பிரிந்து நின்றால் தானே
பயணம் சாத்தியம்..!!
உடலில் இருந்து
சளி, கபம், வியர்வை,
மலம், சிறுநீர் என
சகல வித கழிவுகளும் பிரிந்து
வெளியேறாமல் தங்கி விட்டால்
'ஆகா.. எவ்வளவு சுகம்' என்று
ஆனந்தம் அடைவீரா...??

மணமான பின்னும் பெண்
பிறந்த வீட்டை விட்டுப் பிரியாமல்
அங்கேயே தங்கி விட்டால்
அதற்கு என்னப் பெயர்..??

உருவான கரு
உடலை விட்டுப் பிரியாமல்
உள்ளேயே தங்கிவிட்டால்
உற்றாரும் உறவுகளும் கூடி நின்று
சோகம் கொள்வீரா..??
சுகம் என்பீரா ...??

சிசுவின் உடலில்
தொப்புள்கொடியைப்
பிரித்து வைப்பது எதனால் ....???
நாக்கு பிரியாமல்
ஒட்டிக் கொண்டால்
பேச்சு எங்ஙனம்..??

செயல் வடிவம் கொடுக்கப்படாமல்
எண்ணங்கள் மூளையை விட்டுப்
பிரியாவிட்டால் முன்னேற்றமேது..??
நல்லவை எவை ...
கெட்டவை எவை ..
நல்லோர் எவர்..
தீயோர் எவர்..
எது சரி ... எது தவறு ...
என சகலத்தையும்
பிரித்து ஆய்வது தானே பகுத்தறிவு...!!

வாக்கியத்தின் அழகு
வார்த்தைகளின் அர்த்தமுள்ள பிரிவன்றோ..!!
யாழில் இருந்து சப்தம் பிரிந்தால் தானே
ஓசையும் இசையும்..!!

**Phase** என்றும்
**Neutral** என்றும்
**Earthing** என்றும்
பிரிந்திருப்பதில் தானே
ஒளியும் வெளிச்சமும்...!!

மரத்தில் இருந்துப் பிரிந்து
கீழே விழுந்த
ஒரு ஆப்பிள் தானே
மகத்தான கண்டுபிடிப்புகளுக்கான
ஆரம்ப வித்து..!!

'சாஸ்திரம் பொய் சாவதே நிஜம்'
என்று சொல்லும் இவ்வுலகில்
'வந்தவரெல்லாம் தங்கி விட்டால்
இந்த மண்ணில் நமக்கே இடமேது...'

மரணம் எனும் பிரிவு கொடிது தான்
மன்னித்து விட்டு விடுமா இயற்கை..??
இந்த யதார்த்தத்தை
ஏற்றுக் கொள்வது தானே வாழ்க்கை ..!!!
மனதில் இருந்து பாரத்தைப் பிரிக்க
மனம் திறந்து பேசுவது தானே
சிறந்த வழி...!!!
உடலில் அழுக்குகள் பிரிவது
உடலுக்குப் புத்துணர்ச்சி...

மன அழுக்குகள் பிரிவது
மானுட குலத்துக்கே
மறுமலர்ச்சி..!!!!!!!!

சொல்லுங்கள்....
பிரிவு ...
சுகமா..??? சோகமா .....????

(முற்றும்)

## காதல்வலி *(கசல் கவிதை)*

வான்வெளியில் நிலவெனவே
வலம்வருவாய் - என
நினைத்தவனின் நினைவாகற்றிப்
புலம்பெயர்ந்தாய்

வாவென்று வாஞ்சையுடன்
அழைக்கின்றாய் - நீ
தொட்டுவிடும் தூரத்திலா இருக்கின்றாய்?
வீழ்ந்தபின்னும் எதற்காக வீசுகின்றாய் - ஓ
மரணமேநீ என்னசெயப் போகின்றாய்?

தேடித்தான் அலையவைத்தாய்
தேவதையை - எனைத்
தேடித்தான் அலைகின்றேன் தேவதையே!

சொல்லாமல் பிரிந்துசென்றாய்
காத்திருந்தேன் - பின்
பேசாமல் பிரிந்துநின்றாய் வேர்த்திருந்தேன்!

பிழைப்பேனா தெரியாது
பேச்சில்லை - இனி
பிழைத்தாலும் பிணம்
எனக்குப் மூச்சில்லை !

**ச.ந.இளங்குமரன்**
**வையைத் தமிழ்ச்சங்கம், தேனி**

# மாறுவேடம்

மீஅழுத்தத்தை குறைக்க
மாறுதலுக்காக
மாறுவேடப் போட்டி
கடவுள்களுக்கிடையே...

மயிலிறகைச் சூடி
புல்லாங்குழலை வாசித்தவாறு
ஆடுகளை மேய்க்கிறார் இயேசு
சிலுவையும் முட் கிரீடமும்
சுமந்தவாறு கிருஷ்ணன்
நவீன ஆடையணிந்து
நடையிடுகிறார் மகாவீரர்
அரச கோலத்தில்
மிளிர்கிறார் புத்தர்
பர்தா அணிந்து
பசுவிற்கு
தீவனம் தருகிறார்
மேரி மாதா...
கைதட்டி ஆரவாரம்
செய்கிறார்கள்
பார்வையாளராக
அமர்ந்திருக்கும் பிற கடவுள்கள்

அதே கணம்...
உயர்நீதிமன்றத்தில்
வழக்கு தாக்கல்
அக்பர் சீதா பெயரிட்ட
சிங்கங்களை
ஒரே கூண்டில் அடைக்க
கண்டனம் தெரிவித்து



-பா.சிவகுமார்

# கிழித்தெறியட்டும் இனியாவது...

**முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம்**

ஓடம் ஓடவேண்டும்
மூழ்கினாலும் கப்பல் அழகென்று
இந்த மானுடம் வர்ணிக்கிறது
அலைகளே வாழ்கையை
நிலைப்படுத்தும் ஆயுதம்
நங்கூரங்கள் கூட பலநேரம்
நம்பிக்கை இழக்கின்றன !

வெற்று காகிதம்தான் என்றாலும்
உனது கைகளால் காகித ஓடமானேன்
அலைகளில்லா குளத்தில்
என்னை மிதக்கவிட்டு
வேடிக்கைப் பார்க்கிறாயே
இது தகுமா ?

நில அதிர்வுகளில்
அலைகளின் ஆர்பரிப்பில் பேரழிவு
இலக்குகளின்றி பயணித்தலை
பாய்மரக்கப்பல்கள் அறிந்திருக்க
காற்றின் திசைகளே
இலக்குகளாகின்றன !

அடிப் பெண்ணே
உண்மையைச் சொல்லிவிடு
போலியாய் உறவாடாதே
உனது எண்ணத் திசைகளை
நன்கறிவேன் !

இனிக் காத்திருப்பு பயனில்லை
வாழ்க்கைக் குளத்தில் மூழ்கி முத்தெடு
உணர்வுக் காகிதத்தில்
கத்திக் கப்பல்களை மிதக்கவிடு
கிழித்தெறியட்டும் இனியாவது
ஆணவக் கொலைகளை!

# ஹைக்கூவில் கட்டாயம் 17 அசைகள் இருக்க வேண்டுமா?

ஹைக்கூவில் 17 அசைகள் இருக்க வேண்டியதில்லை. அந்த 'விதி' ஜப்பானிய மொழியில் அர்த்தமுள்ள ஒன்றை அடிப்படையாகக் கொண்டது, ஆங்கிலத்தில் அதிகம் இல்லை. ஜப்பானிய மொழியில் 'அசைகள்' (ஓன்ஜி) 5 - 7- 5 வடிவத்தில் உள்ளன. ஆனால் ஜப்பானியமானது முதன்மையாக பல்லசைகள் கொண்ட மொழி ஆகும். எனவே அதே வடிவத்தை அடிப்படையாக் கொண்டு ஆங்கிலத்தில் ஹைக்கூவை உருவாக்குவது பெரும்பாலும் நீண்ட கவிதையாக மாறிவிடும்.

ஹைக்கூ என்பது சாதாரண கவிதையை விட குறைவான அசைகள் கொண்ட வடிவம். பாரம்பரிய ஹைக்கூவில் மூன்று வரிகள் உள்ளன. முதல் மற்றும் மூன்றாவது வரிகள் ஒரு வகையான இடைச்சொல் மூலம் பிரிக்கப்படுகின்றன.

மேற்கத்திய ஹைக்கூ எழுத்தாளர்கள் 1900களின் முற்பகுதியில் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தொடங்கி ஜப்பானியர்களைப் பின்பற்றி 5-7-5 எழுத்து வடிவத்தைப் பயன்படுத்தினர். ஆனால் ஜப்பானிய மொழி செயல்படும் விதத்தின் காரணமாக (இது ஆங்கிலத்திற்கு மாறாக மிகவும்நிலையான நீளமான ஒலிகளைப் பயன்படுத்துகிறது, எடுத்துக்காட்டாக, ஒரு ஒற்றை அசையென்பது பல்வேறு நீளங்களைக் கொண்டதாக இருக்கலாம்) ஹைக்கூ வடிவத்தில் எழுதுபவர்கள் கண்டிப்பாக 5-7-5 விதியைக் கடைபிடிப்பதில் இருந்து விலகத் தொடங்கினர்.

இன்று எந்த ஹைக்கூ பிரசுரத்தைப் பார்த்தாலும் ஹைக்கூவை எல்லா விதமான வடிவங்களிலும் அளவுகளிலும் பார்க்கலாம். சில ஹைக்கூக்கள் ஒரே ஒரு சொல்லைக் கூட கொண்டிருக்கும்.

பாரம்பரிய ஜப்பானிய கவிஞர்களின் பத்து ஹைக்கூக்களின் அசல் உரைகளை, சரிபார்த்தலில் அசைகள் 11 முதல் 19 எழுத்துக்கள் வரை மாறுபட்டன. மற்றும் இரண்டில் மட்டுமே 17 அசைகள் இருந்தன. அவர்கள் பிரெஞ்சு மொழியில் சொல்வது போல், «il ne faut pas être plus royaliste que le roi» (நீங்கள் ராஜாவை விட அதிக ராஜரீகவாதியாக இருக்கக் கூடாது) நீங்கள் பூசன் அல்லது பாஷோவை விட ஹைக்கூ கவிஞராக இருக்க முடியாது.

**An/ old/ si/lent pond...**
**A/ frog/ jumps/ in/to the/ pond/**
**Spla/sh!/ Si/lence again/**
**Matsuo Basho**

5/7/5

அமைதி/யான பழங்/ குளம்
ஒரு/ தவளை/ உள்/ளே குதிக்/கிறது
தெறி/ப்பு! மீண்/டும் அமைதி/

4/6/5

**Aut/umn moon/light-**
**a/ worm/ digs/ si/len/tly**
**in/to the/ chest/nut. /**
**Matsuo Basho**

4/6/5

*இலை/யுதிர் நில/வொளி -*
*ஒரு/புழு/அமைதி/யாக/எடுக்/கிறது*
*கஷ்/கொட்டை/க்குள்.*

**O/ snail/**
**Cli/mb Mou/nt Fuji/,**
**But/ slow/ly, slow/ly! ---**
**Kobayashi Issa.**

*2/4/5*

*ஓ/ நத்தை/யே*
*பியூஜி/ மலை / யேறு*
*ஆனால்/ மெது/வாக/ மெது/வாக*

*3/3/5*

*ஹைக்கூ என்பது வடிவத்தைக் காட்டிலும் உள்ளடக்கத்தைப் பற்றியது - குறைந்தபட்சம் இயற்கை உணரப்படாவிட்டால், அல்லது அது ஒரு விரைவான தருணத்தின் உணர்வை விவரிக்கவில்லை என்றால், அது ஹைக்கூ அல்ல என்று நான் கூறுவேன்.*

*வடிவத்தின் சில பரிசீலனைகள் உலகளாவியதாகத் தோன்றுகின்றன: நவீன மேற்கத்திய கவிதைகளைப் போலவே, மூன்று 'வரிகள்'. ஒவ்வொன்றிற்கும் இடையே ஒரு இயற்கையான இடைநிறுத்தம் இருக்க வேண்டும். பல நவீன மேற்கத்திய கவிஞர்கள் 5-7-5 முறைக்கு குழு சேரவில்லை. அமெரிக்கக் கவிஞர்களின் அகாடமி இந்த பரிணாமத்தை அங்கீகரிக்கிறது, ஆனால் நவீன ஹைக்கூவில் பல அடிப்படைக் கொள்கைகள் பின்னப்பட்டிருக்கின்றன. அதாவது, ஒரு ஹைக்கூ இன்னும் ஒரு சுருக்கமான தருணத்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறது, ஆத்திரமூட்டும், வண்ணமயமான காட்சிகளை பயன்படுத்துகிறது, மேலும் ஒரு திடீர் ஒளியை வழங்குகிறது.*

*ஹைக்கூவை ஹைக்கூவாக மாற்றும் முக்கிய விஷயம் கவிதையின் ஆன்மா. நாள்முடிவில், நீங்கள் 5-7-5 இல் எழுத விரும்பினால், நிச்சயமாக உங்களால் முடியும். இன்னும் சிலர் செய்கிறார்கள். ஆனால் கவிதையில் உள்ள எழுத்துக்கள் கவிதையின் ஆன்மாவைப் போல முக்கியமானவை அல்ல. நல்ல ஹைக்கூவைப் படித்து அவர்களிடமிருந்து கற்றுக் கொள்வது.*

**https://writing.stackexchange.com/questions/6599/does-a-haiku-need-to-have-exactly-17-syllables**

**தமிழில் : ராஜு ஆரோக்கியசாமி**

## ஊக்கமருந்து உயிர்நகலுக்குள்

ஒவ்வொரு நாள் காலையிலும்
இசை இலக்கியம் நடைபயிற்சி மின்னிறைப்பி
கொண்டு நேர்மறையெண்ண நீரை
நிரப்ப நிரப்ப
வழியும் மனத்தொட்டி
உற்சாகமாய்த் தொடங்கும்
வெற்றிப்பாதை பயணம்

எதிர்மறையெண்ண உள்ளங்கள் திறக்கும்
நீர்க்குழாயில்
ஒழுக ஒழுக
வற்றிப் போகும் வாழ்க்கை

ஒழுகும் குழாயை அடைத்து
பொழியும் நேர்மறை மழையால்
நிரம்பி வழியச்செய்யும்
வரம் குழந்தைகளின் அன்புவானம்

மீண்டு(ம்) ஓடும் வாழ்க்கைவண்டி



**ஸ்ரீவி.முத்துவேல்**
துபாய்

# கவித்துளிகள்



## பேராசை

தொலைந்து போக
ஆசைப்படுகிறேன்
உன்னிலிருந்தும்,
என்னிலிருந்தும்.
ஆசைப்படுவதும் பாவமென சொன்ன
புத்தனும் என் நிலையில் இருந்திருந்தால்
ஆசைப்படு என்று சொல்லி விட்டு
சென்றிருப்பார்.

## நரகம்

வறுமையில் கூட
புன்னகையொன்றை
உதிர்த்து விட்டு
இனிமையாய்
கடந்து வந்திருக்கிறேன்.
தனிமையில்
வெறுமையை மட்டுமல்ல
இளமையையும்
தொலைத்து விட்டு
கொடுமையான
நரகத்தை காண்கிறேன்!

## நிஜம்

வாழ்க்கை
சந்தோசத்தை மட்டுமே தருமென
பேராசையெல்லாம்
கொள்ளக் கூடாது.
கனிவும் ,
பிரிவும்,
முறிவும்
இணைந்ததே இப்பிரபஞ்சம்!

## அளவுக்கு மிஞ்சினால்

பேரன்பும்
வெறுப்பாய் மாறும்
மிதமிஞ்சி போனால்!

## வாழ்க்கை

பட்டாம் பூச்சி வாழ்க்கையே
சிறை வாழ்க்கை தான்
ஒரு நாள் வாழ்க்கை வட்டத்தில்
பட்டாம் பூச்சியாய் வாழ்ந்து பார்
பறப்பது கூட
கண்ணாடிக் குடுவையிலிட்டு
சித்ரவதை செய்து
உன்னை துடிக்க வைக்கும்
நரக வாழ்க்கை என புரியும்.
புழுவாய் அவதரித்து
குளவி பிரம்மன் உருவாக்கிய
பட்டாம்பூச்சியின் வாழ்க்கை
கெட்டுப் போன
நீங்கள் அறிந்திராத
அடிமை வாழ்க்கையென
உருமாற்றம் பெற்றால்தான் புரியும்.
வலிகளை சொல்வதை விட
வாழ்ந்து பார்த்து
நீயே தெரிந்து கொள் என
சட்டென பறந்தது
ஊர்,பெயர் தெரியாத
ஒரு பட்டாம் பூச்சி!

## மனசு

புரிந்து கொள்ளாதால் தான்
பிரிந்து சென்றோம் என
புத்திக் கெட்ட மனசுக்கு
கடைசி வரை
ஏறுவதே இல்லை!

## துக்கம்

கலா ரசிகனே
ஜெயமோகனை போல் அல்லாமல்
சுயமாய் இரண்டு வகை
துக்கம் பற்றி
நீயாவது
புரியும் படி
சொல் என்றாய்.
எப்படி சொல்வது?
துக்கம் உருவாக்கும்
பெண்களே துக்கம் பற்றி
கேட்பது முறையா?
இன்னொன்று எதுவென
நீ கிசுகிசுக்கும் முன்பே
என் அழுத
கண்களே அதுவென
கண்ணீர் தவிர்த்து
எப்படி சொல்வது?
பெண்களும்-அலைபாயும்
கண்களும்
இருக்கும் வரை
சிதையில் எரியும்
மனித பிண்டம்
சாம்பலாகும் வரை
இப்பிரபஞ்சத்தில்
தூக்கம் தொலைத்த
துக்கம் இருக்கும்!

**நௌஷாத் கான் .லி**

# உழைப்பாளர்களை உயர்த்துவோம்

உழைப்பே என்றும் உயர்வாகும்!
உடலை உறுதி ஆக்கிவிடும்!
தழைக்கும் தொழில்கள் நாட்டினிலே
தளரா உழைப்பின் பலனன்றோ!
பிழைக்கும் ஏழை உடல்வருத்திப்
பெரிதும் உழைப்பர் பசியுடனே!
உழைப்போர் நலனைக் காத்திடுவோம்!
உதவி செய்தே ஆதரிப்போம்!

வயலில் உழைக்கும் விவசாயி
வளத்தைச் சேர்க்கும் உழைப்பாளி!
அயரா துழைக்கும் தொழிலாளி
ஆற்றல் நாட்டின் உயர்வேதான்!
முயற்சி கொண்டே உழைத்திடுவார்!
முனைப்பாய்க் கடமை ஆற்றிடுவார்!
இயற்கை வளத்தைக் காத்திடவே
இணைந்தே உழைப்போம் அனைவருமே !

உரிமை கேட்கும் உழைப்பாளர்
உண்மை வலியைப் புரிந்திடுவோம்!
எரியும் தணலோ வயிற்றினிலே!
ஏங்கும் ஏழை பசிதீர்க்க
நெறியைக் காட்டும் முதலாளி
நீதி காக்க முன்வரட்டும்!
அறிவோம் வளர்ச்சி உழைப்பால்தான்!
அகத்தில் வணங்கிப் போற்றிடுவோம்!



**ஒசூர் மணிமேகலை**

# நிமிர்ந்து நில்

மங்கையரே வாருங்கள்
மகிமை பல காத்திருக்கு ….
பெண்மைக்குள்ளிருந்து
பொறுமையாய் பெற்றிடுவோம்.

காலத்தின் கண்ணாடி
கைகளில் தாங்கிடு
வாழ்க்கை பயணம்
வாழ்வதில் தெரிந்துக்கொள்

ஆளுமை பெண்ணே
அடுப்பங்கரை மட்டும்
உன்னுலக மல்ல
உலகை ஆளும் வல்லமையினை
தேடிப் பிடி.

பெண்மை யென்பது
பொறுமைக் காத்து
இறைவழி இதயம் தாங்கி
இன்பம் சேரும் உயர் நிலையில்.

மங்கை நீ மடமை நீக்கு
மாநபி மகளார் மகிமைக்காணு

தந்தை தாய் அன்பை பேணு
திருமணத்தில் நல்கணவரை காணு
அவர் குணத்தோடு
அனைத்தையும் தாங்கு.

குழந்தை செல்வங்களை
குணத்தோடு வளர்ப்பாய்
நாளைய உலகம் நல்
பிரஜையாய் காணட்டும்.

பெண்ணே நிமிர்ந்து நில்
பேதையாய் உள்ளம் நோகாதே
நாளைய உலகம் நம்பிக்கையுடன்
காத்திருக்கிறது
உனக்கான இடத்தை
உடன் தருவதற்கு.

எஸ்.யூ.கமர்ஜான் பீபீ (J.P)

# சிலப்பதிகாரம் ஒரு வாழ்வியல் காப்பியம்!

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை.

சிலப்பதிகாரம் கோவலன் என்ற குடிமகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டதால் இதனை 'குடிமக்கள் காப்பியம்' என்று கூறினாலும், இது இன்பியலும் துன்பியலும் கலந்து எழுதப் பட்டதால் ஒரு வாழ்வியல் காப்பிய மாகும்.

ஒருவரது வாழ்க்கையை முழுமையாகப் பார்த்து, உயர்ந்த உண்மைகளைக் காட்டி, மனித சமுதாயத்தை வழி நடத்திச் செல்லும் முதல் இலக்கிய முயற்சியாக, பெருங்காப்பியமாக, அமைந்தது சிலப்பதிகாரம் ஆகும். காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்து, குலவொழுக்கப் படி திருமணம் செய்து, இல்லறம் நடத்திய கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாற்றை விளக்குவது இந்நூல். இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை மூன்று காண்டங்களில் முப்பது காதைகளில் விரிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.



இரஜகை நிலவன்

**சிலப்பதிகார செய்திகள் :**

சிலப்பதிகாரம் இவ்வுலக மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் மூன்று உண்மைகளைக் கருப்பொருளாகக் கொண் டுள்ளது.

- அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவது ;
- உரை சால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவது ;
- ஊழ் வினை உருத்து வந்து ஊட்டும்.

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்'

சிலப்பதிகாரம் கோவலன், கண்ணகி மற்றும் கோவலனின் துணைவி மாதவி ஆகியோரது வரலாற்றை விவரிக்கின்றது.

சிலப்பதிகாரம், கண்ணகியின் கற்பொ ழுக்கமும், பாண்டிய மன்னன் நெடுஞ் செழியனின் நேர்மையும் அரசியல் நடுநிலைமையும் அவர்களின் வாழ்விய லையும் குறிப்பிடுகிறது. அக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை பற்றிய செய்திகள் இதில் இடம் பெற்றுள்ளன. திருமணத்தால் ஒன்றுபட்ட கோவலனும் கண்ணகியும் தம்முட் கூடி இல்லறம் நிகழ்த்திய செய்திகள் பலவும் இதன்கண் கூறப்படுகின்றன. சில ஆண்டுகளாக அவர்களின் இல்வாழ்வும் இன்பமுடனேயே கழிந்தது என்பதனை யும், அவர்களைத் தனி மனைக்கண் பெற்றோர் இருத்தியதையும், அவர்கள் தனிகுடும்பமாக வாழத்தொடங்கியதை யும் கூறுகிறது.

**காப்பியத்தின் முக்கிய மாந்தர்கள் ;**

**கண்ணகி** : பாட்டுடைத் தலைவி. கோவலனது மனைவி.

**கோவலன்** : பெரும் செல்வந்தர் மாசாத்துவானின் மகன்.

**மாதவி :** பேரழகி. ஆடற்கலையின் ஆழமுணர்ந்தவள்.

**பாண்டிய மன்னன் :** தென்னவர் கோமானாகிய பாண்டிய மன்னன்

**கோப்பெருந்தேவி :** மன்னனின் மனைவி- பாண்டிய அரசி

**கதைச் சுருக்கம்**

கோவலன் தன் மனைவி கண்ணகி யுடன் பொருள் தேட மதுரை செல்கி றான். மதுரையில் மாதரி என்ற ஆயர் குலப் பெண்ணிடம் கண்ணகியை அடைக்க லமாக இருக்கச் செய்து, கண்ணகி தந்த காற்சிலம்பை விற்று வரக் கருதி மதுரை நகரக் கடைத்தெருவிற்குச் செல்கிறான். அங்கு அரண்மனைச் சிலம்பைத் திருடிய பொற்கொல்லன் ஒருவனது சூழ்ச்சிக்கு ஆளாகிறான். அதன் விளைவு கோவலன் திருடன் எனக் கருதப்பட்டு அரசன் ஆணையால் கொலை செய்யப்படுகிறான். கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட கண்ணகி சினந்து எழுந்து பாண்டியன் அரசவைக்குச் சென்று வழக்குரைத்துக் கோவலன் கள்வன் அல்லன் என்பதைத் தெளிவுபடுத்துகின்றாள். உண்மை உணர்ந்த பாண்டியன் அக்கணமே தன்னுயிர் நீத்து நீதியை நிலை நிறுத்துகிறான்.

**சிலப்பதிகார காப்பிய அமைப்பு**

சிலப்பதிகாரக் காப்பிய நிகழ்ச்சிகள் முறையே சோழ, பாண்டிய, சேர நாடு என்னும் மூன்று நாடுகளில் மூவேந்தரின் தலைநகரங்களிலும் நடந்த நிகழ்ச்சிகளாம். எனவே இக்காப்பியம் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்று மூன்று காண்டங்களாக வகுத்துக் கூறப்பட்டுள்ளது காப்பியத்தில் அறம், பொருள், இன்பம் மூன்றும் இடம் பெறுகின்றன. கோவலனும் கண்ணகியும் வானவர் உலகு (வீடு) செல்வதும் காட்டப் படுகிறது.

**வாழ்வியல் நெறிகள்**

அரசியல் பிழைத் தோர்க்கு அறமே கூற்றாக அமைந்து அவர் உயிரைப் போக்குவதும், புகழ் மிகுந்த பத்தினிக்கு சான்றோரின் போற்றுதல் உண்டாகும் என்பதும், மேலும், முன் செய்த ஊழ்வினை யானது பிற் பிறவியில் சினந்துவந்து, அதற்குரிய பயனை ஒருவருக்கு ஊட்டும் என்பதையும் சிலப்பதிகாரம் நமக்கு காட்டிய வாழ்வியல் நெறிகள், அதை விளக்கும் விதமாகவே இந்த காப்பியத்தை இளங்கோவடிகள் இயற்றினார் என்றார் அது மிகையல்ல.


தமிழ்நெஞ்சம்

## இதழில் எழுதுபவர்கள் கவனத்திற்கு...

பிரதிமாதமும் மாதத்தின் முதல் வாரத்தில் இதழ் வெளிவரும். அதற்கேற்றார் போல 20 தேதிக்கு முன்பாக ஆக்கங்களை அனுப்புதல் நல்லது. அதற்குமேல் வரும் ஆக்கங்கள் அடுத்த இதழில் சேர்க்கப்படும். முந்திக்கொள்வது நல்லதல்லவா?

தவிர, ஆக்கங்களை எழுதிவிட்டு அவசர, அவசரமாக ஆக்கத்தி ற்கான தலைப்பு, மற்றும் எழுதியவர் பெயர்கூட எழுதாமல் அனுப்பிவிடுகிறீர்கள். அப்படியானவைகள் நிச்சயமாக இதழில் இடம் பெறச்செய்ய முடியாது.

இயன்றவரை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கும்படி தய வாய்க் கேட்டுக்கொள்கிறோம். முகநூல் உள்பெட்டி, வாட்ஸ் அப் போன்ற தொடர்பில் ஆக்கங்களை அனுப்புவதைத் தவிர்க்கவும்.

**மின்னஞ்சல் : editor@tamilnenjam.com**

காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்து, குலவொழுக்கப்படி திருமணம் செய்து, இல்லறம் நடத்திய கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாற்றை விளக்குவது இந்நூல். இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை மூன்று காண்டங்களில் முப்பது காதைகளில் விரிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

**காப்பியப் பெருமை**

சிலப்பதிகாரக் காலத்தில் வழக்கிலிருந்த தமிழர்தம் பண்பாடு, சமய நெறிகள், பழக்க வழக்கங்கள், கலைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள இக்காப்பியம் பெரிதும் துணைநிற்கும்.

**சிலப்பதிகாரத்தின் தனிச்சிறப்பு**

ஒருவரது வாழ்க்கை வரலாற்றை முழுமையாக எடுத்துக் கொண்டு, அதன் வழி உயர்ந்த உண்மைகளைக் காட்டி, மனித சமுதாயத்தை வழி நடத்திச் செல்லும் முதல் இலக்கிய முயற்சியாகும். இதுவே சிலப்பதிகாரத்தின் தனிச்சிறப்பு எனலாம்.


**சிலப்பதிகாரக் காலத்தில் சமூக வாழ்க்கை**

சிலப்பதிகாரத்தில் அக்கால அரசியல் நிலை, மக்கள் நிலை, நகர வாழ்வு, கிராம வாழ்வு ஆகியவைகளை அறியலாம். வீடுகள் அனைத்தும் சுடுமண்ணாலும் கோட்டு நூற்றாலுங்கட்டப்பட்டு வளி உலவும் சாளரங்கள் பலவற்றை உடையனவாய் இருந்தன.

உழவினையடுத்து பொருள் வரும் துறை வணிகமாகும். செங்குட்டுவன் காலத்தில் தரை வணிகமும் கடல் வணிகமும் முட்டின்றியும் இடையூறுயின்றியும் நடந்து வந்தன.

நகர வாழ்வைப் போலவே கிராம வாழ்க்கையும் மனவமைதி தருவதாகவே இருந்தது. கிராமத்தினர் பலரும் உழுதொழில் செய்பவராயும், இடையருமாயிருந்தனர். கிராம மக்களின் பொழுது போக்கிற்காக பல நிகழ்வுகள் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பொதுவான ஆடுகளம் ஒன்று இருந்தது. சமூக வாழ்க்கையில் திருமணம் ஒரு தலையாய நிகழ்ச்சியாக இருந்தது. களவு கற்பு என இருமணங்கள் நிகழ்ந்தன. சிலப்பதிகாரம் அரங்கேற்றுக்காதை ஆடற்கலையின் இயல்பையும் இசைக்கலையின் இயல்பையும், ஆடலரங்கேற்ற மேடையின் அமைப்பையும் அவற்றின் இலக்கணத்தையும் விவரித்துக்கூறுகிறது.

சிலப்பதிகாரம் இன்பியலும் துன்பியலும் கலந்து எழுதப்பட்டு கண்ணகியின் கற்பொழுக்கமும், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் நேர்மையும் அரசியல் நடுநிலைமையும் அவர்களின் வாழ்வியலையும் குறிப்பிடுவதால், இன்னூல் ஒரு வாழ்வியல் காப்பியமாகும்.





# குழந்தைகளுக்கு பயத்தையும் சொல்லித் தொடுங்கள்.

1. தனது உடலை பெற்றோரைத் தவிர வேறு யாரும் தொடுவதற்கு அனுமதிக்க வேண்டாம். அப்படி யாராலும் தொட்டால் உடனே கூறுமாறு கற்றுக் கொடுங்கள்.
2. வயது மூன்றில் இருந்து குழந்தைகள் பூச்சிகளை அடித்துக் கொள்ளும் பழக்கம் உண்டு அதை செய்யவிடாதீர்கள். ஏனென்றால் விசப்பூச்சிகள் கடித்தால் உடல் பாதி கப்பட்டு விடும்.
3. பாடசாலைகள் விட்டும் வரும் பொழுது அல்லது பழக்கம் அற்ற தெரியாதவர்கள் ஏதாவது உணவு கொடுத்தால் உண்ண வேண்டாம் என்று கூறுங்கள் ஏனென்றால் போதைவஸ்து பாவனை அதிகமாக பரவி வரும் காலம் இதில் மிக அவதாரமாக நில் லுங்கள்.
4. இன்றைய காலத்தில் தொலைபேசிக்கு அடிமையாக குழந்தைகளே இல்லை. சில குழந்தைகள் அதில் பார்ப்பவையை அப்படி செய்து பார்க்க முயற்சிப்பார்கள் .இதில் இரண்டாவது பக்கத்தை சிந்தித்து செயற்படுங்கள். கேட்டதை பார்க்கும் பொழுது அது அவர்களின் வாழ்வியல் பழக்கமாக மாறிவிட வாய்ப்புகள் அதிகம்.
5. இயற்கை ஆபத்துக்களை பற்றி அச்சத்தோடு கற்றுக்கொடுங்கள்.
6. ஆபத்தை விளைவிக்கும் மிருகங்கள் பற்றியான விளக்கங்களை கற்றுக் கொடுங்கள்.
7. ஆறு , குளம் , நீர்வீழ்ச்சி , கடல் இவற்றின் ஆழம் சூழி ஆபத்துக்களை பற்றி கற்றுக் கொடுங்கள்.
8. வாகன ஆபத்துக்கள் போக்குவரத்து பற்றிய அறிவை கற்றுக்கொடுங்கள்.
9. கற்பழிப்பு விடையங்களை பற்றி அதைப்பற்றியான தகவல்களை கற்றுக்கொடுங்கள். முக்கியமாக யாரும் உடல் மீது கையை வைக்க அனுமதிக்க கூடாது என்பவற்றை கற்றுக் கொடுங்கள்.
10. எல்லா ஆபத்தான நிகழ்வுகளும் , நிகழாமல் நடந்து கொள்ளும் முறையையும், நடந்தால் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற முறையையும் கற்றுக் கொடுங்கள்.

**பஹ்ரியா பாயிஸ்**



# வெண்பா போட்டி (பயணம்) – 28

## காலம் 01 - 12 ஏப்ரல் 2024

## தலைப்பு - இதனைப் படிப்பீர் இனி

.

இறக்கையில் யாரழுவார் என்கின்ற நூலை
இறக்கும்முன் வாசியுங்கள் என்பேன் - மறவாதீர்!
ஆங்கிலநூல் ஆனாலும் ஐநூறில் பாதிதான்
வாங்குங்கள் கட்டாயம் வந்து!

செ. இராசா

.

நீங்காது நீதிவழி நின்றகர்ம வீரரை
பாங்குடன் கொஞ்சம் படித்துப்பார் - தீங்கில்லா
தேசம் உருவாக திக்கெட்டும் பத்துக்கே
வாசகர்க்கு விற்குமிதை வாங்கு!

கவிதா சீனிவாசன்

.

நெஞ்சுக்கு நீதி நினைவுகளைப் பேசுகின்ற
அஞ்சுகம் பெற்றமகன் ஆட்சிசெயும் - கொஞ்சுதமிழ்ப்
புத்தகம் இங்குப் புதிதாக வந்திருக்குப்
பத்துநூறில் பாதிதான் பார்...!

வள்ளி முத்து

.

காட்டுயிர்கள் வாழ்க்கையை கண்முன்னே கொண்டுவந்து
காட்டும் ஜெயமோகன் ’காடு’நாவல் - கேட்டுவாங்கிப்
போற்றிப் படிக்கப் புதுஉலகம் காணலாம்
நூற்றுக்கு மேலிலைஇந் நூல்

க.சங்கரபாண்டியன்

.

விடுகதைகள் நூறு வெடியென பேரு
படித்தால் பயனுறுவாய் பாரு - பிடிஇந்தா
நூறுதான் ரூபாய்! நனிதமிழ்க் கற்கண்டு
சாறுதான் என்பேன் சரி

ஞால ரவிச்சந்திரன்

.

பாரதிக்குத் தாசனிவர் பல்கவிதை வேந்தனிவர்
பாரதிரப் பாட்டெழுதும் பண்பாளர் - ஊரறிய
பாண்டியனை வைத்துப் பரிசினை ஈன்றநூல்
வேண்டுமென தந்தேன் விலை .

அ. முத்துசாமி தாரமங்கலம்

.

பகுத்தறிவு புத்தகம் பாருங்கத் தம்பி
தொகுத்தது ஈவேரா தொண்டு - புகுத்த
முடியாதோ சொல்லித்தான் மூளையில் என்றே
படிகின்ற காசுவைத்தார் பத்து

மன்னை மணிமாறன்

.

நீதியை நாட்டிடும் நெஞ்சில் துணிவுதரும்
பாதிக் கதையோடு பண்பூட்டும் - சேதியுள்ள
நன்நெறி புத்தகம் நாற்பதே ரூபாய்தான்
என்னவென்று பார்க்கா(து) எடு

வே.செந்தில்குமரன்





.

பேயோடு தான்பேசிப் பேதலிக்க வைத்தகதை
தீயோர்கள் யாவரையும் தீயிடுமே மாயோனாய்
ஆவலுடன் நீர்படிக்க ஆக்கியதை வாங்கிடுவீர்
நாவல் விலைஇரு  நூறு.

எழுத்தாளர் நாகா

.

பாரதி தான்புனைந்த பாநூலைக் கற்றுணர்ந்தால்
வீரத்தின் வேர்விடுமே  வெற்றுடலில் - நேரத்தில்
வந்தே இருநூறை வங்கியில் பெற்றுடன்
தந்தால் உனதாகும் தா

பாவலர் கோவதன், மலேசியா

.

இலக்கணத்தை நன்கறிய ஏற்றது நன்னூல்
நலமாய்த் தெளிவுற நாளும் - கலங்காது
கற்க இருநூறே! காசிற்கு வாங்கலாம்
பற்றுடன் வாங்கிப் படி

பிரியங்கா மோகன், பிரித்தானியா

.

நல்ல மரபாசான் நற்றமிழ் வேல்முருகன்
வல்ல இலக்கணநூல் வண்டமிழில் - சொல்லழகாய்
பல்லோர் பயின்றிடவே  பாங்காய்நூற் ஐம்பதுக்கு
வெல்லமெனத் தந்தார் விரும்பு.

தாழை ந. இளவழகன்

.

உலகெல்லாம் போற்றும் உயர்வான நூலாம்
புலவரிவர் காளமேகம் பூண்ட - பலவகை
நற்கவி சீர்தந்தார்  நானூறு மட்டுமே
கற்றிட வாங்குவீர் காண்

பா.இந்திரன்

.

பன்னிரண்டு ஆண்டிற்குப் பின்னொரு காலத்தே
குன்றிலே பூக்கும் ‘குறிஞ்சிமலர்‘ - என்பதைத்)
தன்நாவ லாக்கிய நாபார்த்த சாரதிநூல்
முன்னூற் றெழுபத்தைந் தே

மலர்மைந்தன்

.

அன்னை தெரசா அரிச்சுவடி கண்டிட
உன்னை அறிவாய் உணர்ந்திடு - வான்புகழ்
இன்பம் தொலைத்தே இதயத்தினைத் தந்தவர்
அன்பினின் நூலதை ஆற்று/

பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை

.

ஜெயமோகன் தந்திட்ட சீரிய நூலாம்
நயமான வெண்முரசை நாடி - வியந்துநான்
முப்பத்தைந் தாயிரம் முன்தொகையாய்க் கட்டித்தான்
தப்பாது வாங்கிடுவேன் தான்.

கு. கமலசரஸ்வதி

.

தேரையர் சித்தரவர் தேர்ந்து வடித்தநூலாம்
ஊராரைக் காக்கின்ற  உன்னதப்பா - ஆரம்
பதார்த்த குணநலவெண்  பாக்கள்எண் பதுக்கே
விதர்த்தோதி தேகநலன் வாங்கு.

வானதி சந்திரசேகரன்

.

கலப்பட மில்லாது கற்பிக்கும் நன்னூல்
இலக்கணம் சொல்லும் எளிதில் - பலனாய்
சிலப்பதி காரமும் சேர்ந்திரு நூறில்
இலவச மாகு மிதற்கு

ஆனந்த் சுந்தரராமன்





.

கையடக்க நூலென்றுக்  கற்றிடவே அன்றளித்தார்
மெய்யறிந்த நல்லாசான்;  மேன்மைமிக்க -  அய்யன்
குறுங்கவியாம் சீரார்  குறளினையே; அந்நாள்
அறுபது காசாம்  அது...!

ஜ.க.நாகப்பன்

.

பண்பாடு காக்கும் பனுவல்கள் ஏராளம்
வெண்பா மலர்கள் விலையோ - எண்பதே
கற்றுக் கரைகண்டால் கைவசமே வெண்டளை
வற்றா வளமிது வாங்கு.

இரா.கவிதா,  திண்டுக்கல்

.

பாரதியார் பாடல்கள் பற்றுடனே வாங்கினேன்
ஆரவார மாயதிலே அத்தனையும் - தேரழகே
ஈரம்ப தேரூபாய் ஈர்த்திடும் பெண்களுள்
வீரம் வருமாம் விளைந்து!

இரா.சத்தியநாராயணன், சத்தியமங்கலம்

.

இசைத்தமிழ் ஏற்றம் இயம்பிடும் நூலாம்
வசையிலா யாழ்நூலை வாங்கு - நசைந்தினிதே
முத்தமிழ் வித்தகர் முற்றுரைத்த நூல்விலை
பத்தோடு நூறுதான் பார்.

த.கி.ஷர்மிதன், (தமிழ்க்கீரன்) இலங்கை.

.

அஞ்சுக்கோ பத்துக்கோ ஆப்படும்; பூமியெலாஞ்
சஞ்சரிக்கும் நூல்முழுக்காச் சாப்பிடும் - கொஞ்சூண்டு
நாம்படிச்சா வள்ளுவந்தால் நம்வாழ்க்க நச்சுன்னே
ஆம்பலூன் போல்விரிஞ்சு போம் .

ஜாய் சத்தியா

.

நூலின் விலைகண்டு நோகாதே தம்பிநீ
ஆலின் பயன்நல்கும் 'ஆத்தி'யிது – வேலன்
விரும்பிய ஔவையின் வெல்லுஞ்சொல் ஆகும்
கரும்பின் விலைநூறு காசு.

இரா.ச.பத்மநாபன் தஞ்சாவூர்

.

கற்றவர் போற்றும் கலிங்கப் பரணியே
நற்றமிழ் நூற்களுள் நன்றென்பேன் – விற்பவர்
சொற்பமாய் நூறெனச் சொல்லிடத் தாழிசைக்குப்
பொற்புதையல் ஆமோ பெரிது!

பசுங்கிளி மணியன்

.

சோற்றுக் கணக்காம் செயமோகன். புத்தகத்தில்
காற்றில் மனத்தைக் கவர்ந்திழுப்பார் – போற்றுமிந்தப்
புத்தகத்தின் காசோ புதுநூற்றில் பாதிதான்
வைத்துப் படித்தால் வளம்…!!!

கவிஞர். சிந்தனை பாரதி

..

சங்கத் தமிழெனும் சந்த நடைநூலாம்
எங்கும் இதனழகு ஈர்த்ததென்பேன் – வங்கக்
கடலோரம் தூங்கும் கலைஞர்கை வண்ணம்
அடர்விலை இல்லை அறி….

தென்பசியார்

.

குறள்வழி இன்பம் கொடுக்கும் மகிழ்வே
அறநெறி கூட அதிலே – உறவே
விலையில்லா புத்தகம் வேண்டுமா சொல்வாய்
வலையிலே கண்ணனிடம் வாங்கு

கண்ணன் நடராசன்





.

அண்ணன் அனுராசின் அற்புத நாவலிது
வண்ணம் அருமை  வடிவமைப்பு - என்னுடைய
அங்காடி தன்னில் அரைவிலையில் வாங்கலாமே
தங்கமாய்ரூ நானூறு தா!

செல்லமுத்து பெரியசாமி

.

தமிழுணர்வை ஊட்டும் தமிழ்க்கவிதை நூலாம்
அமிழ்தப்பா வேந்தர்  அருநூல் - நிமிர்ந்தின்றே
வாங்கிடுவீர் றூறேதாம் வாய்த்தவிலை நல்லதமிழ்
ஓங்கிடும் உள்ளத்துள் ஓர்!

பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்.

.

இயற்கையின் தேவைக ளேந்திய நூலில்
உயரிய  தாக்கங்கள் உண்மை - நயமான
புத்தகம் நானூறே பெற்றிடுவீர் நன்மைதான்
எத்திக்கும் சொல்வீர் எடுத்து!

அ.வள்ளிபாபு

.

நாலடியில் நானும்தான் நற்கவிதை கோர்த்திட்டேன்
நூலதனை நெய்திட நன்றாகும் - கேளப்பா
சொற்பத் தொகையாகும் தொண்ணூறு மட்டுமே
பற்றிட வேகமாய்ப் பார்

வா.சண்முகம்

.

தக்க வகையில் தடங்காட்டும் நூலிதுவே
’அக்னிச் சிறகுகள்’ அல்லவா - திக்கெலாம்
பேசும் கலாமின் சிறப்பைப் படித்துப்பார்
காசதுவோ நூறுதான் காண்.

ஒசூர் மணிமேகலை



.

பல்லோரும் போற்றிப் பரிந்துரைத்த வேள்பாரி
சொல்லாற்றல் கூட்டும் சுவையாக்கும் - நல்லவொரு
தள்ளுபடி விற்பனையில் தற்போ திருநூலும்
அள்ளிடுவீர் ஐநூ(று) அளித்து.

மாலதி திரு

.

ஒழுக்கமே வாழ்வின் உயர்வாம் இதனை
நழுவ விடாமலே நாடு! - பழுத்தப்
பழத்தின் மதிப்பேதான் பாரீர்! உயர்வு
வழுவாக நீயுந்தான் வாங்கு !

நா.பாண்டியராசா.

.

மூன்று பகுதிமொத்தம் முன்னூறோ டைம்பதுதான்!
ஞான்றும் நலம்பயக்கும் நல்மருந்தாம் - ஊன்றுகோலாய்,
உன்வாழ்வில் உள்ளொளியாய், உன்னை உயர்த்திடும்,
நன்மூலன் மந்திரத்தை நாடு.

முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூர்.

.

முன்னூறு ரூபாய்க்கு மோகமுள் வாங்கினால்
மன்னுபுகழ் பாலகு மாரனின் - என்றென்றும்
அன்பினால் உள்ளம் அறிந்திட  உண்டாகும்
என்புருக்கும் காதலெது என்று .

சரஸ்வதி பாஸ்கரன்

.

திருமறை வாங்கிடத் தேடி யலைந்தேன்!
வருகின்ற பாதையில் வந்த -ஒருவர்
விரும்பியே தந்தார் விலைக்கு, மகிழ்ந்தேன்!
அருள்மறை நூலை அறிந்து!

கிண்ணியாசபீனா



.

ஆயிரம் நூல்கள் அணிவகுத்த போதிலும்
பாயிரமாய் வாழ்வில் பயனாகும் - தாயினும்
மிக்கவன் தந்த மதிப்புடன் போதிக்கும்
தக்க குருஆன் தமிழ்.

பக்ருதீன் இப்னு ஹம்துன்

.

தேவநேயப் பாவாணர் தீட்டிய நூலினை
ஆவலுடன் நீட்டிட அஃதமிழ்தம் - தாவலாய்
என்னுள் மகிழ்ச்சி இயம்பிய நூல்விலை
முன்னூற்று ஐம்பதே முத்து!

நெடுமுடி வேந்தன்

.

படைக்களப் பாவலர் பாங்கறி வாணர்
தடையிலாத் தண்டமிழ்ச் சால்பர் - நடைமிடுக்காம்
நல்ல 'அணிவகுப்பு' நன்னூல் விலையதோ
சொல்லும் எழுபது சூள்.

படைக்களப் பாவலர்

.

ஆழ றிவறிய ஆழிநிலை நூலொன்று
காமுறத் தாங்கிநற் காலமிது - பாழாய்நன்
வீங்குமுன்னா னூறு விலையாக வாங்கிடவே
தாங்குமிய முங்கள் தலை

பால மணி

.

அழகுதமிழ் சொல்லால் அனைவருக்கும் நீதி
வழங்கும் பழகுதமிழ் நூலாம் - பழமை
செறிவுமிகு நாலடியார் நூறுக்கு வாங்கி
அறிவு பசியை அகற்று.

வான்மதி

இன்பம் அளிக்கும் இனியது  நன்நூலே
பண்புகள் சொல்லும் பழந்தமிழ் - நன்னுரை
முற்றுமே வாழ்வில் முப்பது ரூபாயே
பற்றாய்க் கொடுத்தேன் பணிந்து

தமிழ்மணி நகுலா சிவநாதன், யேர்மனி

உத்தமர்  காந்தியின் உண்மைச் சரித்திரம்
சித்திரம் போலொரு காவியம் - முத்தனைய
சத்திய சோதனை நூலினை வாங்கியே
நித்தமும் போற்றிப் படி.

மன்மதன்,  ஒசூர்

காவியமா நாடகமா தேனமுதா தேவதையின்
ஓவியமா பூக்காடா என்சொல்வேன் - மேவிய
சந்தக் கவிதையில் கம்பனின் காதையை
சிந்தையில் வைத்துப் பயில்

மு. மதனகோபால், சென்னை

எல்லாம் தெரிஞ்சாலும் ஏதேதோ ஆனாலும்
சொல்லித் தெரியாக் கலையாம் -  வல்லவர்
கொக்கோக மாமுனிவர் நற்காம சாஸ்திரத்தை
விக்கிறேன் வாங்கிப் படி.

மலர்க்கணைமன்னன், சென்னை



# வெண்பா போட்டி (பயணம்) - 29

## போட்டியின் கால அளவு : 01 - 12 மே 2024

வணக்கம் பாவலர்களே…

.

இம்மாதம் ஒரு சுவாரஸ்யமான போட்டி…

.

இவற்றில் எது உங்கள் வாழ்க்கையை வெறுக்கச் செய்கிறது…..?

.

| | |
|---|---|
| திருமண வாழ்க்கை | குடும்பச் சூழல் |
| வெளிநாட்டு வாழ்க்கை | நீரிழிவு நோய் |
| வேலையில்லா திண்டாட்டம் | சாதி வேறுபாடு |
| அலுவலகம் | நல்லாட்சி இன்மை |
| பொருளாதாரச் சிக்கல் | ஊழல் |

.

இவைகளில் ஏதேனும் ஒன்றை தலைப்பாகக் கொண்டு ஒரே ஒரு வெண்பா மட்டுமே எழுத வேண்டும்.

இதோ எ-கா வெண்பா…..

.

வெளிநாட்டு வாழ்க்கை

.

இல்லம் பிரிந்தெங்கோ ஏழ்மை நிலைமாற்ற
சில்லறைக் காக சிதைகின்றேன் - அல்லல்
தொலையாதோ என்ற தொடர்வாழ்வில் மிச்சம்
கலையா கனவொன்றே காண். .

பொதுவான விதிகள் : -

நேரிசை வெண்பா மட்டுமே எழுதவேண்டும், முடிந்த அளவு ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம். வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

அசத்துங்கள் கவிஞர்களே….

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே… அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.

காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்…

தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்….

ஆசிரியர் தமிழ்நெஞ்சம், மற்றும் ஆசிரியர் குழு.

https://www.facebook.com/profile.php?id=100030084520602

# ஜூனியர் தேஜ் பேஜ்

## சிறுகதைத் தொகுப்புகள்

(5 பாகங்கள்)





அ.முஹம்மது நிஜாமுத்தீன்

‘ஜூனியர் தேஜ்’ என்று பரவலாக அறியப்படுகின்ற அன்பர் திரு. வரதராஜன் அவர்கள், ஓவிய ஆசிரியர் மட்டுமல்ல; மனநல ஆலோசகரும் கதாசிரியரும் ஆவார்.

ஆகவே அவருடைய கதைகளில் சமூக முக்கியமான பிரச்சனைகளும் இருக்கும். அதனுடைய தீர்வுகளும் இருக்கும்.

ஆசிரியர் அவர்களுடைய சிறுகதைகளை அவருடைய வலைப்பூவில் படித்திருக்கிறேன். நூல்களாக படித்திடும் வாய்ப்பினை மீண்டும் கிடைக்கப் பெற்றேன்.

தொழிலதிபர் சோப்ராவிடம் அந்த வயது முதிர்ந்த முதியவர் கேள்விகள் கேட்டு, எந்த ஒரு பிரச்சினையும் ஏற்படாமல் இருக்க, வழிகாட்டல் நல்லதொரு உத்தி! ( பூமி இழந்திடேல் )

இரசாயன முறையில் விவசாயம் செய்வதால் மண்ணின் இயற்கை தன்மை அழிகிறது. இயற்கை விவசாயம் செய்யும் டாக்டர் மார்த்தாண்டம் அவர்களைப் பார்த்து, சாயாவனம் ஒருவனாவது ஒலி மாசுவை குறைப்பதற்காக ஒலி பெருக்கிகளை தவிர்ப்பது நல்லதொரு ஆரம்பம். பூமி பாதுகாக்கப்பட்டால் மக்களும் நலவாழ்வு வாழ்வார்கள்! (கற்றது ஒழுகு)

சில சமயங்களில் ஜாதியை அட்ஜஸ்ட் செய்து கொண்டு போகும் கணவான்கள், சில சமயங்களில் அதை எதிர்ப்பது ஏன்? இதுதான் மகேஷுக்கு குழப்பம்!

ஆனால் தங்களுக்கு ஏற்படுகின்ற சந்தர்ப்ப, சூழ்நிலைகளால் தாங்கள் விரும்பும் முடிவை எடுக்கின்றனர் மக்கள் என்பதை அவன் பெரியவனானதும் உணர்ந்து கொள்வான். (ஜாதின்னா என்ன?)

’குழந்தை தொழிலாளர் முறையை ஒழிப்போம்! குழந்தை தொழிலாளர்களை மீட்போம்!!’ என்று வீர வசனம் பேசி சிறப்புரைகள், மாநாடுகள், போராட்டங்கள் நடத்தும் அரசியல்வாதிகளும்

# எட்டாம் வேற்றுமை

சீர்குலைந்த சமுதாயம்
பதிலிறுக்க முடியாத
கேள்வியின் வெப்பத்தில்
வற்றிய குளத்தின்
வெடிப்புகளாகின்றது.

தன்மீதிறங்கும் கணைகளை
உரத்துப் பேசி
அடக்க நினைக்கையில்
பின்வாங்கிச் செல்கிறது
நேர்மையின் இருப்பு.

விதிகளை மாற்றி மாற்றி
வினைகள் புதுப்பிக்கப்படுகின்றன
நரிகளின் பின்னிருப்பில்
மறைந்திருந்து ஏவப்படுகின்றன
மதுபான அம்புகள்.

இருண்ட மனிதர்களின்
கறை சூழ்ந்த அந்திப் பொழுது
நிலவை உடைத்து
என்மீது பொழிகிறது
குருதிப் புனல்.

மிதமான சூட்டில்
கவிதையை உறிஞ்சியபடி
வெற்றுக் கோப்பையாய்
விலகிச் செல்கிறேன்
சுதந்திர உணர்வோடு.

**கனகசபாபதி செல்வநேசன்**
அல்வாய். இலங்கை

*அதிகாரிகளும் தங்கள் வீடுகளிலேயே அதை ஊக்குவிப்பதுதான் மகா கொடுமை! இவர்களெல்லாம் 'வாய்ச் சொல்லில் வீரனடி' இரகம்தான்! (பயிற்சிப் பட்டறை)*

*இப்படியாக அனைத்து கதைகளையுமே சொல்லிக் கொண்டுச் சென்றால் அதுவே தனி புத்தகமாகிவிடும்.*

*ஆசிரியர் அவர்களின் கதைகளில் 'வளவள' என்று அதிகபட்ச இழுவையான வார்த்தைகள் இருக்காது. ஆனால் கதைக்குத் தேவையான நுணுக்கமான விவரங்களையும் அங்கெங்கே இடை இடையே அமைத்திருப்பார்; வியப்பாக இருக்கும்!*

*ஆசிரியர் அவர்களின் இந்த சிறுகதை தொகுதிகள் வாசகர்களிடம் நல்வர வேற்பை பெற வேண்டும் என வாழ்த்துவ தோடு, புதிதாக நூல்கள் பல எழுதி சிறக்க வேண்டுமாய் முன்கூட்டியே என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*விகடன் இணையதளத்தில் வெளிவந்த பிரம்மாண்டமான புதினமான 'கலியன் மதவு' என்ற புதினத்தையும் ஆசிரியர் அவர்கள் விரைவில் வெளியிட ஆவன செய்ய வேண்டும்.*

*இவ்வைந்து சிறுகதை தொகுதிகளையும் வாசகர்கள் விரும்பிப்படிப்பார்களென நம்புகிறேன்.*

*அன்பன்,*
*அ.முஹம்மது நிஜாமுத்தீன்,*
*பேங்காக்.*

*நூல்களைப் பெற, தொடர்புக்கு:*
Pustaka, Tel. *+91 7418 555 884.*

## கவிஞர் பொன்மணிதாசன் எழுதிய கவிதை ஒன்றின் திறனாய்வு.

திறனாய்வு செய்தவர் : **ஆய்வறிஞர் சங்கிலி சுப்பிரமணியன் அவர்கள்.**



கவிஞர் பொன்மணிதாசன்

ஆய்வறிஞர் சங்கிலி சுப்பிரமணியன்
*ஐயாவிற்கு நன்றியும் வாழ்த்துகளும்*
**தமிழ்நெஞ்சம்**

**அனைவருக்கும் வணக்கம்!**

*முகநூலில் தம்பி பொன்மணிதாசன் எழுதிய கவிதையொன்றினைக் கண்டேன். அடுத்த சில நிமிடங்களில் என்னுள் நடந்த ரசவாதங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்கிறேன்!*

*பாடவேண்டிய கவிதை கவிஞனைத் தேடி வரும்! படிக்க வேண்டிய கவிதையைத் தேடித் திறனாய்வாளன் பயணம் செய்வான். அத்தகைய பயணம் என்னுடையது.*

*எனக்கு வயது 79. பழந்தமிழ் உரையாசிரியர்கள் தொடங்கி உமாபதி சிவாச்சாரியர், வள்ளற் பெருமான், திரு.வி.க. அறிஞர் மு.வ. அண்ணா, கலைஞர், வ.சுப. மாணிக்கனார், அ.ச.ஞானசம்பந்தன், நா வானமாமலை, கி.வா சகந்நாதன், பாலச்சந்திரன் முதலியோ ரோடு அவர்கள் செய்த நூல்களின் வழி பழகிவருபவன்.*

*அதனால் கவிதைத் திறனாய்வு பற்றி எனக்கும் கொஞ்சம் தெரியும். தெரிந்தது போல் எழுதுவது, அதில் நான் பிழை கண்டு பதிவிட்டவுடன் “நான் இலக்கணம் கற்றவன் அல்லன்” என்று ஜகா வாங்குபவர்களை நான் அறவே வெறுக்கிறேன். இந்தக் கோழைகளின் போலி வீரம் கண்டு நான் புன்னகைக்கிறேன்.*

*இவர்களால் கவிதைக்கும் நன்மையில்லை. இவர்களுக்கும் நன்மையில்லை.*

*என்னை வெறுமனே மூன்றாம் நபர் போல எப்படிச் சித்திரிக்க முடியும்? நான் நாடறிந்த கவிஞன்!. உங்களுக்கு மட்டும் எப்படி நான் தெரியாமல் போக முடியும்? என்றெல்லாம் நடக்கின்ற வாதங்களை முகநூல் அன்பர்கள் கண்டு வந்திருக்கலாம்.*

*போகிற போக்கைப் பார்த்தால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தாலும் வியப்பில்லை.*

*ஆயிரம் பேர் அனைத்துக் கண்டங்களிலிருந்தும் ஒருவரைப் பாராட்டிய பிறகு நான் பாராட்டுவதற்கு என்ன இருக்கிறது?*

*நான் ஒரு உள்ளூர் மேளம்! நிலைய வித்வான்!*

*இந்தப் பின்புலத்தில்தான் எல்லாருக்கும் தெரிந்த ஆனால் நான் இது வரை அறியாத ஒரு கவியாளுமையைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.*

*கவிதைவழி நான் கவிஞனைக் காண முயல்கிறவன். ஒருவன் செய்து கொள்ளுகிற ஒப்பனையெல்லாம் கவிஞன் என்பதற்கு அளவுகோலாகிவிடாது.*

*திரைப்படத்துறையில் ஆயிரம் கண்ணதாசன் வரலாம்! ஆயிரம் வாலி வரலாம்! ஆயிரம் வைரமுத்து வரலாம்! ஆயிரம் பாபநாசம் சிவன் வரலாம்! ஆயிரம் ஆலங்குடி சோமு வரலாம்! ஆனால்*

*ஒரு கம்பதாசன் வரமுடியாது! ஒரு பூவை செங்குட்டுவன் வரமுடியாது! ஒரு மாயவநாதன் வரமுடியாது!*

*இது என் பார்வை!*

*இதோ ஒரு கம்பதாசன்! இதோ ஒரு பூவை செங்குட்டுவன்! இதோ ஒரு மாயவநாதன்!*

*மனைவிக்கு இலக்கணம் புடவை கட்டுவது அன்று. அவள் எல்லா இடத்திலும் மனைவியாக இருப்பது.*

*கண்ணதாசனின் மறுபதிப்பாக விளங்கும் அந்தப் பாடலை இன்று காலைதான் பார்த்தேன்.*

*அருமை! ஆழ்ந்த உணர்ச்சி! எளிய மொழி! சுய பரிசோதனை! அன்பு! அடக்கம்! ஏக்கம்! ஆதங்கம்! இன்ன பிற உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் உள்ளடக்கிய அந்தச் சில வரிகளில் என் வசம் நானில்லை.*

*கற்றேனா? தெளிந்தேனா? கவிதைநான் வடித்தேனா?*
*மற்றேதும் எழுதி மறந்து கவியென்றேனா?*
*ஒன்றேனும் கவியென ஒப்புவரோ? மாட்டாரோ?*
*இன்றும் என்கேள்வி இதயத்தில் எழுகிறது!*

*என்னை ஏன் கவிஞன் என ஒப்புக்கொள்ளவில்லை என்று வினவுவதற்கு முன்பே, தன்னைச் சோதித்துக் கொள்ளும் சத்தியத்தின் அணுகுமுறை இது. கற்று, தெளிந்து அதன் பிறகே கவிதை படைக்க வேண்டும் என்னும் கொள்கையை முன்னிறுத்தும் பாங்கு அருமையோ அருமை!*

*அடுத்தபடியாகக் "கவிதை மாதிரி எழுதிக்கொண்டு நான் கவிஞன் என்று மார்தட்டினேனா?" என்றும் வினவுகிறார். தான் எழுதுபவைகளில் கவிதைகளும் இருக்கலாம். அல்லனவும் இருக்கலாம். எனக்கு நானே நீதிபதியாகவிட முடியாது*

*என்னும் யதார்த்தம் அந்த வரிகளில் இழைகிறதல்லவா?*

*தொடர்ந்து எழுதுகிறார்.*

*நித்தம் எழுதுவதும் நேரத்தைக் கை கழுவுவதும்*
*பித்தன் செயல்தானோ? பிழையான வினைதானோ?*
*சித்தன் கட்டளையோ? சேர்ந்த விதிதானோ?*
*ஒத்தோர் சொல்லுவரோ? உரைப்பாரோ? மாட்டாரோ!*

*"கவிதையென்று நினைத்துத்தான் எழுதுகிறேன். எனக்கே அமைதியில்லை. திருப்தியில்லை. விடியாமல் போனபின்பும் நான் தொடர்ந்து எழுதுகிறேன் என்றால் நான் பித்தனா? உதயத்தைக் காண மேற்கு நொக்கி நடக்கின்றேனா? என் செயல் பிழையான செயலா? இல்லை எழுதவேண்டும் என்பது விதியின் செயலா? இந்த மாதிரி பைத்தியக்காரர்கள் இன்னும் எததனைப் பேர் இந்த உலகில் இருக்கிறார்களோ? அவர்களாவது உண்மையைச் சொல்வார்களா? இல்லை நமக்கேன் வம்பு? என்று வாய்மூடி மௌனியாய் இருந்துவிடுவார்களோ?" என்றெல்லாம் ஆதங்கப் படுகிறார்.*

*இந்த ஆதங்கத்தில் தான் கவிஞன் ஆகமுடியவில்லையே என்னும் ஏக்கமிருக்கிறதே தவிர, தன்னையே கவிஞன் என்று தானே சொலலிக் கொண்டு பிறரும் தன்னை அவ்வாறு அழைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இல்லை.*

*பல நூறு கவிதைகளை எழுதி நூலாக வெளியிட்டவர் பொன்மணிதாசன். அவரே தான் இன்னும் கவிஞன் ஆகவில்லையே என்று ஏங்குகிறார். அது எவ்வளவு கடினமான அங்கீகாரம் என்பது அவருக்குத் தெரிந்திருக்கிறது.*

*தெளிவிப்பார் உண்டெனில் தேருமென் கவிதைகளும்!*
*கேலிப்பார் காணுகையில் கேட்பார் சிரிப்பாரே?*
*கற்றொருவர் கொடுக்க கரையேறி வருவதற்கு*
*உற்றொருவர் உடன்வந்தால் உலகத்தில் நான்கவியே!*

*"தெளிவிப்பார் உண்டெனில் தேரும் என் கவிதைகளும்! என்ன ஒரு எதிர்பார்ப்பு? என்னை யாராவது அங்கீகரிக்க மாட்டார்களா? அப்படி யாராவது ஒரிருவராவது வந்தால் என் கவிதை அங்கீகரிக்கப்படும். நானும் கவிஞனாகலாம்" என்கிறார். அடுத்த நொடியே இப்படி; எண்ணுவது அறிந்தால் ஊர் சிரிக்குமோ என்று அஞ்சுகிறார். "கேலிப்பார் காணுகையில் கேட்பார் சிரிப்பாரே?" தன் தகுதி உணர்ந்த பரிபக்குவம்.*

*"உற்றொருவர் உடன்வந்தால் உலகத்தில் நான்கவியே!" பாட்டு முழுமையும் அழகிய கவிதையாக வந்திருந்தாலும் இந்த இறுதிவரி ஆக்கமும் அங்கதமும் கலந்த கலவையாக ஆகி மனத்தை நெருடச் செய்கிறது. "நான் கவிஞன் அல்ல என்பது எனக்கே தெரிகிறது. நான் கவிஞன் என நான் தெளிந்து கொள்ள வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. என்னைப் போல ஒருவன் எங்காவது கிடைத்தால் அவனும் என் கூடவே வந்தால் நானும் கவியாகலாம். அதாவது அவனைப் போல் நானும் கவிஞன். என்னைப்*

போல் அவனும் கவிஞன்... என்னைப் பாராட்ட அவனும் அவனைப் பாராட்ட நானும் போதும்"

அன்பர்களே!. ஒரு ஆற்றல் மிக்க கவிதை வல்லாளர். அனுபவமிக்கவர். புலமை செறிந்தவர்.

நான் கவிஞன் அல்ல என்று அவர் எழுதிய கவிதையே அவரை ஒரு முழுக் கவிஞராக அடையாளம் காட்டியிருக்கிறது!

சூனியத்திலிருந்தும் கவிதை பிறக்கலாம்.!

பாடுபொருள் இல்லாமலேயே புகழ் பெற்றவன் கண்ணதாசன். அவனைத் தொடர்கிறார் பொன்மணிதாசன். அதற்காகப் பாடுபொருள் வேண்டாம் என்று பொருளன்று. உள்ளத்து உள்ளது கவிதை. ஏக்கத்தின் வெளிப்பாடு கவிதை. சத்தியத்தின் வெளிப்பாடு கவிதை. முனைப்பின் முனகல் அல்ல கவிதை.

வெறுங்குடங்கள் கலகலக்கும் உலகில் தழும்பாத நிறைகுடமாய்க் கவிஞர் பொன்மணிதாசன்!

இப்போது பாடல்களை முழுமையாகத் தருகிறேன்!. சில நிமிடங்கள் உங்கள் இதயத்தைக் கவிதையிடம் காட்டுங்கள். பெவிக்கால் இல்லாமலேயே ஒட்டிக் கொள்ளும்.

கற்றேனா? தெளிந்தேனா? கவிதைநான் வடித்தேனா?
மற்றேதும் எழுதி மறந்து கவியென்றேனா?
ஒன்றேனும் கவியென ஒப்புவரோ? மாட்டாரோ?
இன்றும் என்கேள்வி இதயத்தில் எழுகிறது!

நித்தம் எழுதுவதும் நேரத்தைக் கை கழுவுவதும்
பித்தன் செயல்தானோ? பிழையான வினைதானோ?
சித்தன் கட்டளையோ? சேர்ந்த விதிதானோ?
ஒத்தோர் சொல்லுவரோ? உரைப்பாரோ மாட்டாரோ!

தெளிவிப்பார் உண்டெனில் தேருமென் கவிதைகளும்!
கேலிப்பார் காணுகையில் கேட்பார் சிரிப்பாரே!
கற்றொருவர் கொடுக்க கரையேறி வருவதற்கு
உற்றொருவர் உடன்வந்தால் உலகத்தில் நான்கவியே!

கவிதைப் பிணைப்பு என்பது இதுதான். ராகுல் காந்தி தன் சகோதரன் ஸ்டாலினுக்குக் கடைவீதியில் திறந்திருந்த கடையில் இனிப்பு வாங்கியதைப் போல இந்த அண்ணன் சுப்பிரமணியன் தம்பி பொன்மணிதாசனுக்கு இந்த வாழ்த்தினை இனிப்பாகத் தருகிறேன்.

*நினைத்தால் எழுதுவது கவிதையன்று. நெஞ்சம் கனத்தால் வருவது கவிதை!*

*பாரத்ததையெல்லாம் பாராட்டுவது திறனாய்வன்று! மனத்தில் படிந்ததைத் துடைக்க முடியாமல் பாரத்தை இறக்கி வைப்பதுதான் திறனாய்வு.*

*கவிதை படைக்க மூளை தேவையில்லை! இதயம் வேண்டும்!*

*திறனாய்வுக்கோ இரண்டும் வேண்டும்!*

*இதயத்தினால் படைக்கப்படும் கவிதையை இதயத்தினால்தான் அடையவேண்டும். அளப்பது அறிவினால் என்பது பிறகு.*

*புடவை பிடித்த பிறகுதானே விலைபற்றிப் பேச முடியும்?*

*தொலைந்து போன இதயத்தைக் கண்டறியும் முயற்சியில் அதன் காரணத்தைக் கண்டறிவதுதான் திறனாய்வு.*

*"நான் எல்லாரையும் அண்ணன் என்று சொல்வதில்லை" ராகுல்!*

*"நான் எல்லாவற்றையும் கவிதை என்று ஒத்துக் கொள்வதில்லை" சுப்பிரமணியன்*

*பொன்மணி தாசனுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்!*



*வாருங்கள்*
*கூடித் தமிழ் வளர்ப்போம்!*
*மாறா அன்புடன்*

*ச.சுப்பிரமணியன்.*
*திருச்சி*

---

## தமிழ்நெஞ்சம் ஆசிரியர்



கண்ணாடிப் பார்வைக்குள்
கண்ணியமாய்
ஓர்சிந்தனை
மென்னிதழின் விழிம்பிலே
மெல்லிய அசைவுகள்
சொல்ல நினைப்பதை
செயலாக்கிட முனைந்திடும் வள்ளல்
தமிழை நெஞ்சத்துக் கனவாக
மனதிற்குள் கீறும்
மாண்பான ஓவியர்
உருவு கண்டு
உளம் எழுந்த
தூரிகையின்
வார்ப்புகள்
சொல்லிடத் துடித்த
வண்ணக் கோலங்கள்

**தமிழ்மணி நகுலா சிவநாதன்**

# சிறுவர் சங்கமம்



## அன்புத்தமிழ்

எட்டி நான் நின்றாலும்
கட்டி அணைத்துக்
கொஞ்சும் மொழி பேசி
விஞ்சும் கனிவுமொழி
அம்மாவின் அன்புத்தமிழ் மொழி

தட்டி நான் பேசினாலும்
தட்டிக் கொடுத்து
மலையென வரும் தடைகளை
பிழையின்றித் தாண்ட
கற்றுக் கொடுக்கும் ஆசான் மொழி
அப்பாவின் அன்புத்தமிழ் மொழி

பாதை மாறிப் போகாது
கோதை இவளை பாங்காய்
ஏற்றி விடும் ஏணியாய்
வழிநடத்தும் மொழி
ஆசானின் அன்புத்தமிழ் மொழி

மொழிகளில் உயர்வாம்
அன்புத் தமிழ்மொழி
அமிழ்தைச் சுவைத்து
உணர்ந்து உயிர்த்து இன்புற்று வாழ்ந்திடுவோம்



**சு.பிரவந்திகா**
பட்டாபிராம், சென்னை

# சிறிய தவறும் பெரிய துன்பமும்

சிங்காளப்பபட்டி என்னும் ஒரு சிறிய கிராமத்தில் இராஜேஷ் என்கிற 28 வயதான இளைஞன் தன் மனைவியுடனும், ஒரு வயதான தன் குழந்தையுடனும் ஒரு சிறிய வீட்டில் வாழ்ந்து வந்தான். அவன் வசித்துக் கொண்டிருந்த வீட்டில் இருந்த ஜன்னலை மூடுவதற்கு எந்த ஒரு கதவும் இல்லை. அதனால் இராஜேஷின் மனைவியான வசந்தி,' நமது வீட்டில் உள்ள ஜன்னலுக்கு எந்த ஒரு கதவும் இல்லை என்பதினால் கொசுக்கள், பூச்சிகள், பாம்புகள் போன்ற உயிரினங்கள் வீட்டிற்குள் வருகின்றன. அதனால் எனக்கு மிகவும் அச்சமாக இருக்கிறது. எனவே நீங்கள் ஒரு கொசு வலை வாங்கி வந்து அந்த ஜன்னலில் அடியுங்கள்' என்றாள். அவள் சொன்னதைக் கேட்டு மிகவும் வருத்தமடைந்த இராஜேஷ் உடனடியாக தன் ஊருக்கு அருகில் இருந்த நகரத்திற்குச் சென்று , அங்கிருந்த கடையில் கிடைத்த கொசு வலை ஒன்றையும் அதை சுவற்றில் அடிக்க சில ஆணிகளையும் வாங்கிக்கொண்டு, அவன் ஊருக்கு பேருந்தில் ஏறிக் கிளம்பினான்.

அவனது ஊரை அடைந்ததும் அவன் வீட்டிற்குச் செல்ல வயல் வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தான் அப்பொழுது அவன் கையில் எடுத்துக் கொண்டு வந்த ஆணிகளுள் ஒன்று அவன் கையில் இருந்து நழுவி கீழே விழுந்தது அதை அவன் கவனித்தும் அந்த ஆணியை எடுக்காமல் சென்றான். சில அடிகள் வைத்தவுடன் அவன் காலில் முள் ஒன்று குத்தியது, அவன் அவனது காலை தூக்கிப் பார்த்து, அந்த முள்ளை எடுத்து அவனது பின்னே தூக்கி எறிந்தான். அந்த முள் அவன் கையில் இருந்து விழுந்த ஆணி அருகில் சென்று விழுந்தது.

சரியாக இரண்டு நாட்கள் கழித்து அவன் அவனது வேலை காரணமாக



நகரத்திற்கு சென்று விட்டு மதியம் போல அவன் வீட்டிற்கு அதே வயல் வழியாக வந்துகொண்டு இருந்தான். அந்த இரண்டு நாட்களும் அந்த பாதையில் யாரும் செல் லவில்லை என்பதினால் அவன் தூக்கி எறிந்த முள்ளும் ஆணியும் அங்கேயே தான் இருந்தது.

வெயிலின் காரணமாக அவன் அந்த பாதையில் இருந்த ஒரு மர நிழலில் ஓய்வு எடுப்பதற்காக சிறிது நேரம் உறங்கினான். அப்பொழுது அவன் கல்லால் அடித்த பாம்பு ஒன்று அவன் காலை கொத்தியது. அவனால் உறக்கத்தில் அந்த வலியை உணர முடியவில்லை. அந்த பாம்பு அங்கிருந்து சென்றவுடன் சிறிது நேரம் கழித்து அவன் உறக்கத்திலிருந்து எழுந்தான்.

அந்த மர நிழலில் இருந்து பத்து அடி முன்பு தான் அன்று அவன் தூக்கி எறிந்த முள்ளும் ஆணியும் இருந்தன. சிறிது அடி எடுத்து வைத்த உடன் அவன் அவனுடைய காலில் ஏற்பட்ட வலியை உணர்ந்தான். இது எதனால் வந்தது என அவனைச் சுற்றிப் பார்த்தான் அப்பொழுது அவன் பின்னே கிடந்த முல்லையும் ஆணியையும் பார்த்து அவன் காலையும் பார்த்தான். அவன் காலில் இருந்த அடையாளத்தை பார்த்ததும் இந்த முள்ளும் ஆணியும் தான் எனது காலை குத்தி இருக்க வேண்டும் என்று நினைத்து வீட்டிற்குச் சென்றான்.

அவன் வீட்டிற்கு சென்றவுடன் கட்டிலில் படுத்து உறங்கினான். ஆப்பொழுது அவனது மனைவி அவன் காலைப் பார்த்தாள். ‘உங்களது காலில் என்ன ஆனது‘ என்று கேட்டாள், அதற்குஇ ராஜேஷ்,‘என் காலில் ஆணி ஒன்று குத்தி விட்டது‘ என்றான். பதறிப்போன வசந்தி, ‘வாருங்கள் மருத்துவமனைக்குச் சென்று, பாதுகாப்பு ஊசி ஒன்றை போட்டுக் கொள்ளலாம்‘ என்றாள்.

அதன் பிறகு இருவரும் சேர்ந்து மருத்துவமனைக்குச் சென்றனர். அந்த மருத்துவமனையில் இருந்த மருத்துவரிடம் இராஜேஷ்,‘என் காலில் ஆணி ஒன்று குத்தி விட்டது’ என்றான். அந்த மருத்துவர் ஊராஜேஷின் காலை கூட பார்க்காமல் ஆணி குத்தியதற்கான பாதுகாப்பு ஊசியை போட்டு விட்டார். தவறான ஊசி போட்டதனால் இராஜேஷ் அவருடைய வீட்டிற்கு சென்றவுடன் வாந்தி, மயக்கம் ஆகிய தொந்தரவுகள் ஏற்பட்டன. எனவே அவர்கள் இருவரும் சேர்ந்து மீண்டும் மருத்துவமனைக்குச் சென்றனர். ம ருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயே இராஜேஷ் உயிரிழந்தார்.

அதன் பிறகு அவனுடைய உடலை ம ருத்துவமனைக்கு அனுப்பியதும், அவரை பாம்பு கடித்தது தெரிய வந்தது. இது தெரிந்ததும் இராஜேஷின் மனைவி தவறான ஊசி போட்டதற்காக அந்த மருத்துவ மனையின் மீது புகார் ஒன்றை அளித்தார்.

போலீசும் அந்த மருத்துவமனையை விசாரித்து அந்த மருத்துவமனைக்கு சீல் வைத்தனர். அதன் மூலம் அந்த மருத்துவம னையில் வேலை செய்து கொண்டிருந்த மருத்துவர்களுக்கு வேலை போய்விட்டது.

இங்கு இராஜேஷ் செய்த ஒரு சிறிய தவறால் அவனது உயிர் இழந்தது மட்டு மின்றி அந்த மருத்துவமனையில் வேலை செய்து கொண்டு இருந்த மருத்து வர்களுக்கும் வேலை போய் விட்டது.

**ஹ.சாய் பிரசாத்**






**அன்புச் செல்வி. சுப்புராஜூ**
பட்டாபிராம், சென்னை


*ஆராரோ...ராரிராரோ...ராரோ*
*ஆராரோ.... ராரிராரோ... ராரோ*

*தங்கமகன் பெற்றவரோ*
*தரணியாள பிறந்தவரோ*
*பொன்மகள் பெற்றவரோ*
*புவியாளப் பிறந்தவரோ*
*(ஆரராராரோ)*

*செல்லமே, நீ பிறந்த சேதி கேட்டு*
*வானம் இடித்தது ஐயா*
*வான்மழை பொழிந்தது ஐயா*
*பூமி குளுந்தது ஐயா*
*பூலோகம் மகிழ்ந்தது ஐயா*
*(ஆரராராரோ ....)*

*சூரியன் உதித்தது ஐயா*
*சூர்யகாந்தி பூத்தது ஐயா*
*அம்புலி உதித்தது ஐயா*
*அத்தி பூத்தது ஐயா ( ஆரராராரோ....*

*மன்னவன் நீ பிறந்த சேதி கேட்டு...*
*முரசு ஒலித்தது ஐயா*
*போந்தை பூத்தது ஐயா*
*சங்கு முழங்கியது ஐயா*
*வேம்பு பூத்தது ஐயா ( ஆராரோ*

*மாங்குயில் கூவியது ஐயா*
*கொன்றை பூத்தது ஐயா*
*தோகைமயில் ஆடியது ஐயா*
*வாகை பூத்தது ஐயா ( ஆராரோ)*

# இரக்கத்தின் இயல்பு




**ம.லவன்**
சென்னை


பிறர் துயர் கண்டு
மனம் இறங்கி
மன்னிப்பு வேண்டி
இரக்க குணத்துடன் இலகுவாக
ஈகை குணத்துடன் இனிமையாக
மனிதநேயத்துடன் மாமன்னனாக
செய்பவனது அருள்
செம்மையாக திகழும்
ஒளிமயமாக ஒளிரும்
நன்மை புகுத்தி நாடாளும்
தன்மையே தன்னிகராக
உள்ளத்தில் உவகையாக
உண்மையே உருவாக
இருப்பவனின் இயல்பு
கண்ணோட்டத்தின் கண்ணாக
நலம்புரியும் ! நன்மை தரும் !!

# சோம்பலை விலக்குதல்

சோர்வை சோர்வடையை வைத்து
சோம்பலை முறியடித்து
சுறுசுறுப்பின் சிகரமாய் திகழ்ந்து
இதை உன் நெஞ்சில் நிறுத்து
முயற்சியை முன்வைத்து
கண்ணியத்துடன் இருந்த
கடமையைச் செய்து
குடியை நல்வழியில் நடத்து
உலகையே வியக்க வைத்து
பொறுப்பாய் திகைத்து
குடும்பத்துடன் மனமகிழ்ந்து
உறக்கத்தை உறங்க வைத்து
காலத்தை சரியாக பயன்படுத்து
அடிமைத்தனத்தை அழித்து
சோம்பலிலிருந்து விடுபட்டு செயல்புரிந்து
இதுவே இக்கவியின் கூற்று !




**ம.குசன்**
சென்னை



# மாமரம்

பா. இந்துமதி

மாங்காட்டூர் இயற்கை வளம் சூழ்ந்த அழகிய கிராமம். இராமுவின் வீடு மலை அடிவாரத்தில் வயல்களுக்கு நடுவில் அமைந்திருந்தது. வீட்டைச் சுற்றி மாமரம், வேப்பமரம், தென்னை மரம், பனைமரம் என சிறிய வனமாக காட்சியளித்தது. சிறிய கூரை வீடாக இருந்தாலும் மிகவும் நேர்த்தியாக அவரது மனைவி இலட்சுமி வைத்துக் கொண்டிருந்தார்.

மகன் இராஜாவிற்கு வயது 12, மகள் அமுதாவிற்கு வயது 10 இருவரும் மாலையில் பள்ளியில் இருந்து வந்தும் அம்மாவிற்கு உதவியாக வீட்டு வேலைகளில் ஈடுபட்டு வந்தனர். தோட்டத்தை பராமரிப்பது, தண்ணீர் ஊற்றுவது என அனைத்து வேலைகளையும் இருவரும் அழகாக செய்து வந்தனர். மாலையில் தோட்டத்தைச் சுற்றி சுத்தம் செய்து மரங்கள், செடி கொடிகளுடன் பேசுவது இருவருக்கும் மிகவும் பிடித்தமான விசயம். இருவரும் வீட்டின் அருகே இருந்த மாமரத்தை மிகவும் நேசித்து வந்தனர். அது அவர்கள் அம்மா திருமணமாகி வந்த புதிதில் நட்டு வைத்த மரம். நெடிது உயர்ந்தது. இன்னும் காய் காய்க்க ஆரம்பிக்கவில்லை. எனினும் இருவருக்கும் அதன் மேல் அலாதி பிரியம்.

ஒரு நாள் மாலை வயலில் இருந்து இராமு திரும்பி வந்து கொண்டிருந்தார். பிள்ளைகள் இருவரும் சந்தோசமாக அப்பாவிடம் சென்றனர். அவர் முகம் வாடி இருப்பதைக் கண்டு, ‘என்னப்பா ஆச்சு’ என்று கேட்டார்கள். ‘ஒன்றும் இல்லை கொஞ்சம் அசதியாக இருக்கிறது’ என்று உள்ளே சென்றார். பிள்ளைகள் இருவரும் செடி, கொடிகளுக்கு நீர் பாய்ச்சி விளையாடிக் கொண்டிருந்தனர்.

பிள்ளைகள் தொலைவில் இருப்பதைக் கண்ட இராமு மெதுவாக மனைவி இலட்சுமியிடம் கூறலானார், ‘இந்த முறை வைத்த பயிரின் விளைச்சல் சரியாக இல்லை. வாங்கிய கடன் அடைக்க வழி தெரியவில்லை. கடன் கொடுத்தவங்க கடனுக்குப் பதிலாக நம்ம வீட்டுல உள்ள மாமரத்தை வெட்டி எடுத்துட்டு போகிறேன் என்கிறாங்க. வேரை விட்டுட்டு மரத்தை மட்டும் வெட்டுறேன் என்கிறார்கள். திருப்பி முளைச்சு வளர்ந்து விடும். எங்களுக்கு

தேவைப்படும் பலகைக்கு உன் மரம் சரியாக இருக்கும். உன்னால இப்ப கடன் தொகையான இருபது ஆயிரம் கொடுக்க முடியாது. கடனுக்கு பதில் உன் மரத்தைக் கொடு. ஒரு மரத்துக்கு பத்தாயிரம் என நீ கொடுக்க வேண்டிய கடனைக் கழித்துக் கொள்கிறோம் என்கிறார்கள்' என்று வருத்ததுடன் சொன்னார் அப்பா. அதைக் கேட்ட இலட்சுமியும் அந்தப் பக்கம் வந்த பிள்ளைகளும் மிகவும் வருத்தமாக இருந்தாங்க.

வாசலில பிள்ளைகளைப் பார்த்த லட்சுமி சுதாரிச்சு, 'வாங்க, என்னடா சோகமா இருக்கீங்க' எனக் கேட்டார்கள். 'அம்மா மாமரத்தை வெட்ட போறாங்களாமா? இப்பதான் ரெண்டு மரத்துலயும் கொஞ்சம் கொஞ்சமா பூ வர ஆரம்பிச்சிருக்கு', என்றான் ராஜா. 'மரத்தை வெட்ட வேண்டாம்மா. இந்த மரத்தை நாம எவ்வளவு சிரமப்பட்டு வளர்த்தோம். தினமும் தண்ணி ஊத்தி இதுக்கு எவ்வளவு பார்த்துப் பார்த்து செய்து இருக்கோம். வெட்டுறதுன்னா அவர்கள் ஒரே நாளில் வெட்டிவிட்டு போயிடுவாங்க திரும்ப இது வளர்வதற்கு, பத்து வருசம் மேலாகும்' அப்படின்னு சோகமா சொன்னான் ராஜா. ஆமாம் என தலையாட்டினாள் அமுதா.

இராமுவும் இலட்சுமியும், ஆச்சரியமாக, 'என்ன மாமரத்துல பூ வந்திருக்கா... வா... வா போய் பாக்கலாம்' என இராமு இலட்சுமியை அழைத்துக் கொண்டு மாமரம் அருகே சென்று பார்த்தார். மரத்தில் சிறு தளிர்கள் போல் பூக்கள் வர ஆரம்பித்திருந்தது. அதைப் பார்த்தும் மிகவும் சந்தோசம் அடைந்தார்கள். பொதுவாக மரம் பூத்து இருந்தால் வெட்ட மாட்டாங்க. இதை அவங்க கிட்ட சொல்லிக் கொஞ்சம் காலம் அவகாசம் கேட்டுப் பார்க்கிறேன். அதற்குள் கடனுக்கு பதில் வேற என்ன பண்ண முடியும் என்று பார்க்கிறேன்' என சொன்னார் இராமு.

ஒரு மாசம் காலம் ஆனது. மரம் நிறைய பிஞ்சு விட்டு இருந்தது. நிறைய பிஞ்சு காய்கள் கொட்ட ஆரம்பித்தது. இதை பிள்ளைகள் சேகரித்து அம்மாவிடம் கொடுத்தனர். லட்சுமி அதில் வடு மாங்காய் ஊறுகாய் செய்திருந்தார். காய் வளர்ந்து முதல் பழம் பழுக்கவும் அதை குலதெய்வ கோயிலுக்கு கொண்டு போய் வைத்துவிட்டு வரலாம் என பக்கத்து ஊரிலிருந்து குலதெய்வ கோவிலுக்குச் சென்றனர். அத்துடன் இலட்சமி செய்த வடு மாங்காய் ஊறுகாய், மாங்காய் ஊறுகாயும் எடுத்துச் சென்றனர். அன்று குலதெய்வ கோயிலுக்கு பட்டினத்தில் வசிக்கும் அவரது தூரத்து அண்ணன் சுரேஷ் குடும்பத்துடன் வந்திருந்தார். எல்லோரும் சந்தோசமாக சாமி கும்பிட்டு பேசி மகிழ்ந்தனர். மதிய உணவு ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டனர்.

இலட்சுமி செய்த ஊறுகாய் எல்லாருக்கும் பிடித்து போக, 'இராமு அண்ணா, விவசாயம் சரி இல்லைனு சொன்னீங்க. நீங்க ஏன் முழு நேரத் தொழிலாக ஊறுகாய் தயாரிப்பு செய்யக்கூடாது' என சுரேஷின் மனைவி உமா கேட்டார். 'செய்யலாம் தங்கச்சி ஆனால், அதை எப்படி கடைக்குட சேர்க்கறதுன்னு தெரியல' என இராமு சொன்னார். 'நீங்கள் உற்பத்தி பண்ணி தரும் ஊறுகாய் எல்லாத்தையும் நான் வாங்கிக்கிறேன். வாங்கியதை ஆன்லைன்ல வியாபாரம் பண்றேன். வரும் இலாபத்துல நாம் பங்கு பிரிச்சு எடுத்துக்கலாம்'. என்றார் சுரேஷ்.

'மரத்தை வெட்டி இருந்தால் கடன் மட்டும் தான் அடைஞ்சிருக்கும் பிள்ளைங்க பேசசை கேட்டு வெட்டாததுனால இப்போது நமக்கு வாழ்வதற்கு புது வழி கிடைச்சிருக்கு'. என்றாள் இலட்சுமி புது நம்பிக்கையுடன் புதிய விடியல் நோக்கியவாறு அனைவரும் வீடு திரும்பினர்.

# முயற்சி

முயற்சியே முதல் படி
முயற்சி செய்யாமல்
வெற்றியை எதிர் பார்க்காதே
விடியும் என்று நம்பி
உறங்கும் போது
முயற்சி செய்தால்
வெற்றி என்ற கனியை
அடையலாம் என
நம்ப வேண்டும்
கரை கடக்க
அலை முயன்றாலும்
கடல் விடுவதில்லை
இருந்தாலும் முயல்வதை
அலை விடுவதில்லை.....

**க. சாய்துர்கா**



# விடுகதைகள்

0



எழிலி (எ) ச.ஞா.எழிலரசி
உஆம் வகுப்பு
தமிழ் வழி ஊராட்சி ஒன்றிய
தொடக்கப் பள்ளி, கடம்பத்தூர்.,
திருவள்ளூர் மாவட்டம்

*1. **உதற முடியாத சேலை; உடுத்த முடியாத சேலை?***

*02. **உச்சி வெயில் நெடுஞ்சாலையில் விண்மீன்கள்?***

**விடைகள்**
*01. வானம்*
*02. கண்ணாடித் துண்டுகள்*



தி. ஆதன்யா





மு.அ. நந்திகா பத்மினி
வயது - 09
எம்.ஏ. வித்யாஷ்ரம்









பினெகாஸ். ஜா
மணப்பாறை

# ஆண்டு விழா



**ஜீ.மைத்ரேயி**
**வந்தவாசி**

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி தாலுகாவில் அமைந்துள்ள தொடக்கப்பள்ளியில் மாதவன் படித்து வந்தான். அவனும் தங்கையும் தினமும் நடந்துதான் பள்ளிக்குப் போவார்கள்.

ஆண்டு விழாவிற்கு ஒரு வாரத்திற்கு முன்பே இருந்து நாடகம் நடித்து ஒத்திகை பார்த்தார்கள். ஆகையால் நேரம் கடந்து தான் மாதவனும் அவனது தங்கை தீபாவும் வீட்டிற்கு வந்தார்கள்.

அம்மா விஜயா குழந்தைகள் வருவதற்குள் தின்பண்டம் ஏதாவது செய்ய வேண்டுமென தனது விவசாய வேலையில் இருந்து சீக்கிரம் வந்தார்கள். அவர்களின் தந்தை குமாரும் ஒரு விவசாயி, அவர்களுக்குத் தெரியாத விவசாய வேலையே இல்லை.

விஜயா வந்து குழந்தைகள் வருவதற்கு முன் கேழ்வரகு பூரி செய்து கொண்டு இருந்தார். தீபாவும் மாதவனும் வீட்டிற்கு வந்து உடைமாற்றி, முகம், கை, கால்கள் சுத்தம் செய்து சாப்பிட வந்தார்கள். இருவரும் போட்டி போட்டுக்கொண்டு பள்ளியில் நடந்ததை கூறிக்கொண்டு இருந்தார்கள். குமார் தெருமுனையில் வருவதை மாட்டு வண்டியின் சத்தம் கேட்டு அப்பா வந்துவிட்டார் என கூறிக் கொண்டே தீபா வெளியே போனாள்.

அப்பாவிடம் பள்ளியில் நடக்க இருக்கும் ஆண்டு விழா பற்றியும் அதில் அண்ணன் நாடகத்தில் விவசாயியாக நடிப்பதை பற்றியும் கூறிக் கொண்டே வந்தாள் தீபா. அப்பாவிடம் மாதவன் எனக்கு ஒரு ஏர் கலப்பை சின்னதாக வேண்டும் என கேட்டான். சரி, சரி அடுத்த வெள்ளிக்கிழமை தானே ஆண்டு விழா அதற்குள் செய்து தருகிறேன் என்று கூறினார் அப்பா. அளவற்ற மகிழ்ச்சியில் வகுப்பறையில் மாதவன் விவசாயத்தைப் பற்றிக் கூறிக் கொண்டே இருந்தான்.

ஆவலுடன் எதிர்பார்த்த ஆண்டு விழா நாள் வந்தது. மாதவனுக்கு கொஞ்சம் பயமாக இருந்தது. என்னால் முடியுமா? என தங்கையிடம் கேட்டுக் கொண்டே இருந்தான்.

தீபா, அண்ணா உன்னால் முடியும் எனக் கூறிக்கொண்டே இருந்தாள் . மாதவனுக்கு தங்கைதான் தீபா. ஆனால் பேசும்போது, செய்யும் செயலும் தீபா அக்கா போல ம ாதவனுக்கு அறிவுரை கூறுவாள்.

அன்றும் அப்படித்தான் ஆயிற்று தீபாத அண்ணா பயப்படாதே, நம் சிறுவயதில் இருந்து வீட்டில் தாத்தாவும், அப்பாவும் விவசாயம் செய்து வருகிறார்கள். நீயும், நானும் வீட்டிலிருந்ததை விட வயலில் இருந்ததே அதிகம்.

ஒரு செடி விதை போட்டு, அது முளைத்து, பூப் பூத்து, காய் காய்த்து, விலைக்குச் சந்தைக்குச் செல்லும் வரை நமக்குத் தெரியும். அதில் ஒரு விதை-யைப் பற்றியும் சொல். அதுதான் உன் நாடகத்தில் முதன்மை பெறும். எனக் கூறி மேடை ஏற்றி விட்டாள்.


அதுபோலவே மாதவனும் சிறந்த முறையில் தர்பூசணியை விதைத்தது முதல் காய் காய்த்துப் பழமாகிச் சுவைப்பது வரை தெளிவாக நடித்தான்.

அனைவரும் பாராட்டினார்கள்.



**அனன்யா**





# தஞ்சைத் தமிழ்மன்றம் வாழியவே



பூந்தமிழ்க் கட்ட மைத்துப்
புகழ்கவி கூட்ட மைத்து
மாக்களால் உருவெ டுத்த
மன்றமே வாழ்க வாழ்க
தேக்கமே இல்லா வண்ணம்
திருவிழா ஆண்டும் ஆண்டும்
பாக்களால் நிறைக்க வைத்தப்
பைந்தமிழ் வாழ்க வாழ்க

.

சொட்டிடும் மதுநேர் நூல்கள்
சுரந்திடும் கவிஞர் சிந்தை
கொட்டிடும் மேடை தன்னில்
குவிந்திடும் பாராட் டெல்வாம்
அட்டியை இட்ட டுக்க
அடுத்ததோர்க் கண்டம் தன்னைத்
தொட்டிடும் வகையில் கூட்டம்
தொடர்ந்துமே வாழ்க வாழ்க

.

வாழ்த்தென தமிழ்நெஞ் சத்தின்
வார்த்தைகள் பணிந்து ரைத்து
ஆழ்மனம் தன்னில் உங்கள்
அன்பினை நிறைத்து வைத்து
ஏழ்பிறப் பெங்கும் பார்த்தால்
இஃதென நிகழ்வே இல்லை
சூழ்ந்திடும் நட்பின் கூட்டம்
சுகம்பெற வாழ்த்து கின்றேன்

அன்புடன்
**தமிழ்நெஞ்சம் அமின்**
**பிரான்ஸ்**



MUTUR JMI
PUBLICATION
Offset Printing & Photocopy , Print Services
Island Wide Free Delivery Available
Book Binding | Teachers Guide | Past Papers | Certificate | Assignment | Syllabus Notes & Books | Tution Class Tutes | Offset Work | Photo Printing | Album Printing | Advertisement & Leaflet |
FREE DELIVERY
MUTUR
MINIMUM QUANTITY
100
40% OFF
Book Publication & Printing Center
Off-Set Printing
BOOK BINDING
PRINTING
Offset Printing
• Four Color to One Color
• 70 - 250 GSM Papers
• A5, A4, A3, Offset Printing
• Photocopy & Duplo
• Typing & Layouts
• Cover Design
• Visiting Card
Book Binding
• Perfect & Hard Binding
• Book Publication
• Glossy & Mett Lamination
• 50 - 120 Gsm Papers
• Magazine, Book, Project
• Publications Sponsorship
• Instalment Payment Available
Color Printing
• Four Color (Inject & Laser)
• 70 - 300 GSM Board & Papers
• A5, A4, A3, B5, Color Printing
• Certificate & Photos
• Layouts & Designing
• Visiting Cards, Invitation and All Types of Wedding Cards
• Art Paper, Photo Board, Sticker, Ivory Board, and Etc
Our Office
Bazar Mosque Road
Mutur - 04, 31200
Trincomalee, Sri Lanka
Mutur JMI
Contact Now
077 1020030
0262238593
More Information
www.mutur-jmi.com
muturjmi@gmail.com
https://g.co/kgs/wBo6ob

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
tamilnenjam.com
மே 2024

## விரும்பாத திருப்பங்கள்

நேரானச் சாலைக்குத் திருப்பங்கள் வளைவினால்!
நேர்ந்திடும் யாவிலும் திருப்பங்கள் விளைவினால்!
விரும்பாதத் திருப்பங்கள் சாலைகளில் குழியினால்!
விரும்பினாலே திருப்பங்கள் நிகழாது விதியினால்!

வருந்தாது முயற்சித்தால் வாழ்விலே வசந்தங்கள்!
திருந்தாதச் சோம்பலினால் விரும்பாதத் திருப்பங்கள்!
கரும்பாக வாய்ப்புகள் காலங்கள் அளிப்பதுண்டு!
மருந்தாக ஒதுக்கிடின் மறைந்திடும் வழியங்கு?

ஒருபோதும் வழுவாது ஒவ்வாததை விலக்கு!
வருங்காலத்தை அறமே வளமாக்கும் விளக்கு!
பருந்தாகக் கவனமுடன் பண்பாட்டைப் பழக்கு!
விருதாவாகப் போகாது! வந்திடுமோ வழக்கு?

விழியாகக் கருதியே வினையாக்கி உயரும்
வழியிதனை அறிந்தாலே வாழ்வதுவோ எளிது!
பாரெங்கும் வணங்கிடுவார் பகலவனாய்த் தொழுது!
யாவருக்கும் தர்மமே வாழ்வியலில் பெரிது!

**கவிஞர் மாலதி இராமலிங்கம்**
புதுச்சேரி.